# திருச்செந்துறை
# கற்றளிப் பெருமானடிகள் கோயில்



ஆசிரியர்
இரா. கஸ்தூரி

பதிப்பாசிரியர்
தி.ஸ்ரீ. ஸ்ரீதர் இ.ஆ.ப.
சிறப்பு ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008.
2005

# திருச்செந்துறை

## கற்றளிப் பெருமானடிகள் கோயில்

# திருச்செந்துறை
# கற்றளிப் பெருமானடிகள் கோயில்

ஆசிரியர்
**இரா. கஸ்தூரி**

பதிப்பாசிரியர்
**தி.ஸ்ரீ. ஸ்ரீதர் இ.ஆ.ப.**
சிறப்பு ஆணையர்

வெளியீடு
தமிழ்நாடு அரசு
***தொல்லியல் துறை***
சென்னை – 600 008.

2005

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | **THIRUCH CHENDURAI - KARRALIP PERUMANADIGAL KOYIL** |
| Author | : | R. Kasturi |
| Copyright | : | T.N. State Dept. of Archaeology |
| Subject | : | Epigraphy & Architecture |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No. & Year | : | 172 & 2005 |
| Type point | : | 10 point |
| No. of Pages | : | viii + 124 |
| Paper Used | : | 80 GSM Maplitho |
| **Price** | : | **Rs. 36/-** |
| Printed at | : | **TAMCOS**<br>Royapettah,<br>Chennai - 600 014. |
| Publisher | : | Special Commissioner of Archaeology<br>T.N. State of Dept. of Archaeology,<br>Chennai - 600 008. |

# பதிப்புரை

கல்வியிற் சிறந்தது தமிழ்நாடு.
கலைகளை வளர்த்தது தமிழ்நாடு.
வளர்த்த கலைகள் ஓங்கி உயர்ந்து அண்டை நாட்டவரையும்
கண்டு வியக்க வைப்பதும் தமிழ்நாடு.

காணும் திசையெல்லாம் கோயில்கள், கலைகள்.
கால் பதிக்குமிடமெல்லாம் கல்வெட்டுகள், கலைப்பொருட்கள்.
இவை கூறுவதெல்லாம் தமிழ்நாட்டு வரலாறுகள்,
பண்டைத் தமிழனின் கல்வியறிவும் அறிவியற் புலனும்,
பண்பாட்டு உணர்வும் அவன் பண்பட்டிருந்த விதமும்,
சமயம், தத்துவஞானம், மொழி, இலக்கியம், இலக்கணம்,
நிர்வாகம், ஆட்சித்திறன் ஆகியவை அவற்றின் கருவானது.
அதில், மலர்ந்து, தவழ்ந்து, வளர்ந்து, சிறந்தன இக்கலைகள்.
தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் பெருமையுடைத்தாய்
எத்தனைக் கலைகள் இத்தனைத் திறனாய் செவ்வியலானதோ
அந்தக் கலைகள்தாம் இன்று தாம் உட்கொண்ட அத்தனை
திறனையும், காண்பவர்க்கும், கற்பவர்க்கும் பறைசாற்றிக்
கொண்டிருக்கின்றன - என்றால்
அதன் பெருமையை என்னவென்பது? அதுதான் கலைகள்.
அவற்றுள் பொதிந்தது தமிழனின் சிறப்பு - என்பதால்தான்
கலை விலைமதிக்க முடியாதது என்றும் பெயர் பெற்றது.
இந்தக் கலைகளால், வரலாற்றால் சிறந்து நிற்பதுதான்,
திருச்செந்துறையிலுள்ள ஒப்பற்ற இந்த சிவன் கோயில்.
திருச்செந்துறை கற்றளிப் பெருமானடிகள் கோயில் என்பது
அன்றையப் பெயர். சந்திரசேகரசுவாமி கோயில் என்பது
இன்றைய பெயர். இக்கோயிலையும் கோயில் சார்ந்த ஊரையும்
முழுமையாக ஆய்வு செய்கிறது இந்நூல். ஆதலின் இது
ஒரு நன்னூல்.

தமிழ்நாடு அரசில் துறைகள் தமிழ் மொழியின் - தமிழனின் - திறம்பற்றி பேசுவன என்றாலும் அதன் அடி வேர்கள் சென்றவிட மெல்லாம், விதமெல்லாம் அகழ்ந்து, ஆய்ந்து வெளிக்கொணரும் துறை - தொல்லியல் துறை தான்.

ஒரு மரம் வளர்க்க, அது பற்றி ஆய்வு செய்யும்போது, அதன் விதையும், விதைக்கப்படும் மண்ணும், சூழலும் அங்கு ஏற்படும் பருவ நிலை மாற்றமும் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். அப்போதுதான் ஆரோக்கியமானதொரு மரம் வளரும், பழம் தரும், இன்னும் பல பலன்களும் தரும்.

அதுபோல தமிழ் நாகரிகத்தின் வித்தின் தன்மை, அது வேரூன்றிய மண், அதன் வளர்ச்சிப் போக்கில், பண்பு மாற்றங்கள் ஏற்பட்ட தருணங்கள் ஆகியவற்றை செவ்வனே ஆய்வு செய்தால்தான் அன்றைய சமூகத்தைப் புரிந்து கொண்டு, இன்றைய சமூகத்தின் தமிழ் மொழியையும், நாகரிகத்தையும் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முடியும். ஆதலால்,

தொல்லியலும், அதனைச் சார்ந்த துறைகளின் அறிவும் இன்றியமையாதனவாகிறது என்பதால், இந்த அறிவுத் திறனை வருங்கால சந்ததியினருக்கு உணர்த்துவது சமூகத்தின் கடமை யாகிறது. அதனால்,

தமிழ்நாடு அரசு இத்துறையில் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஒன்றை நிறுவி ஆண்டுதோறும், எட்டு மாணவர்களுக்கு உதவித் தொகை அளித்து தொல்லியலில் பயிற்சியளித்து வருகிறது. அம் மாணவர்கள் தங்கள் பயிற்சியின் முதிர்ச்சியாக ஒரு கோயிலையும், கோயில் சார்ந்த ஊரையும் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு முழுமை யானதொரு ஆய்வேடாக, தங்கள் இறுதித் தேர்வின் ஒரு தாளாகச் சமர்ப்பிக்கின்றனர்.

எந்த நோக்கத்திற்காக இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறதோ, அந்த நோக்கம் நிறைவேற இந்த ஆய்வுகள் மக்களைப் போய் சேர வேண்டுமல்லவா? அதனால் தான் மாணவர்கள் எழுதிய ஆய்வேடு

களை நூலாக்க, தமிழ்நாடு அரசு நிதியுதவியளித்து வருகிறது. அவ்வாறு அளிக்கப்பட்ட நிதியிலிருந்து வெளிவருவது தான் இந்த நூல். அதனால்,

தமிழ்நாடு அரசுக்குப் பாராட்டையும், மக்கள் சார்பாக நன்றியையும் தெரிவிக்கிறது தொல்லியல் துறை.

திருச்செந்துறை என்ற இந்த ஊரிலுள்ள கோயிலைக் கட்டியவர் ஒரு பெண். அவர் ஒரு சிற்றரசர் மகள், பேரரசர் மனைவி, பெயர் பூதி ஆதிச்ச பிடாரி. அவர் கலைத் திறனும், கோயில் ஆட்சித் திறனும் படைத்தவர். ஆதலின் புகழ் பெற்றவர்.

இக்கோயிலைப் பற்றி எழுதியவரும் ஒரு பெண். பெயர் கஸ்தூரி. எங்கள் பழைய மாணவி. 1976-77ல் படித்தவர். இவர் மொழித் திறனும், அறிவுத் திறனும் பெற்றவர். ஆதலின் பாராட்டுக்குரியவர்.

இந்நூலைச் செம்மையாக்கித் தந்தவர் இத்துறையின் சிறப்பு நிலைக் கல்வெட்டாய்வாளர் முனைவர் ஆ. பத்மாவதி. அவருக்கும் எம் பாராட்டுக்கள்.

இந்நூலுக்கு வேண்டிய நிழற்படங்களை அளித்து உதவியவர் திரு. கி. ஸ்ரீதரன், பதிவு அலுவலர். நிழற்படங்களையும், அட்டை படத்தையும் சிறந்த முறையில் கணினியில் வடிவமைத்துத் தந்தவர், இத்துறை நிழற்படம் எடுப்பவர் திரு. மு.த. ஸ்ரீதரன். இவர்கள் இருவருக்கும் எம் பாராட்டுக்கள்.

தமிழ் கூறும் நல்லுலகம் இந்நூலைப் படித்து மகிழ வேண்டும், பயன்பெற வேண்டும் என்ற வாழ்த்துக்களுடன்,

(ஒப்பம்)
**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**
சிறப்பு ஆணையர்

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை | iii - v |
| 1. | திருச்செந்துறை - ஊரும் பேரும் | 1 - 17 |
| 2. | திருச்செந்துறை - சந்திரசேகர் கோயில் | 18 - 51 |
| 3. | வரலாற்றுச் செய்திகள் | 52 - 71 |
| 4. | திருச்செந்துறைக் கல்வெட்டுச் செய்திகள் | 72 - 97 |
| 5. | திருச்செந்துறை - வேணுகோபாலப் பெருமாள் கோயில் | 98 - 100 |
| 6. | திருச்செந்துறை - கிராம தேவதைகள் | 101 - 116 |

# 1. திருச்செந்துறை – ஊரும் பேரும்

**திருச்செந்துறை:**

> **''துறை மல்கு சாரல் சுனை மல்கு நீலத்திடை வைகிச்**
> **சிறை மல்கு வண்டும் தும்பியும் பாடும் சிராப்பள்ளி''**

என்று திருஞானசம்பந்தரால் வியந்து பாடப்பெற்றதும், பண்டை சோழ நாட்டின் ஒரு பிரிவான திருச்சிராப்பள்ளி இயற்கை வளத்தைக் கொடையாகப் பெற்றதும், மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடை போர்த்து நடந்துவரும் காவிரியாலும் ஒருங்கே அமையப் பெற்ற திருச்சிக்கு மேற்கே ஏழு மைல் தொலைவிலும் எழுமனூர் இரயில் நிலையத்திலிருந்து மூன்று மைல் தொலைவிலும் காவிரி யாற்றின் தென் கரையிலும் அமைந்துள்ளது திருச்செந்துறை என்னும் ஊர்.

**ஊரும் பேரும்:**

திருச்செந்துறை பெயர்க் காரணம் பற்றி புராண கருத்துக்கள் நிலவி வருகின்றன. ஸ்ரீமகாலஷ்மியானவள் ஜீயருக்குப் புத்திரியாக அவதரித்து ஸ்ரீரெங்கநாதரை மணந்துகொள்ள விரும்பி, ஜீயர் ஸ்ரீரங்கநாதருக்கு ஓலையனுப்பி திருச்செந்துறையின் தென்கரை யில் நிர்மாணிக்கப்பட்ட கல்யாண மண்டபத்தில் சாஸ்திரோத்திர முறைப்படி இறைவனுக்கு தமது மடித்தலத்தில் ஸ்ரீதேவியை மகள் முறை கொண்டு அமர்த்தி ஸ்ரீரங்கநாதருக்கு கன்னிகாதானமாக தாரை வார்த்து மணம் முடிப்பித்தார். எனவே மகாவிஷ்ணு திருவை (ஸ்ரீதேவியை) சேர்ந்த தலமாதலால் திரு சேர்ந்த துறை, திருச்செந்துறை எனலாயிற்று என்கிறது தலபுராணம்.

பொதுவாகத் துறை என்னும் பெயரை நோக்கும்போது, செழிப்பான ஆறுகள் பாயும் பகுதிகள் துறை என்னும் பெயர் பெறுகின்றன. இக்கருத்தை வலியுறுத்தும் பொருட்டு திரு மயிலாடுதுறை, திருப்பாலத்துறை, திருவாவடுதுறை போன்ற ஊர்களை நோக்கும்போது காவிரியின் வடகிளையாகிய கொள்ளிடத் திலோ, தென் கிளையாகிய காவிரியிலோ அமைந்துள்ளன.

## கங்கையிற் புனிதமாய காவிரி:

சோழநாடு வற்றா வள்ங்கொழிக்கும் காவிரியைப் பெற்றுள்ளதால் நீர்நாடு, புனல் நாடு, காவிரி நாடு, பொன்னி நாடு என்ற பெயர்களை உடைய, திருச்செந்துறையின் செல்வ செழிப் பிற்குக் காரணமான வடகரையில் பாயும் காவிரியின் பெருமையைப் பேசாமல் சொல்வதா? கங்கையும் காவிரியும் இந்திய நாட்டின் வரலாற்றையும் பண்பாட்டையும் கலையையும் பிரதிபலிக்கின்றன. வடக்கே கங்கைச் சமவெளியில் பேரரசர்கள் தோன்றி புகழ் படைத்ததைப் போலவே, தெற்கிலும் காவிரிச் சமவெளியில் சோழப் பேரரசர்கள் தோன்றிப் புகழ் படைத்தனர். இலக்கியங் களிலும் புராணங்களிலும் கங்கையும் காவிரியும் நிலையான இடம்பெற்று இருக்கின்றன.

கவேரன் என்னும் அரசனது மகள் காவேரி என்பதும், அவள் அகத்தியரின் கமண்டலத்தினுள்ளே இருந்தாள் என்றும், விநாயகர் காக்கை வடிவிலே கமண்டலத்தைக் கவிழச் செய்து காவேரி யைப் பெருகச் செய்தார் என்பதும் புராண வழக்கு.

அர்ச்சாவதார மூர்த்தியாகப் பள்ளி கொண்டிருக்கும் அரங்கனின் திருவடிகளை, என்றும் தன்னுடைய திரைக் கையால் வருடிக் கொண்டிருப்பது காவிரி. அந்த அரங்கன் முன்னாளில் பரதனின் முன்னோர்களில் ஒருவரான சூரிய குலத்து இச்சுவாகு

மன்னனால் பூசிக்கப்பட்டவர். அந்த அரங்கனுடைய திருவடித் தாமரைகளை இன்றும் வருடிக் கொண்டிருப்பது காவிரி. இப்படி அர்ச்சாவதாரத்துடன் தொடர்புக் கொண்ட காவிரி கங்கையை விட மேலானது. இதை வலியுறுத்தித்தான் ''கங்கையிற் புனிதமாய் காவிரி நடுவுபாட்டுப் பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கம் தன்னுள் எங்கள் மால் இறைவன் ஈசன் கிடந்ததோர் கிடக்கை கண்டும் எங்கனம் மறந்து வாழ்கிறேன் ஏழையேன் ஏழையேனே'' என்று அரற்றுகின்றார் தொண்டரடிப் பொடியாழ்வார். கிடந்த கோலத்தில் இருக்கும் அரங்கன் வசிக்கும் ஊராகிய திருவரங்கத் தில் பரந்து பாயும் காவிரி கங்கையினும் புனிதமாயது என்பதற்கு இதனினும் விளக்கம் தேவையில்லை.

**காவிரிக் கோட்டம்: (காவிரியம்மன் கோவில்)**

**''தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே**
**மண்ணாவதுஞ் சோழ மண்டலமே''**

என்பது ஔவையார் திருவாக்கு.

இக்காவிரியைப் புலவர்கள் வான் பொய்ப்பினும் தான் பொய்யா வளத்தது என்று பாராட்டுவர்.

**''வான் பொய்ப்பினும் தான் பொய்யா**
**மலத்தலைய கடற்காவிரி**
**புனல் பரந்து பொன் கொழிக்கும்''**

என்பது பட்டினப்பாலை வரிகள்.

**''கோள்நிலை திரிந்து கோடை நீடினும்**
**தான் நிலை திரியாத் தண்தமிழ்ப் பாவை''**

என்று மணிமேகலை கூறும்.

சிலப்பதிகாரம் கானல் வரியுள் ஆற்று வரியாக வருபவை நவில்தொறும் இன்பம் பயப்பன.

''மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ வாடையது போர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி''

''பூவர் சோலை மயிலாலப்
புரிந்து குயில்களிசை பாடக்
காமர் மாலை யருகசைய
நடந்தாய் வாழி காவேரி''

''வாழியவன்றன் வளநாடு
மகவாய் வளர்க்குந் தாயாகி
ஊழியுய்க்கும் பேருதவி
யொழியாய் வாழி காவேரி''

இவ்வாறு பல்லாற்றானும் சிறப்புடைய காவிரியைப் பழங்காலந் தொட்டே தமிழ் மக்கள் தெய்வமாகவே போற்றி வருகின்றனர். ஆடித்திங்கள் பதினெட்டாம் நாள் காவிரி அன்னையைப் போற்றி வணங்கும் விழாவினை யாவரும் அறிவர். காவிரியைத் தெய்வமாக போற்றுவதோடமையாது அதற்குக் கோயில் எடுத்து வழிபாடும் ஆற்றுவர்.

திருச்சிராப்பள்ளியில் காவிரிக்குத் தனிக்கோயில் ஒன்று உள்ளது. காவிரி அம்மன் கோயில் என்று வழங்கப்பெறும் அது. சின்னைய பிள்ளை சத்திரம் சாலையில், அச்சத்திரத்திற்குச் சற்று தெற்கே மேல் சிறகில் அமைந்துள்ளது. கோயில் சிறியது கிழக்கு நோக்கியது.

இக்காவிரியம்மன் ஆலயம், சுமார் 100 வருடங்களுக்கு மேற் பட்டது. கல்வெட்டு மற்றும் வேறு ஆதாரங்கள் எதுவும் இல்லை. காவேரியில் குளிப்பவர்கள் குளித்துவிட்டு ஒடத்துறை பிள்ளையார் கோயிலையும் காவேரியம்மன் கோயிலையும் வணங்குவது வழக்கம். காலை மாலை இருவேளையும் அம்மனுக்கு பூசை நடைபெறுகின்றது. கோயிலைப் பரிபாலித்து வருகின்ற அந்தணரே பூசையும் செய்கிறார். ஆண்டுதோறும் ஆடித்திங்கள் 18ம் நாளில் சிறப்பான அபிடேகங்களும் அர்ச்சனைகளும் செய்யப் பெறு கின்றன. தினமும் மாலையில் ஆறு மணியிலிருந்து ஏழு மணி வரை வேத பாராயணம் நடைபெற்று வருகிறது. இக்கோயிலில் மூலஸ்தானத்தில் காவிரியம்மன் சிலையும் ஒரு பிள்ளையார் சிலையும் உள்ளன. உற்சவ விக்கிரகங்கள் எதுவும் இல்லை. காவேரியம்மனுக்கு நான்கு கைகள் உள்ளன. மேல் வலது இடது இரு கரங்களிலும் மலரும், கீழ் வலது இடது கரங்களில் முறையே அபய வரத முத்திரைகளும் காணப்படுகின்றன. சிலை அமர்ந்த நிலையில் உள்ளது. இடது காலை மடக்கி, வலது காலைத் தொங்க விட்டுக் காணப்படுகிறது. வருடத்தில் நவராத்திரி உற்சவம் மட்டும் ஒன்பது நாளும் நடைபெறுகின்றது. வேறு விழாக்கள் நடை பெறுவதில்லை.

1. ஒடத்துறை பிள்ளையார் கோயில், வடபத்ரகாளி கோயில், காவேரியம்மன் கோயில், ஆஞ்சநேயர் கோயில் ஆகிய நான்கு கோயில்களும் ஒரே வரிசையில் அமைக்கப்பட்டுள்ளதால், இது தொன்று தொட்டு இருந்துவரும் கோயில் என்று கருத முடியாது. காவிரிக் கரையில் இவை ஒரு காலத்தில் அமைந்து இருக்கலாம். காவிரியின் பெருக்கினால் அழிந்துவிட இவற்றை வெகுதூரம் கொண்டு வந்து அமைந்திருப்பார்கள். ஏனெனில் காவிரி ஒடத்துறை பிள்ளையார் கோயில் ஒன்று இருக்கும் இடம் வரை காவிரி ஒடி பின் குறுகிவிட்டதாகக் கொள்ள முடியாது. காரணம் இந்த ஆலயம்

இருக்கும் இடத்திலிருந்து காவிரி இரண்டு பர்லாங் தூரத்திற்கு அப்பால் ஓடுகிறது.

2. அண்ணாசிலையில் வடக்கே மேல் சிந்தாமணி என்ற கிராமம் உள்ளது. அந்த கிராமத்தையெல்லாம் தாண்டி இப்பால் காவிரி ஓடியிருக்க முடியாது. கிராமத்தைப் புதிதாக படுகையில் அமைக்க மாட்டார்கள்.

3. குடமுருட்டி என்ற பாலத்துக்கு வடக்கே காவிரிக் கரையில் ஒரு பாழடைந்த கோயிலும், பாப்பம்மாள் சத்திரம், தில்லைநாயகம் பிள்ளை படித்துறை ஆகிய மிகப் பழைய கட்டிடங்கள் உள்ளன. இவற்றைக் கொண்டு பிள்ளையார் கோயிலையும், காவேரியம்மன் கோயிலையும் பரம்பரையாக இங்கு அமைந்திருக்கக் கூடியது என்று கருத முடியாது. இடைக்காலத்தில் அமைக்கப்பட்டதாகவே கருத முடிகின்றது. காவேரியம்மன் கோயில் என இப்படி ஒரு கோயில் இருப்பதையே பலர் அறியார்.

திருச்செந்துறையின் வடகரையில் ஓடும் காவிரி புதுவாத் தலை, ராமவாத்தலை, கொடிங்கல் ஆகியவற்றிற்கு இடையில் பிரிகிறது. திருச்செந்துறையில் ஆடித்திங்கள் 18ம் நாள் காவிரி அன்னையைப் போற்றி வழிபடும் விழா இன்றும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

### பயிரும் பாசனமும்:

திருச்செந்துறையில் வளம் கொழிக்கும் காவிரி பாய்வதோடு, எண்ணற்ற கால்வாய்களும் (வாய்க்கால்) ஓடி இவற்றிலிருந்து பிரிகின்ற கண்ணாறுகளும் பாய்ந்து மேலும் செந்துறையை செம்மையாக்குகின்றது.

கல்வெட்டில் காணப்படும் அல்லூர் வாய்க்கால், இன்றும்

இதே பெயரில் திருச்செந்துறையில் பாய்கின்றது. இந்த வாய்க்கால் திருச்செந்துறையில் பாய்ந்து, பின்பு கருப்பூர் எல்லை வரை பாய் கின்றது. மேலும் வேப்பங்கன்றை வாய்க்கால் மூன்றாகப் பிரிந்து மாகாளி வாய்க்கால், முருக்கஞ்சி வாய்க்கால், இளங்கித்தடி வாய்க்கால்களாகப் பாய்கின்றது. புளியஞ்சி கண்ணாறு, உப்புலிய கண்ணாறு, வண்ணாரக் கால்வாய், தச்சஞ்சிக் கண்ணாறு முதலியனவும் திருச்செந்துறையில் ஓடுகின்றன.

மேற்கூறிய கால்வாய்களில் சிலவற்றின் பெயர் காரணத் தினால் வந்திருக்கலாம். காடாக இருந்த இடத்தை அழித்து உப்புலியர்கள் குடியேறியபோது, அவர்களின் நீர்ப்பாசனத்திற்குக் கால்வாய் வெட்டினர். எனவே உப்புலிய கண்ணாறு என்று பெயர் பெற்றது. இவ்வாறே வேப்பங்கன்றை வாய்க்கால், அரளி வாய்க்கால் போன்றன காரணப் பெயர்களாக அமைந் தவையே எனலாம். மேற்கூறிய வாய்க்கால்கள் எல்லை வாய்க் கால்களை அடைந்து அங்கிருந்து குடமுருட்டியில் பாய்ந்து இறுதியாகக் காவிரி ஆற்றில் கலக்கின்றன.

காவிரியோடு பல கால்வாய்களும் பாய்ந்து செழிப்புள்ள பூமியாக விளங்கும் இங்கும் (திருச்செந்துறை) பயிருக்கு பஞ்ச முண்டோ? இங்கு நெல், வாழை ஏராளமாகப் பயிரிடப்படுகின்றன. இங்கு பெருமளவில் உற்பத்தி ஆகும் வாழை (நேந்திரம்) கேரளா விற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இங்கிருந்து நெல் திருச்சிக் கும் கொண்டு செல்லப்பட்டு மிஷினில் குத்தி அரிசியாக்கி ஊட்டிக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. செழிப்பின் காரணமாக பல மக்களும் பல ஊர்களிலிருந்து வந்து தங்கி சில தொழில்கள் நடத்துகின்றனர். எனவே சிறந்த வியாபாரத் தலமாகவும் இவ்வூர் விளங்குகின்றது எனலாம்.

## மக்கள் வாழ்க்கையும் வசதிகளும்:

இங்கு 1971ம் ஆண்டு கணக்கு அறிக்கைப்படி ஜனத்தொகை 1620 மக்கள் இருந்தனர். இந்த 1977ல் இச்செந்துறைவாழ் மக்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்திற்கு மேல் உயர்ந்துள்ளன. இங்கு மாவட்ட உயர்நிலைப் பள்ளி ஒன்று உள்ளது. இதில் சுமார் 600 மாணவ, மாணவியர் படிக்கின்றனர். பஞ்சாயத்து யூனியன் துவக்கப் பள்ளியும் உள்ளது. இதில் சுமார் 120 மாணவர்கள் படிக்கின்றனர். மேலும் திருச்செந்துறைக்கு கிழக்கில் வேதசிவாகம பாடசாலை உள்ளது. 23 மாணவர்கள் பயில்கின்றனர். இதற்கு ஆசிரியர் விசுவநாத சிவாச்சாரியார். இந்துமத அறநிலையத்தாராலும், காஞ்சி காமகோடி மடத்தாராலும் மானியம் வழங்கப்படுகிறது. திருச்செந் துறையில் நூற்றுக்கு எழுபது பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர் களாக உள்ளனர்.

உலகில் மனிதன் தோன்றிய நாள் முதல் அவனுடைய வாழ்விலே இன்றியமையாத நிலை வகிப்பவை தெய்வங்களுக்கு எடுக்கப்படும் கோயில்களாகும். "கோயில் இல்லா ஊரில் குடி யிருக்க வேண்டாம் என்னும் முதுமொழிக்கு இணங்க ஒவ்வொரு ஊரிலும் முக்கிய அம்சமாக அமைவன கோயில்களாகும். எனவே இத்திருச்செந்துறையில் சிவன் கோயில் ஒன்றும், வேணுகோபாலப் பெருமாள் கோயில் ஒன்றும், பிடாரி இளம்புலியம்மன் கோயில் ஒன்றும், அரிஜன மாரியம்மன் கோயிலும் இரண்டு பிள்ளையார் கோயிலும் உள்ளன.

கரூர் ரோட்டிற்கு வடக்கில் உள்ள அரச மரம் அருகில் ஒரு பழைய கட்டிடம் உள்ளது. இக்கட்டிடம் ஸ்ரீரங்கநாதர் ஸ்ரீரங்கத்தி லிருந்து ஆண்டுக்கு ஒருமுறை பங்குனி உத்திரம் அன்று திருச் செந்துறைக்கு வரும் நாளன்று அக்கட்டிடத்தில் தண்ணீர்ப்

பந்தல் அமைத்து வழங்கப்பட்டது. இக்கட்டிடம் இன்றும் இங்கு நிலைப்பெற்று உள்ளது. நவாப் ஆட்சிக் காலத்தில் திருச்செந்துறை கிராமத்தை இனாமாகப் பெற்ற சேந்தனகிரி கோசாயி என்பவரால் தண்ணீர்ப் பந்தல் பணி நடைபெற்று வந்தது. இந்த சேந்தனகிரி கோசாயியின் பரம்பரையில் வந்த ஓரிரு குடும்பங்களே இன்று இங்கு வசிக்கின்றனர். இக்குடும்பத்தினர் இன்றும் தொடர்ந்து ஆண்டுதோறும் அரங்கநாதர் ஸ்ரீரங்கத்திலிருந்து வரும் நாளன்று தண்ணீர் பந்தல் பணியை நடத்தி வருகின்றனர்.

ஒரு மனிதன் தன் தேவையின் பொருட்டு ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்வதற்குப் போக்குவரத்து வசதிகள் இன்றியமையாதன. திருச்செந்துறையில் 1855ம் ஆண்டில் இரயில் இருப்புப்பாதை போடப்பட்டது. இப்போது ஜீயபுரம் இரயில் நிலையம் என்று அழைக்கப்படுகின்றது. இரயில் வசதிகளைப் போலவே பேருந்து வசதிகளும் உள்ளன. கரூர் செல்லும் பேருந்துகள் அரை மணிக்கு ஒரு தடவை இக்கிராமத்தின் வழியாகத்தான் செல்கின்றன. எனவே இங்கு போக்குவரத்து வசதிகள் நல்ல முறையில் அமைந்துள்ளன.

இங்கு அக்ரகாரம் (கோயிலை ஒட்டியுள்ளது) வெள்ளாளர் தெருக்கள், கூத்தாடி தெருக்கள், கோசாயி தெருக்கள் (இனாம் தாரராக இருந்தவர்கள்) பள்ளர், பறையர் வசிக்கும் அரிசன தெருக்கள் உள்ளன.

அக்ரகாரம் திருச்செந்துறை சந்திரசேகரசுவாமி கோயிலை ஒட்டி உள்ளது. இங்கு சுமார் ஐம்பது வீடுகள் உள்ளன. இந்த அக்ரகாரத்தில் பிராமண சமூகத்தினர் மட்டுமே வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர் நிலச்சுவான்தார்களாக இருக்கின்றனர்.

கூத்தாடி தெருவில் தாசிகளின் குடும்பங்கள் ஐந்து உள்ளன. இவர்களின் முன்னோர்களில் பெண்கள் பொட்டுக் கட்டிக் கொண்டு திருச்செந்துறை சந்திரசேகர சுவாமி கோயிலுக்குப் பதியிலாராக இருந்ததாகவும் அப்போது இவர்களுக்கு மானியமாக நிலங்கள் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. மேலும் சோழர்கள் காலத்தில் தஞ்சைப் பெரிய கோயிலைப் போலவே திருச்சி வட்டத்திலுள்ள ராச்சாண்டார்மலை, செவ்வாயம், பெட்டவாய்தலை முதலிய இடங்களிலுள்ள கோயில்களிலும் ஏராளமான பதியிலார் இருந்ததாகத் தெரிய வருகின்றது.

கோசாயி தெருவில் நவாப் காலத்தில் இனாம்தாரர்களாக இருந்தவர்களின் பரம்பரையில் தற்போது இரு குடும்பங்களே உள்ளன. அரிசன தெருக்களில் தேவேந்திரப் பள்ளர்களும், பறையர்களுமாகச் சேர்ந்து எண்பது குடும்பங்கள் உள்ளன. கோசாயி, வெள்ளாளர் தெருக்களில் எல்லா இனத்தாரும் குடி உள்ளனர். முத்துராஜா, நாயுடு, உப்பிரியர், வண்ணார், குயவர்கள், நாடார், கவுண்டர் ஆகிய எல்லா இனங்களும் சேர்ந்து ஒரு ஆறு குடும்பங்களுக்கு மேல் உள்ளனர். இவர்களில் முத்துராசா குடும்பங்கள்தான் ஐம்பதுக்கு மேல் உள்ளன. இரயில், பேருந்து ஆகிய போக்குவரத்து வசதிகள் அதிகம் உள்ளதால் திருச்சியிலிருந்து இங்கு வந்து தங்கிக் கொண்டு தொழில் செய்யப் போகின்ற குடும்பங்கள் உள்ள இடமாகவும் மாறியுள்ளது. ஆகையால் எல்லா இனமும் கலந்து குடியேறியுள்ளனர். இங்கு அடிப்படையாகத் தங்கியுள்ளவர்களில் பிராமணர், முத்திரியர், அரிஜன மக்கள் ஆகியோரை குறிப்பிட முடியும். மற்ற இனங்கள் தொழில் கருதி குடியேறியவர்கள் எனலாம். இங்கு வாழும் அனைத்து சமூகத்தினரின் பழக்க வழக்கங்களைப் பற்றி தெரிந்துகொள்வது என்பது இயலாத ஒன்றாகும். ஒரு சமூகத்தினரின் பழக்க வழக்கங்களை ஆராயப்புகின் முழுமையாக ஆராய்தல் வேண்டும் என்றாலும் ஓரளவு முழுமையாக

அறிய முடிந்த இங்கு வசிக்கும் கோசாயி குடும்பத்தினரின் சமூகப் பழக்க வழக்கங்கள் மற்ற சமூகத்தினரின் பழக்க வழக்கங்களை விட சற்று மாறுபட்ட ஒன்றாகவே உள்ளது.

## பழமொழிகளில் திருச்செந்துறை:

ரோஜாவிலிருந்து அத்தர் பிறந்தது போன்று வாழ்வின் சிறப்பிலிருந்து துள்ளித் தெரித்த ரசம் தோய்ந்த மாதுள முத்துக் களே பழமொழிகள். உண்மையை உள்ளவாறு உணர்த்தக் கூடியன. எனவே திருச்செந்துறையைப் பற்றி வழங்கிய பழமொழி யும் உண்மையே எனலாம்.

**''அன்ன வெறி பிடித்த அந்தநல்லூர்**
**ஆகாசக் கோட்டை கட்டும் அம்மங்கடி''**

**''திருச்சிலைக்கு எண்ணெயிலாத திருச்செந்துறை''**

அந்தநல்லூர் திருச்செந்துறைக்கு மேற்கே உள்ள ஊர். அம்மங்கடி திருச்செந்துறைக்குத் தெற்கில் உள்ள ஊர்.

திருச்சிலைக்கு எண்ணெயில்லாத திருச்செந்துறை என்றும், திருவிளக்கிற்கு எண்ணெயில்லாத திருச்செந்துறை என்றும் இரு விதமாகத் திரித்து வழங்கப்படுகின்றது. திருச்செந்துறையைப் பற்றி வழங்கப்படும் பழமொழிகளை நோக்கும்போது, இங்குள்ள சிவன் கோயில் (அருள்மிகு சந்திரசேகர சுவாமி கோயில்) வழிபாடு குன்றிய நிலையில் இருந்திருக்கலாம் என்பதில் ஐயமில்லை.

18ம் நூற்றாண்டு கிறித்துவ, இஸ்லாம் சமயங்கள் ஏற்றங் கண்டதாலும், இந்து மன்னர்கள் ஆற்றலிழந்து அயல் சமயத்தினரின், படைத் துணையையே நாடி ஓடியதாலும், இந்துக் கோயில்கள்

பாதுகாப்பற்று, பேணுவாரற்றுக் கிடந்தன. அக்காரணத்தால் தமிழகத்துப் பெருங்கோயில்கள் பல போர் அணிகள் நிறுத்தப் பட்டிருந்த பாடி வீடுகளாகவும் கொத்தளங்களாகவும் பயன்படுத்தப் பட்டன. மக்கள் எத்துணை அவல நிலையை எய்தியிருக்க வேண்டும். எவ்வளவு செயலற்று, கையற்று வணங்கி வாழ்ந்து வந்திருக்க வேண்டும் என்று எண்ண வேண்டியுள்ளது. சிதம்பரம் கோயிலில் சாஹீஜி என்ற மராட்டியன் பகைவர்க்கு அஞ்சித் தன் படையுடன் அடைக்கலம் புகுந்தான்.

பிரெஞ்சுக்காரரும், ஆங்கிலேயரும், ஐதர் அலியும் மாறிமாறி இக்கோயிலைத் தம் கொத்தளங்களாகப் பயன்படுத்தி வந்தனர். இக்கோயில் 35 ஆண்டுகள் தொடர்ந்து இராணுவத்தினர் வசம் இருந்து வந்தது. பீரங்கித் தாக்குதல்களால் இக்கோயிலில் மண்டபங்களும், சுற்றாலைகளும், சிறு கோயில்களும் இடியுண்டு அழிந்தன. சிதம்பரம் கோயிலைப் போலவே திருவண்ணாமலை கோயிலிலும் படை வீடு அமைக்கப்பட்டிருந்தது. பல படுகொலைகளும் அக்கோயிலுக்குள் நடைபெற்றதுண்டு. ஒருமுறை ஆர்க்காட்டு நவாபு ராஜா சாயிபு தன் பின்னால் விட்டுவிட்டுப் போன பட்டாளம் ஒன்று அண்ணாமலையார் கோயிலினுள் தங்கி யிருந்ததால், தியாக துர்க்கம் கின்னேதாரஸ் கிருஷ்ணாராவு என்ற மராட்டியன், ஒருநாள் இரவு திடீரென்று தன் படை வீரருடன் கோயிலுக்குள் புகுந்து எழுநூற்றைம்பது சிப்பாய்களைப் படுகொலை செய்தான். கோயிற் சுற்றாலைகள் இரத்தத்தால் தோய்ந்தன. மேற்கூறிய காரணங்களினால் 18ம் நூற்றாண்டில் திருச்செந்துறையில் உள்ள கோயில்களும் வழிபாடு குன்றிய நிலையில் இருந்திருக்கின்றன. மக்கள் வழிபாட்டில் கோயில்கள் இருந்தால்தானே திருச்சிலைக்கும் தினம் பூசை நடைபெற் றிருக்கும். கிறித்துவ இஸ்லாம் சமயங்கள் ஏற்றங்கண்டதாலும், இந்து மன்னர்களின் ஆற்றலின்மையாலும் இந்துக் கோயில்கள்

பாதுகாப்பற்று பேணுவாரற்றுக் கிடந்தன. இதன் காரணமாக மக்கள் வழிபாட்டிலும் கோயில்கள் இருந்திருக்கவில்லை எனலாம்.

பழமொழிகள் உள்ளதை உள்ளவாறு, அனுபவ உணர்ச்சியைப் படம் பிடித்துக் காட்டுவனவாதலின் திருச்செந்துறைப் பற்றி வழங்கிய பழமொழியும் உண்மையே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## திருச்செந்துறை வாழ் நாட்டுப் பாடல்கள்:

### நாட்டுப்புறப் பாடல் ஒரு வரலாற்றுத் துணைக்கருவி:

நாட்டுப்புறப் பாடல்கள் இலக்கியங்களின் உதயத்திற்கு முன் பிறவி எடுத்தவை. ஒரு நாட்டின் வரலாற்றினை அறிய வரலாற்று அறிஞர்கள் கீழ்க்கண்டவற்றை மூலங்களாக்க் கொள்கின்றனர்.

1. கல்வெட்டுகள், பட்டையங்கள்
2. புதைப்பொருள்கள், நாணயங்கள்
3. வெளிநாட்டார் எழுதி வைத்த குறிப்புகள்
4. இலக்கியங்கள்
5. எழுத்தின் அமைப்பும், மொழியின் வளர்ச்சியும்
6. கர்ண பரம்பரைக் கதைகள்
7. கட்டிடங்களும் கலைகளும்

வரலாற்றுப் பெட்டகமாய் விளங்கும் இந்நாட்டுப்புறப் பாடல் ஒவ்வொரு ஊரிலும் கிராமங்களிலும் மூலை முடுக்குகளில் வாழும் பாமர மக்களிடம், அதிலும் பள்ளர் பறையர்களிடம் என்றும் அழியா பாமர இலக்கியமாகப் பூத்துக் குலுங்குகின்றன. இதன்

அடிப்படையில் திருச்செந்துறை வாழ் பாமர மக்களிடம் மலரும் நாட்டுப்புறப் பாடல்களை நோக்குவோம்:

> "ஆரியப்பா நீ கேளும்
> காணி களத்தூரு
> கம்பரச நல்பேட்டை
> முருக்கக் களந்தூரு
> முத்தரச நல்பேட்டை
> ஈசான திருச்செந்துறை
> அந்த நல்லூர் அம்மங்குடி
> அடுத்ததொரு குடியாலம்
> புதுக்கோட்டை பொய்யாமணி
> புகழ்ப் பெரிய நங்கவரம்
> இத்தனையும் சுற்றி வந்தேன்
> உத்தமனை காணோமய்யா"

இப்பாடல் மூலம் நமக்கு அழகிய அரிய உண்மைகள் புலனாகின்றன. இப்பாடல் மூலம் திருச்செந்துறைக்கு அருகருகில் உள்ள கம்பரசம் பேட்டை, முத்தரசநல்லூர், அந்த நல்லூர், அம்மங்குடி போன்ற ஊர்கள் அப்போதும் இப்போதும் இருப்பது தெரிய வருகின்றது.

## ஒப்பாரி:

அவலத்தின் விசுவரூபமே ஒப்பாரி. இந்த ஒப்பாரி பாடல்களின் மூலம் எண்ணற்ற அரிய உண்மைகள் தெரிய வருகின்றன.

> "நீளக்கிணறு வெட்டி நீளக்கிணறு வெட்டி
> நெடுங்கிணறு கல்பாவி – உன்னை
> நீளமின்னு பார்க்காமே – உன்னை
> நிறுத்தினார் கங்கையிலே"

இந்த ஒப்பாரிப் பாடலில் ஒரு வரலாற்றுக் குறிப்புத் தெரிய வருகின்றது. இறந்தவர்களைப் புதைப்பதற்கு கிணறு போன்று வெட்டி அதனைச் சுற்றி கல்லை பரப்பி (கல்பாவி) இறந்தவர் களைப் புதைத்து இருக்கலாம். இவை பெருங்கற் காலத்தை நினைவூட்டுகின்றன.

''வாசல் அலங்கரித்து வாசல் அலங்கரித்து
வாசலெங்கும் பந்தலிட்டு
சுண்ணாம்பு கொண்டு சொகுசுடனே சுத்தம் செய்து
அய்யரை வரவழைத்து அரசாணி முன்னே வைத்து
மஞ்சள் கயிறு கொண்டு மங்கிலியம் தான் கோத்து
மன்னவர் கையெடுத்து மன்னவர் கட்டும் தாலி
மங்கியிருக்க நாளாச்சோ''

இப்பாட்டில் வரும் கோட்டை என்பது திருச்சியைக் குறிக்கும். இப்போதும் இங்குள்ள மக்கள் திருச்சியை கோட்டை என்ற பெயராலேயே குறிக்கின்றனர்.

**தாலாட்டு:**

''ஆறுரெண்டும் காவிரியா
அது நடுவில் சீரங்கமாம்
சீரங்கமாம் படித்துறையாம்
என் கண்ணே கண்மணியே
சின்னரங்கம் சன்னதியாம்
வாசலிலே வன்னிமரம்
உங்க வம்சம் ராஜா குலம்
கொல்லையிலோ கொய்யாமரம்
உன் கோத்திரமோ ராஜாகுலம்
என் கண்ணே கண்மணியே''

இப்பாட்டில் இங்கு ஓடும் காவிரியின் குறிப்பும், ஸ்ரீரங்கத்தின் குறிப்பும் வருகின்றன.

**கும்மி:**

''ஒரு பிடி மஞ்சள் ஒரு நாள் பாடஞ்செய்தேன்
ஒரச்சி குளிக்கலாமோ ஒய்யல் கும்மி ஆடலாமோ
ரெண்டு பிடி மஞ்சள் ரெண்டு நாள் பாடஞ் செய்தேன்
ஒரச்சி குளிக்கலாமோ ஒய்யல் கும்மி ஆடலாமோ
மூன்று பிடி மஞ்சள் மூணுநாள் பாடஞ் செய்தேன்
ஒரச்சி குளிக்கலாமோ ஒய்யல் கும்மி ஆடலாமோ

இவ்வாறு இப்பாடல் எண் பத்தி வரை நீண்டு கொண்டே செல்லும்.

**தலைவி வேசியை ஏசும் பாடல்:**

தலைவன் தலைவியை மணம் புரிந்து கொண்டு அவளை (தலைவியை) விட்டுவிட்டு வேறு ஒருத்தியுடன் சுற்றுகின்றான். மனைவி மனம் தாளாமல் வேசியை மிக அழகாக ஏசுகின்றாள்.

''சிவப்புக் கடதாசி சிகப்புக் கடதாசி
என்னைப் பெத்த அம்மா எனக்கு சீரங்கத்து மைக்கூடு
சிகப்பு ரயிலேறி சீரங்கம் போயிரங்கி
அந்த சீரங்கத்து தாசியுடன் சினுங்கி விளையாடலியே
சீரங்கத்து தாசியை ஒரு சிவத்தேளு கொட்டாதா
அவ தெய்வலோகம் போகாளா
என்னை தாலிக் கட்டிப் போன தருமரு
என் வாசலுக்கு விளையாட வருவதெப்போ.

இப்பாடலின் மூலம் நமக்குப் புலப்படும் உண்மை என்ன வென்றால் அந்த தாசி தேள் கொட்டி இறந்தால் ஒழிய தன் கணவன்

மீண்டும் தன் வீட்டிற்கு வரமாட்டான் என்ற நோக்கம் உடைய வளாய் இருக்கின்றாள் தலைவி. மிக நயமாகத் தன் உணர்ச்சியை அள்ளித் தெளிக்கின்றாள் தலைவி.

இவ்வாறு கருத்துகள் பொதிந்த வரலாற்று செய்திகள் மிக்க எண்ணற்ற நாட்டுப் பாடல்கள் இன்னும் பாமர மக்களிடம் வாழ்கின்றன. தெம்மாங்கு, ஒப்பாரி, தாலாட்டு, கும்மி போன்ற எண்ணற்ற வகைப் பாடல்கள் அவர்களிடம் வாழ்கின்றன. பொதுவாக நாட்டுப்புறப் பாடல்களை நோக்கும்போது இலக்கிய இலக்கணங்களின் உதயத்திற்கு முன்பே வாய்மொழி வழியாக வாழ்ந்து வருபவை. ''நாட்டுப்புறப் பாடல்கள் அனைத்தும் ஒப்பனை களற்ற ஒரு கிராமத்துப் பெண்ணை போன்று மெருகும், புனைந் துரையும் ஒப்பனைகளும் பெறாதவை. ஆனால் நாட்டுப்புறப் பாடல்கள் ஒரு நாட்டினுடைய உண்மைத் தன்மையையும் அந்த நாட்டுக் குடிமக்களின் பண்பாடுகளையும் தெள்ளத் தெளியக் காட்டும் சிறப்பினையும் பெற்றிருக்கின்றன.

நாட்டுப்புறப் பாடல்கள் அனைத்தும் அன்றும் இன்றும் பாமர மக்களிடம் வாழ்ந்தன, வாழ்கின்றன என்பதில் ஐயமில்லை.

□□□

# 2. திருச்செந்துறை சந்திரசேகரர் கோயில்

1. ஆலயமும் பெயர்க் காரணமும்
2. பாடல் பெற்ற ஸ்தலம்
3. தல விருட்சம் பலாமரம்
4. கோயில் கட்டிட அமைப்பும் தத்துவங்களும்
5. சிற்பங்கள்
6. செப்புத்திருமேனிகள்
7. ஓவியங்கள்
8. பூசையும் விழாக்களும்

## திருச்செந்துறை சந்திர சேகர சுவாமி கோயில்:

தஞ்சைக்கு அடுத்தபடியாக ஆலயங்கள் மிகுதியாக உள்ள இடம் திருச்சி மாவட்டம். திருச்சிக்கு மேற்கே ஆறு மைல் தொலைவிலும் அந்தநல்லூருக்குக் கிழக்கே ஒரு மைலிலும் உள்ள திருச்செந்துறை காவிரியின் தென்கரையில் அமைந்துள்ளது. இச்செந்துறையில் பழமையான சிவன் கோயில் ஒன்று உள்ளது. சோழர்கள் காலத்தில் கற்றளி பரமேஸ்வரர், திருச்செந்துறை மகாதேவர் என்னும் பெயரால் வழங்கப்பட்ட இத் திருக்கோயில் இப்போது சந்திரசேகர சுவாமி கோயில் என்னும் பெயரால் வழங்கப்படுகின்றது. இக்கோயில் ஒரு ஏக்கர் 52 சென்ட் பரப்பளவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

இக்கோயில் இந்து சமய அறநிலையத்துறை பாதுகாப்பின் கீழ் உள்ளது. இக்கோயிலுக்கு 12.48 ஏக்கர் நன்செய் நிலங்களும்,

1.92 ஏக்கர் புன்செய் நிலங்களும் உள்ளன. நன்செய் நிலத்தில் நெல், வாழை பயிரிடப்படுகின்றது. புன்செய் நிலத்தில் தென்னை பயிரிடப்படுகின்றது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 13,000 ஆகும். உபயமாக யாராவது பணம் கொடுத்தால் காணிக்கையாக வரவு என்று இரசீது கொடுக்கப்படுகிறது. இக்கோயிலில் 1963 லிருந்து 1973 ஆகஸ்டு வரை மழவராயர்களும், அரிஜன இனத்தைச் சார்ந்தவர்களும் தர்மகர்த்தாக்களாக இருந்து உள்ளனர். 1963ம் ஆண்டுக்கு முந்தைய செய்திகள் தெரியவில்லை. 1958ம் ஆண்டி லிருந்து இக்கோயிலுக்குச் செயல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். இப்போது இக்கோயில் சந்திர சேகர சுவாமி ஆலயம் என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றது.

## தலபுராணத்தில் சந்திரசேகரர் பெயர்க் காரணம்:

சந்திரனுக்கு 27 நட்சத்திரங்களும் மனைவியர் ஆவர். அவர்களில் உரோகிணி என்பவளே மிக அழகுடையவள். அவள் அழகில் ஈடுபட்டு அவள் ஒருத்தியுடனேயே இன்பமுற்று இருந்தான். மற்றைய 26 பெண்களும் தம்து தந்தை தஷப்ராஜா பதியிடம் முறையிட்டனர். மருமகன் சந்திரனை 27 குமாரத்திகளிடமும் அன்பாய் நடந்து கொள்ளும்படி முறையிட்டான். சந்திரன் மாமன் வார்த்தையை மேற்கொண்டு நடந்தானில்லை. தஷப்ராஜா கோபமடைந்து சந்தின் கலைகள் குன்றும்படி சாபமிட்டான். அவ்வாறே நாள்தோறும் கலைகள் குன்றத் தலைப்பட்டான் சந்திரன். மகாவிஷ்ணு முதலியோரிடம் சந்திரன் முறையிட்டும் பயன் ஏற்பட வில்லை. நாரதர் பலசாரண்ய மூர்த்தியை வழிபடும்படி உபாயம் உரைத்தார். அவ்வாறே சந்திரன் வழிபட்டான். சந்திரன் தவத் திற்கிரங்கிய சிவபிரான் சந்திரனை தமது ஜடாபாரத்தில் வைத்து ஒரு பட்சம் கலை வளரவும் ஒரு பட்சம் கலை குறையவுமாகச் செய்தார். சந்திரனை ஜடையில் சேகரித்துக் கொண்டதால் பலசாரண்ய பெருந்தகை ஸ்ரீசந்திரசேகர மூர்த்தி என்ற பெயர்

பெற்றார் என்ற புராணக் கதை வழங்கப்படுகிறது. இச்சந்திரசேக ரருக்கு மிருத்யுஞ்சய மூர்த்தி என்று மற்றொரு பெயர் இருப்பதாக வும் புராணக் கதை வழங்கப்படுகின்றது. மாகாளம் என்னும் கிராமத்தில் வசித்த சிவார்ச்சகர் சிவஸ்வாமியின் குமாரன் சிவ மூர்த்திக்கு அவமிருத்யு தோஷத்தை நீக்கியதால் மிருத்யுஞ்சய மூர்த்தி என்றும் இவ்விறைவனுக்குப் பெயர் இருப்பதாகத் தெரிய வருகின்றது.

## கோயிலும் கற்றளியாக மாற்றப்பட்ட காலமும்:

திருஞான சம்பந்தர் இக்கோயிலின் மீது பதிகம் பாடியிருக் கிறார் என்றால், பதிகம் பாடிய திருஞான சம்பந்தர் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு ஆகும். பல்லவர்கள் ஆட்சி காலத்திலேயே இக்கோயில் இருந்திருக்கின்றது எனலாம். பல்லவ அரசர்கள் ஆட்சிக் காலத்திலேயே இக்கோயில் செங்கல் தளியாக இருந் திருக்கலாம். பல்லவ அரசர் காலங்களில் சில கோயில்களே கற்றளியாக அமைக்கப் பெற்றிருந்தன. பல செங்கற் கோயில் களாகவே இருந்தன. சோழர் காலத்தில் தான் பல கோயில்கள் கற்றளிகளாக மாற்றப்பட்டன. பல கற்கோயில்கள் புதிதாக எடுக்கப் பட்டன. கற்கோயில்களாக மாற்றப்பட்டவைகளுள் திருச்செந் துறையிலுள்ள இக்கோயிலும் ஒன்று. ஞானசம்பந்தர் பாடியபோது இக்கோயில் கற்றளியாக இல்லாமல் செங்கற்றளியாக இருந்தது என்பதில் ஐயமில்லை. சோழப் பெருமானடிகள் முதல் பராந்தகன் மகன் அரிகுலகேசரியாகிய அருஞ்சயன் தேவியும் கொடும்பாளூர் பூதி விக்கிரம கேசரியின் மகளுமாகிய ஆதிச்ச பிடாரியால் கற்றளி யாக மாற்றப்பட்டது. இக்கோயிலை ஆராய்ச்சியாளர்கள் முதல் பராந்தகன் காலத்தது என்று கூறுகின்றனர். இக்கோயில் இறைவ னுக்குத் திருச்செந்துறை பெருமானடிகள் என்பது பழம்பெயர். பூதி ஆதிச்சபிடாரியார் கற்றளியாக எடுப்பித்தார் என்ற செய்தி பரகேசரி யின் மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த கோயிலில் இராசகேசரி ஆதித்தனின் 23ம் ஆண்டி லேயே ஆதிச்ச பிடாரியார் ஒரு நிவந்தம் அளித்த செய்தி கூறப்படுவ தால் இக்கோயில் ஆதிச்ச பிடாரியால் இராசகேசரி ஆதித்தக் காலத் திலேயே கட்டப்பட்டிருக்க வேண்டும்.

**பாடல் பெற்ற ஸ்தலம்:**

> **''தொழுது புறம்பனைதங்கு நின்றேகிச் சுரர் பணிவிற்**
> **றெழு திருவாலந்துறை திருச்செந்துறையே முதலா**
> **வழுவில் பல கோயில்கள் சென்று வணங்கி மகிழ்ந்தனைவார்**
> **செழுமலர்ச் சோனைத் திருக்கற்குடி மலை சேர வந்தார்''**

இப்பாடல் திருத்தொண்டர் மாக்கதையில் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் புராணத்தில் காணப்படுகின்றது. இப்பாடலில் வரும் திருவாலந்துறை என்பது திருச்செந்துறைக்கு மேற்கே ஒரு மைலில் உள்ள ஸ்தலம். இப்போது அந்தநல்லூர் என்னும் பெயரால் வழங்கப்படுகின்றது. திருச்செந்துறை திருவாலந்துறைக்கு கிழக்கே ஒரு மைலில் காவிரியின் தென் கரையில் அமைந்த ஸ்தலம். எனவே சம்பந்தர் திருவாலந்துறை இறைவனை வணங்கி அத் தலத்தைப் பாடிவிட்டு அருகிலுள்ள திருச்செந்துறைக்கும் வந்து இறைவனை தொழுது பாடியிருக்கிறார் என்பதில் சிறிதும் ஐய மில்லை.

திருச்செந்துறையே முதலா வழுவில் பல கோயில்கள் சென்று வணங்கினார் என்று சேக்கிழார் கூறுவார். இப்பெரியார் கூறியபடி திருச்செந்துறை என்பது காவிரித் தென்கரையதே யாதலில் அதன் வடகரையில் அப்பெயர் கொண்டுள்ள எத்தலமும் ஆகாது என்பது தேற்றம்.

''சம்பந்தர் பாடிய பதிகங்களில் இத்தலத்திற்குரிய பதிகம்

கிடைக்கவில்லை. திருஞானசம்பந்தர் பாடியருளிய திருப்பதி யங்கள் பதினாயிரம் என்று நம்பியாண்டார் நம்பி உரைத்துள்ளார். இதனை அவர் துன்றிய, பன்னு தமிழ் பதினாயிரம் நற்பனுவல், மன்னுபுவியர்க்கு வாய்ப்பவும், முன்னிய சிந்தனையால் சீரார் கவுணியர்க்கோர் சேயன்ன வந்தங்கவதரித்த வள்ளலை என்றும் மொய்ததொளிசேர் கொச்சை சதுரன் தன் கோமானைத் தான் செய்த, பச்சைப் பதிகத்துடன் பதினாயிரம் பா, வித்துப் பொருளை விளைக்கவல பெருமாள் என்றும் குறித்து உள்ளார். இவற்றுள் திருமுறை கண்ட காலத்தில் திருஞானசம்பந்தர் பாடிய திருப்பதி யங்களுள் 384 திருப்பதியங்களே கண்டு தொகுக்கப்பட்டன. அதனைத் திருமுறைக் கண்ட புராணம்,

''பண்புற்ற திருஞான சம்பந்தர் பதிக முந்நூற்றெண்பத்து நான்கில் இலங்கு திருமுறை மூன்று'' என்று கூறுகின்றது.

திருமுறைக் கண்ட காலத்துத் திருஞானசம்பந்தர் பாடியன வெனக் காணப்பட்ட 384 திருப்பதியங்களுள் ஒரு திருப்பதிகம் முதன் முதலில் அச்சேறிய காலத்தில் கிடைக்காது போயிற்று. எஞ்சிய முன்னூற்றெண்பத்து மூன்று திருப்பதியங்களே அச்சாகி வெளிவந்தன.

சம்பந்தர் பாடிய தலங்களுள் திருச்செந்துறை, திருவாலந் துறை (அந்த நல்லூர்) போன்ற முப்பத்து மூன்று தலங்களில் பதிகம் கிடைக்கவில்லை. திருச்செந்துறை என்பது ஈசான மங்கலம் என்ற பகுதியைச் சார்ந்ததாகக் கூறப்படுகின்றது. ஞானசம்பந்தர் பாடல்களில் இயற்கை வருணனைக் குடிகொண் டிருக்கும்

''வயல் படியுந் திருவையாறே''
''மல்லிகை மலருஞ் சோலைத் திருவையாறே''

என்று திருவையாற்றைப் பற்றி பாடியிருக்கும்போது இயற்கை மணம் கமழ்கின்றது. இவ்வாறே திருச்செந்துறை கற்றளி பரமேஸ் வரரைப் பற்றி சம்பந்தர் பாடியுள்ள பதிகம் கிடைத்திருந்தால் திருச்செந்துறையின் (7ம் நூற்றாண்டு) இயற்கை வளம், ஈசான மங்கலம் போன்றவற்றைப் பற்றிய குறிப்புகளை அறிவதற்கு ஏதுவாய் இருந்திருக்கும். துரதிருஷ்டவசத்தால் இவ்வரிய பதிகத்தை இழந்தோம். சம்பந்தர் இங்குத் தங்கிப் பாடியதாக குறிப்புகள் இல்லை. அவர் வைப்புத் தலமாகப் போகின்ற போக்கில் பாடிவிட்டுச் சென்றுமிருக்கலாம்.

## தலவிருட்சம் பலாமரம்:

இக்கோயிலின் தலவிருட்சம் பலாமரம். இத்தல விருட்சத்தைப் பற்றி ஒரு கதை வழங்குகிறது. ஆதியில் இங்கு (திருச்செந்துறை கோயிலின்) பலா மரக்காடாக இருந்ததாகவும், தேவலோகத்தவர் இருவர் ஏதோ காரணமாக பலா மரங்களாகும்படியும், மேற்படி பலா விருஷத்தின் பழங்கள் சிவபிரானிற்கு ஆராதிக்கப்பட்ட பின்னர் சாபம் நீங்கப் பெற்று நற்கதி அடைவர் என்று முடிவும் ஏற்பட்டு இருந்தது என்ற ஒரு கதை வழங்குகின்றது. மற்றொரு புராணக் கதையும் கூறப்படுகின்றது. அக்கதை

ஸ்ரீமகாலட்சுமியானவள் ஜீயருக்குப் புத்திரியாக அவதரித்து ஸ்ரீரங்கநாதரை மணந்துகொள்ள விரும்பி அப்பலா விருஷங்களின் அடியில் தவமிருந்தனள். அக்காலத்து இருந்த சோழ மன்னன் ஒருவன் வேட்டை நிமித்தம் ஒரு மானைத் துரத்தி வந்தனன். அந்த மான் ஜீயர் குமாரத்தி தவங்கிடந்த பலாமரப் பொந்தில் நுழைந்து மறைந்தது. அரசன் தூதரை ஏவி அப்பலாமரப் பொந்தை வெட்டி மானைப் பிடிக்கும்படி ஆணையிட்டான். ஏவலாளர் பலாமரப் பொந்தை வெட்டினார்கள். இரத்தம் பீரிட்டடித்தது. மான் அகப்பட வில்லை. யாரோ முனிவர் உடலுக்குத் தீங்கிழைத்துவிட்டோமோ

என்று அரசன் பதைப்பும் அச்சமும் கொண்டு தடுமாறி உழன்றான். அவ்வேளை ஓர் அசரீரி வாக்கு தோன்றியது. பலாக்கனி புறமுள் சொரூபமான திருமேனியுடைய சிவலிங்க மூர்த்தமாகத் தாம் இருப்பதையும் மான் ஏந்து வல்லியாகிய தமது தேவியரோடு விளங்கும்படி ஆலயம் நிர்மாணித்து நித்திய நைமித்திய பூஜை முறையே நடத்தும்படி உத்தரவு ஏற்பட்டது. பரமன் கருணையைப் போற்றி அரசனும் அவ்வாறே ஆலயம் அமைத்து இனாம் சொத்துக் கள் நிர்ணயம் செய்து குறைவின்றி தினசரி ஆறுகால பூஜைகளும் நடத்தி புகழுடன் அரசியற்றி நற்கதி அடைந்தான். அந்தச் சோழ மன்னன் பராந்தகன் என்றும் கூறப்படுகின்றது.

மேலும் தல விருட்சமாகிய பலா மரத்தின் பழத்தை இறைவனுக்கு ஆராதிக்கப்பட்ட பின் காவிரியாற்றில் வீசிவிட வேண்டும் என்றும் யாரேனும் அப்பழத்தை தைரியமாக உண்டால் கடுமையான வயிற்று வலியால் துன்பப்படுவர் என்றும் கூறப் படுகின்றது.

**காவேரி:**

இக்கோயிலுக்கு இறைவனை நீராட்டுவதற்கு காவிரி யிலிருந்து நீர் கொண்டுவர மானியம் வழங்கப்பட்ட செய்திகளை யெல்லாம் கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன. காவிரியைப் பற்றி ஒரு புராணக் கதையும் வழங்கப்படுகின்றன. தனது மூதாதையர் அஸ்திகளை கங்கையில் சேர்ப்பிக்கக் கருதி தனது மனையாளோடு பிரயாணமாக வந்த ஒரு பார்ப்பனன் வழியில் இந்த ஸ்தலத்தில் தங்கி காவிரி நீராடிய காலத்து கரையில் வைத்த அஸ்தி புஷ்பமாயினமைக் கண்டு கங்கையின் மிக்க காவிரியை யும் திருச்செந்துறை ஸ்தல மகிமையையும் போற்றி அஸ்திகளை

காவிரியில் கரைத்து விட்டு திருச்செந்துறையில் ஒரு பாங்குள்ள காசி விஸ்வநாதரை வழிப்பட்டுச் சென்றதாகக் கதை உள்ளது.

கோயில் விமானம், இடைக்கட்டு, முன் மண்டபம், மகா மண்டபம், திருச்சுற்று, பரிவாரக்கோயில், கோபுரவாயில் எனப் பல பகுதிகளைக் கொண்டது. ஒரு கோயிலின் கட்டிடப் பகுதியை எழுப்புவதில் ஆதாரமாக உள்ளவை 1. அதிட்டானம் 2. சுவர் 3. பிரஸ்தரம், 4. கழுத்து, 5. சிகரம், 6. குடம் என்பவையாகும். இவ்வவயங்களை அடி, கால், தோள், கழுத்து, தலை, முடி என மனித அங்கங்களுக்கு உவமிப்பர். மேற்கூறிய அமைப்புகளையெல்லாம் கொண்டு திருச்செந்துறை சந்திரசேகர சுவாமி ஆலயம் விளங்குகின்றது. இனி ஒவ்வொரு அங்கங்களை நோக்குவோம்.

## அதிட்டானம்:

அதிட்டானத்தில் சிறப்பாக பாதபந்த அதிட்டானம், பிரதிபந்த அதிட்டானம் என்று இருவகையுண்டு. ஆனால் இக்கோயில் அதிட்டானம் பிரதிபந்த அதிட்டானம் ஆகும். உப பீடம், ஜகதி மண்ணில் மறைந்துள்ளது. சோழர் காலக் கட்டிடங்களைப் பற்றி ஆய்வுகள் செய்த டாக்டர் டௌகிளாஸ் பென்னட் (Dr. Dowclass Bennet) அவர்கள் திருச்செந்துறை கோயில் அதிட்டான அமைப்பை சி3 என்ற பட்டியலில் சேர்த்துள்ளார். இந்தப் பட்டியலில் கி.பி. 866-940க்குள் கட்டப்பட்ட கோயில்களில் கீழையூர், திருச்செந்துறை, வாலிகண்டபுரம், திருநாமநல்லூர், அல்லூர் ஆகிய கோயில்களும், கி.பி. 940-970க்குள் கட்டப்பட்டுள்ள கோயில்களில் கொடும்பாளூர் கோயிலும் அடங்குகின்றன.

**சுவர்:**

அதிட்டானத்தின் மேலுள்ள பகுதி சுவர் அல்லது கால் என்று அழைக்கப்படும். இப்பகுதி வெறும் நெடுஞ்சுவராய் இருந் தால் அழகு இராது. ஆதலின் ஆங்காங்கே அரைத்தூண்களும், கோட்டங்களும் மகர தோரணங்களும் காணப்படும். இவ்வண்ணமே இக்கோயிலிலும் முற்காலச் சோழர்களின் அழகான பூ வேலைப்பாடு கொண்ட அரைத் தூண்களும், மிகவும் அழகாக அலங்கரிக்கப் பட்ட மகரத் தோரணங்களும், அத்தோரணத்தின் நடுவில் குள்ள பூதமும் உள்ளன. வடக்குப்புறத் தேவகோஷ்டத்தின் மேலுள்ள மகர தோரணங்கள் நல்ல நிலையில் உள்ளன.

கருவறைப் பகுதியை ஒட்டி தேவ கோஷ்டங்கள் உள்ளன. தெற்குப்புற தேவ கோஷ்டத்தில் சோழர் காலத்திய ரிஷப வாகனர் சிலை உள்ளது. ஆனால் தெற்குப் புறத்தில் தட்சிணாமூர்த்தி சிலைதான் இருத்தல் வேண்டும். ஆனால் அதே தேவ கோஷ்டத் தில் பிற்காலத்தில் செய்து வைக்கப்பட்ட தட்சிணாமூர்த்தி சிலை உள்ளது. மேற்கு, வடக்குப்புற தேவ கோஷ்டங்களில் சிலைகள் இல்லை.

**பிரஸ்தரம்:**

சுவற்றின் மேல் வரும் கூரையே அறையை மூடும் அங்க மாகும். பூதவரி, கொடுங்கை, யாளிவரி என்னும் பகுதிகளுடன் விளங்குகின்றது. ஒரு யாளியின் வாயிலிருந்து மனிதன் வருவது போல உள்ளது. யாளிவரி மிக அழகாக செதுக்கப்பட்டுள்ளது. குள்ள பூதங்களும் மிக அழகிய சிற்பங்களாகப் பிரஸ்தரத்தில் காட்சி அளிக்கின்றன.

### கிரீவம்:

மேலே அமைக்கப்படும் சிகரத்தில் அமைப்பை ஒட்டி கழுத்து சதுரமாகவோ வட்டமாகவோ, எண்பட்டையாகவோ அமைக்கப்படும். இக்கோயிலில் கிரீவம் சதுரமாக உள்ளது. தெற்குப் புறமுள்ள கிரீவத்தில் தட்சிணாமூர்த்தியும், வடக்குத் திசையில் நான்முகனும் மேற்குத் திசையில் திருமாலும், கிழக்குத் திசையில் உமாசகித சுகாசனரும் சுதையினால் செய்து வைக்கப் பட்டுள்ளனர். நான்கு திசையிலும் கிரீவத்தின் இருபக்கவாட் டிலும் உள்ள சுவர்களில் சுதையினால் ஆகிய அழகிய நாட்டியச் சிற்பங்கள் உள்ளன.

### சிகரம்:

கழுத்துக்கு மேல் அமையும் பகுதி சிகரம் எனப்படும். இது சதுரம், எண்பட்டை, வட்டமாகவோ அல்லது தூங்கானை மாட வடிவிலோ காணப்படும். இக்கோயிலில் சிகரம் சதுரமாக அமைந் துள்ளதால் இவை நாகர சிகரம் எனப்படும்.

### குடம்:

சிகரத்தின் மேல் கும்பம் போலும், அதன் மேல் குவிந்த தாமரை போலும் உள்ள பகுதி குடம் அல்லது கலசம் அல்லது ஸ்தூபி என்று அழைக்கப்படும். இக்கோயிலில் ஸ்தூபி கல்லால் செய்யப்பட்டிருக்கிறது.

### நிலை: (தளம்)

பிரஸ்தரத்திற்கு மேல் ஒன்று, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிலைகள் காணப்படுவதுண்டு. ஒரு நிலை உள்ள கோயில் அல்ப பிரசாதம் என்றும், இருநிலையில் உள்ள தளம்

திவி தளம் என்றும், மூன்று நிலையில் உள்ள தளம் திரிதளம் என்றும், மூன்றுக்கு மேல் காணப்பட்டால் மகாப்பிரசாதம் என்றும் கூறப்படும். இக்கோயிலின் விமானம் இரண்டு நிலையில் காணப்படுவதால் திவி தளம் எனப்படும்.

## கோபுரங்கள்:

வாயிலை அலங்கரித்து நிற்கும் அழகிய கட்டிடப் பகுதிக்குக் கோபுரம் என்று பெயர். இது பல நிலைகளை உடையதாய் இருக்கும். சோழர் காலத்திற்குப் பிறகு தமிழகத்தை விசய நகரப் பேரரசர்கள் ஆண்டனர். அவர்கள் புகழ்வாய்ந்த கோயில்கள் அனைத்திலும் மிக உயர்நத கோபுரங்களை எழுப்பினர். பொதுவாக விசய நகர மன்னர்கள் காலத்தைக் கோபுரக் காலம் என்றே கூறலாம். விசய நகர மன்னர்களில் மிகச் சிறந்த உயர்ந்த கோபுரங்களை எடுத்தவர் கிருஷ்ணதேவராயர். இக்கோயிலில் விசய நகர மன்னர்கள் காலத்துக் கோபுரம் உள்ளது. கோபுரத்தில் வாயிலில் உள்ள ஒரு கல்வெட்டில் விசய நகர மன்னனான ஸ்ரீரங்க மகாதேவர் குறிப்பிடப்படுகிறார். இக்கோயில் கோபுரத்தின் காலம் 16ம் நூற்றாண்டாக இருக்கலாம். இங்குள்ள கோபுரம் ஐந்து நிலைகளை உடையதாய் உள்ளது. எண்ணற்ற கதை உருவங்கள் கோபுரத்தை அணி செய்கின்றன.

## மண்டபங்கள்:

மண்டபங்கள் எடுக்க அதிட்டானம், கால், பிரஸ்தரம் ஆகிய மூன்று பகுதிகளே தேவைப்படும். பொதுவாக சிவாலயங்களில் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், தம்ப மண்டபம், நிருத்த மண்டபம் என ஆறு மண்டபங்கள் பெரும்பாலும் அமைந்து இருக்கும். சில கோயில்களில் கருவறை, அர்த்த மண்டபம், முன் மண்டபம், மகாமண்டபம் என்னும் பகுதிகளைக் கொண்டு இலங்கும். மேற்கூறிய கருவறை,

அர்த்த மண்டபம் ஆகியவற்றை மனித அங்கங்களுடன் ஒப்பிட்டு நோக்கும்போது கர்ப்பக்கிருகம் தலையும், அர்த்த மண்டபம் கழுத்தும், முன்மண்டபம் மார்பும்போல், மகாமண்டபம் நாபியாகவும் கோபுரம் பாதகமாகவும் திகழ்கின்றன. இக்கோயிலும் தலை, கழுத்து, மார்பு, நாபி, பாதம் ஆகிய அமைப்புகளைப் பெற்று விளங்குகின்றது.

கருவறை சதுர வடிவில் அமைந்துள்ளது. அர்த்த மண்டபத்தில் நான்கு முழுத் தூண்களும், நான்கு அரைத் தூண்களும் உள்ளன. இத்தூண்கள் பூ வேலைப்பாடும் நாட்டிய மகளிர் பல கோணங்களில் ஆடும் சிற்பங்களும் இத்தூண்களில் மிகத் துல்லியமாக செதுக்கப்பட்டுள்ளன. கருவறையும் அர்த்த மண்டபமும் அப்படியே நிலைப்பெற்று உள்ளன. முன் மண்டபம் பெரியதாக உள்ளது. இம்மண்டபத்தில் செப்புத் திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன. மகாமண்டபம் மிகப் பெரியதாக உள்ளது. முன் மண்டபமும், மகா மண்டபமும் அவற்றிலுள்ள தூண்களும் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலோ கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரகாரம்:**

திருக்கோயில்கள் பெரும்பாலும் ஐந்து பிரகாரங்களைக் கொண்டு இருக்கும். சில கோயில்களில் மூன்று பிரகாரங்கள் மட்டுமே இருக்கும். இக்கோயிலில் (திருச்செந்துறையில்) மூன்று பிரகாரங்கள் உள்ளன.

**கொடிக்கம்பம்:**

இக்கோயிலுக்கு கொடிக்கம்பம் இல்லை. ஒவ்வொரு சிவன் கோயிலிலும் கொடிக்கம்பம் இன்றியமையாமல் இருப்பது

அவசியமாகும். கடவுளர் பலருக்கும் அவரவர்களுக்குரிய தனித் ளிபான வெவ்வேறு கொடிகள் அமைந்து விளங்குகின்றன.

''கருடக் கொடியோன்'' எனத் திருமாலும் ''சேவுயரும் ண் கொடியோன்'' என்று சிவபிரானும், ''கோழிக்கொடியோன்'' ன்று முருகப் பெருமானும் பிறரும் வழங்கப்படுதல் காணலாம். சேவற்கொடியை உடைய முருகப் பெருமான் காப்பதினால், இவ் புலகமானது இன்பமாக இயங்கி வருகின்றது என்னும் கருத்தமைய

**''சேவலங்கொடியோன் காப்ப**
**ஏமவைகல் என தின்றால் உலகமே''**

எனக் குறுந்தொகை என்னும் சங்கத்தொகை நூல் பாடுகின்றது. கோழிக் கொடியை உடைய முருகன் திருவடிகளைப் பணிந்தால் தாம், நாம் இன்புற்று இனிது வாழ முடியும் என்னும் கருத்தினை, அருணகிரிநாதர்,

**''கோழிக் கொடியோன் அடிபணியாமல்**
**குவலயத்தே வாழக்கருதும் மதிமிலிகாள்''**

என வரும் கந்தரலங்காரப் பாடலில் வலியுறுத்துகின்றார். இங்ஙனமே ஒவ்வொரு கடவுளரின் கொடியையும் வியந்து பாடியிருத்தல் சமய நூல்களில் காணப்படுதலால், கொடியின் சிறப்பையும், கொடிக்கம்பத்தின் சிறப்பையும் உணர முடிகின்றது. இத்தகைய சிறப்புமிக்க கொடிக்கம்பம் திருச்செந்துறை சிவன் கோயிலில் இல்லாதது பெருங்குறையேயாகும். வருட பிரம்மோற்சவத்தின்போது முதல் நாள் கம்பத்தில் கொடியேற்றப்பட்ட பிறகுதான் சுவாமி புறப்பாடு ஆகும். இங்குக் கொடிக் கம்பமும் இல்லை. அதனால் வருட திருவிழாவும் (பிரம்மோற்சவம்) இல்லை.

**கருவறை சிவலிங்கம்:**

கோயில்களில் கருவறையின் மேலுள்ள விமானம் தூவ லிங்கம். கருவறையின் உள்ளே இருப்பது சூக்கும லிங்கம். விந்து, நாதம் என்னும் தத்துவங்களை முறையே வட்ட வடிவமாகவும், நீண்ட கோடு வடிவமாகவும் பெரியோர்கள் குறிப்பர். விந்து நாதம் ஆகிய இரண்டும் சேர்ந்து அமைந்த உருவமே சிவலிங்கம்.

**''விந்துவும் நாதமும் மேவும் இலிங்கமாம்**
**விந்துவதே பீடம் நாதம் இலிங்கமாக**
**அந்த இரண்டையும் ஆதார தெய்வமாய்**
**வந்த கரு ஐந்தும் செய்யும் அவை ஐந்தே''**

மேலும் சிவலிங்கமானது பிரணவப் பெருஞ்சிறப்புடைய மந்திரத்தின் அடையாளமாகவும் கொள்ளப் பெறும். இலிங்கத்தின் அடிப்பகுதியாகிய பீடம் ஓங்காரம். அதன் நடுப்பகுதியாகிய கண்டம் மகாரம். உள்வட்டம் உகாரம். மேற்பகுதி அகாரம்.

**''இலிங்க நற்பீடம் இசையும் ஓங்காரம்**
**இலிங்க மற்கண்டம் நிறையும் மகாரம்**
**இலிங்கத்தின் வட்டம் நிறையும்**
**இலிங்கம் அகாரம் நிறைவிந்து நாதமே''**

என்றெல்லாம் சிவலிங்கத்தின் இயல்பினைத் திருமூலர் விளக்கி யிருக்கின்றார். உலகிற்குத் தாயும் தந்தையுமாக விளங்கும் சக்தி சிவத்தின் அடையாளமே சிவலிங்கம் என்பதனை,

**''சக்தியும் சிவமும் ஆய**
**தன்மை இவ்வுலகம் எல்லாம்**
**ஒத்தொவ்வ, ஆணும் பெண்ணும்**
**உயர்குண குணியும் ஆக**

**வைத்தனன் அவளால் வந்த**
**ஆக்கும் இல்வாழ்க்கை எல்லாம்,**
**இத்தையும் அறியார் பீட**
**லிங்கத்தின் இயல்பும் ஓரார்''**

என அருள் நந்தி சிவாச்சாரிய சுவாமிகள் தமது சிவஞான சித்தியாரில் விளக்கியிருத்தல் இன்புறற்பாலது.

அதர்வண வேத சம்மிதையில், வரும் புகழ்மிக்க பாடல் ஒன்றினால் போற்றப்பெற்ற வேள்வித்தூண் ஆகிய யூபஸ்தம்பம் என்பதில் இருந்தே சிவலிங்கம் பற்றிய கருத்துத் தோன்றியது என்று சுவாமி விவேகானந்தர் அவர்கள் விளக்கி உள்ளார்கள். சோதியாய்ச் சூழொளி விளக்காய்த் திகழும் இறைவனின் திரு அடையாளமே கோயில்களிலுள்ள சிவலிங்கம். இறைவன் அல்லாத ஏனைய உயிரினங்களைக் குறிக்கும் அடையாளமே நந்தி வடிவம். இறைவனை வழிபட்டு உயிர்கள் அழித்துக் கொள்ளும் அறியாமையாகிய மலமே பலிபீடம்.

இவ்வுண்மையினை

**''ஆய பதிதான் அருட்சிவலிங்கம் ஆம்**
**ஆய பசுவும் அடலேறு என நிற்கும்**
**ஆய பலிபீடம் ஆகும் நற்பாசம்**
**ஆய அருள்நிலை ஆய்ந்து கொள்வார்க்கே''**

என்னும் திருமந்திரச் செய்யுள் தெளிவுற உணர்த்தல் காணலாம்.

திருமூலர் அருளிய திருமந்திரம் இலிங்கத்தின் சிறப்பினை, அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம் எனப் பல தலைப்புகளில் விளக்குகிறது.

இக்கோயிலில் கருவறை பத்தடி நீளம் எட்டு அடி அகலம் உள்ளது. கருவறையில் சிவலிங்கம் பலாமரத்தின் மேற்புற

முள்ளைப் போன்று அமைந்துள்ளன. சிவலிங்கத் திருவுருவம் பழமையும் பெருமையும் வாய்ந்தது. மொகஞ்சாதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் நிகழ்ந்த அகழ்வு ஆராய்ச்சிகளில் பல சிவலிங்கத் திருவுருவம் கண்டெடுக்கப் பெற்றன. பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகக் காலத்திற்கு முன்னரே சிவலிங்க வழிபாடு இந்திய நாட்டில் நிலவியிருந்தது. எனவே மேலைநாட்டு ஆராய்ச்சியாளர்கள் உலகிலேயே மிகவும் தொன்மை வாய்ந்த சமயம் சைவ சமயம் ஆதல் வேண்டும் என்னும் உண்மையை உணர்ந்து குறிப்பிட்டு உள்ளனர்.

அமெரிக்காவில் கொல்ரடோ என்னும் மலை நிலப் பகுதியில் மிகப் பெரிய சிவாலயம் ஒன்று 1937ல் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப் பட்டது. அதன் காலம் 1000 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் பழமை வாய்ந்த காலம் என்று அவர் குறிப்பிட்டுள்ளனர்.

இயற்கைக்கு ஏற்ற நிலையில் சிவலிங்கத் திருவுருவம் மிகச் சிறப்பு வாய்ந்ததொன்றாகக் காணப்படுகின்றது. நாகலிங்கம் பூவின் அமைப்பை நோக்கினால் லிங்கத்தின் அமைப்பைப் போன்ற சிறிய வடிவைக் காணலாம். மேலும் இமயமலைக்கு அணித்தேயுள்ள அமரநாதம் என்னும் புனிதத் தலத்தில், பனிக்கட்டியினால் சிவலிங்கத் திருவுருவம் அமைந்து விளங்குவதாகக் கூறப்படுகின்றது. இத்தகையப் பலச் செய்திகளை ஆராயத் தலைப்பட்டால் சிவலிங்கத் திருவுருவின் சிறப்பினை நாம் பெரிதும் அறிந்து மகிழலாம்.

## அம்மன் சந்நதி: (மானேந்தியவல்லி)

இக்கோயிலில் அம்மனுக்கு என்று தனி சந்நிதி 1939ல் கட்டப் பட்டதென்று தெரிய வருகின்றது. எந்தக் கோயிலிலும் அம்மனின்

இரு கைகளிலும் மலர் தாங்கி நிற்கும் கோலம் தான் காணப்படும். இக்கோயிலில் அம்மன் சிலை கையில் மானும் மழுவும் ஏந்தி காணப்படுகின்றார். முன்னர் கூறிய புராணக் கதைப்படி அசரீரி வாக்குத் தோன்றி பலாக்கனியின் புறமுள் சொரூபமான திருமேனி யுடைய சிவலிங்க மூர்த்தமாகத் தாமிருப்பதையும் மானேந்து வல்லியாகிய தமது தேவியோடு ஆலயம் நிர்மாணிக்க வேண்டு மென்ற வாக்குப்படி நிர்மாணித்திருக்கலாம். அதனால் அம்மனுக்கும் மானேந்திய வல்லி என்று பெயர் வந்திருக்கலாம்.

**விசுவநாதர் சந்நிதி:**

ஆலயங்கள் தோறும் விநாயகர், சுப்ரமணியர், சுவாமி, அம்பாள், சண்டேசுவரர் என்று ஐந்து மூர்த்திகளுக்கும் தனித் தனி சந்நிதிகள் அமைந்துள்ளமைக் காணலாம். இக்கோயிலில் மேற்கூறிய சந்நிதிகளோடு விசுவநாதருக்கும் ஒரு தனி சந்நிதி உள்ளது. இச்சந்நிதியில் குமுதப் படையில் கல்வெட்டுகள் காணப்படு கின்றன. இச்சந்நிதியில் அரைத் தூண்களில் காளிநடராசர் நடன மாடுவது போலும், காளிப் பணிப் பெண்களுடன் இருப்பது போலவும் சிறுசிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. சந்நிதி பழமையானது. ஆனால் சந்நிதியில் செய்து வைக்கப்பட்டுள்ள விசுவநாதர் சிலை பிற்காலத்தில் செய்யப்பட்டது.

**சிற்பங்கள்**

கி.பி. 9, 10ம் நூற்றாண்டைச் சார்ந்த கோயில்களில் சிற்பங் கள் தனித்தனியாகச் செதுக்கப்பட்டு கோட்டங்களின் உள்ளே பொருத்தி வைக்கப்பட்டிருக்கும். இங்குக் கட்டிடமும் சிற்பமும் சமநிலை வகிக்கின்றன. இக்காலக் கோயில்களைக் கண்ணுறும் போது கட்டிடமும் அதிலிருந்து தனித்ததொரு அழகுடையதாய்ச் சிற்பங்களும் தெரிகின்றன.

இக்காலக் கோயில்களில் மற்றுமொரு சிறப்பும் உண்டு. இக் கோயில்களின் அதிட்டான வர்க்கங்களில் சிவபுராணம், இராம காதை முதலிய புராண இதிகாசக் காட்சிகள் தொடர்ந்து சிறு சிறு சிற்பங்களாகச் செதுக்கப்பட்டிருக்கும். ஆனால் இக்கோயிலில் இத்தகைய சிற்பங்கள் காணப்படவில்லை.

இதே காலத்தில் பல கற்கோயில்களின் வாயில்களை அலங் கரிக்கும் துவாரபாலகர்களது சிலைகளும் மிகச் சிறப்பாகச் செய்து வைக்கப்பட்டுள்ளன. கி.பி. 9, 10ம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் காலக் கோயில் என்றால் துவாரபாலகர்களது சிலைகளைக் காணத் தவறக்கூடாது. இவ்வண்ணமே இக்கோயிலில் மிக அழகான ஆறு அடி உயரமுள்ள துவாரபாலகர் சிலை உள்ளது. கழுத்தில் அணிகலன்களுடனும் கோரைப் பற்களுடனும். கம்பீரமான தோற்றத்தில் நின்று கொண்டிருக்கிறது. ஒரு கை விஸ்மயம் மற்றொரு கை தண்டில் மேல் ஊன்றிய நிலை. சோழர்களின் சிற்பக் கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இக்கோயிலில் விசுவநாதர் சந்நிதியின் தெற்குப் புறம் உள்ள அரைத்தூணில் உள்ள சிறிய சிற்பக் காட்சியில் காளி இரண்டு பணிப் பெண்களுடன் நிற்கும் காட்சி, காளியும் நடராசரும் நடனம் புரியும் காட்சி, மேலும் ஒருவர் ஆடும் காட்சி, ஒருவன் மேளம் அடிக்க ஒருவன் பார்ப்பது போன்ற காட்சிகள் மிக நுண்ணிய முறையில் செதுக்கப்பட்டுள்ளன. இந்நுண்ணிய சிற்பங் கள் காண்போரை கவர வல்லன. இதே சந்நிதியில் பூதவரி வரிசை யில் எலி பூனையைப் பிடிப்பது போன்ற மிக அழகான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சோழர்களின் சிற்பக் கலைத் திறனுக்கு அரியதோர் எடுத்துக் காட்டாகும்.

இக்கோயிலில் இரண்டு தள விமானம் உள்ளது. இரண்டாம் தளத்தில் (உச்சிதளம்) நான்குப் புறமும் (நான்கு திசைகளிலும்)

பார்ப்பவர் கண்ணை ஈர்க்கும் வகையில் சுதையினால் ஆன நாட்டியச் சிற்பங்கள் உள்ளன. இங்குள்ள நாட்டியச் சிற்பங்கள் கூத்தின் அடிப்படையில் எழுந்தவையாக இருத்தல் வேண்டும்.

சிலப்பதிகாரத்தில் பேசப்படும் கொடுகொட்டி முதல் கடையம் ஈறான பதினொரு வகைக் கூத்துக்களும் சிவபெருமான், திருமால், முருகன், காமன், காளி, திருமகள், இந்திராணி ஆகிய தெய்வங்கள் புரிந்த ஆடல்களாகும். தீமையை வென்று நன்மையை நிலைநாட்டும் முகமாக ஒவ்வொரு தெய்வமும் அசுர சம்ஹாரம் செய்து வெற்றி கண்டதையே இப்பதினொரு ஆடல் வகைகளும் விளக்குகின்றன. தீய சக்திகளை அழித்து தூய ஆன்ம நெறியைத் தழைக்கச் செய்யும் தெய்வக் கலையாகவே தமிழரால் நாட்டியம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதற்கு இதை விடச் சிறந்த சான்றுகள் தேவையில்லை.

மேற்கூறிய கூத்து வகைகளில் வீரம், ரௌத்திரம் முதலிய ரசங்களே முக்கியமாக இடம்பெறும். பிற்காலத்தில் அபிநயத்தின் அதிமுக்கியமான ரஸமாக ஆகிவிட்ட சிருங்காரமும், ஆதியிலிருந்தே தமிழ்நாட்டு ஆடல் மரபில் பிரதானமாக இருந்து இருக்கிறது. வேத்தியில் கூத்து, பொதுவியல் கூத்து என்ற இரு முக்கியமான ஆடல் வகைகள் முறையே அகம், புறம் என்ற இரு துறைகளைச் சார்ந்தவை. இவற்றுள் வேத்தியல் என்பது அகத்துறையைச் சார்ந்தது. ஆதலால் சிருங்கார ரஸம் பிரதானமானது என்று தெரிகிறது. பரத நாட்டியத்திலும் பாவம் அபிநயம் என்று வரும்போது சிருங்காரம்தான் பிரதானமாக இருந்து வந்திருக்கிறது.

நாட்டியத்தில் சிருங்காரம் இடம்பெறுவது போல அலாரிப்பு, லயம் முக்கியமானது. அலாரிப்பு என்ற பெயருக்கு ஏற்ப நடிகை உடலையும் அதன் மூலம் உள்ளத்தையும் அலர்த்தி ஆடலுக்கான நெகிழ்ச்சியை அங்கங்களுக்கு ஊட்டுவிக்கிறாள். ஒருமுகப்பட

வைப்பதில் லயத்துக்கு ஒரு தனி ஆற்றல் உண்டு. லயிக்க வைப்பதுதான் லயம். நடிகையின் எண்ணம் பலவாறாகச் சிதறாமல் ஒருமுகப்பட்ட அலாரிப்பு பேருதவி புரிகிறது.

நாட்டிய கலையில் முக்கிய அங்கமாக விளங்குவது சிருங்காரம் என்று சொல்லலாம். சிருங்காரத்தில்தான் ஸஞ்சாீ பாவங்கள் என்பதாக, முக்கியமான ரஸத்தில் இருந்து கிளை கிளையாக விட்டுப் படர்ந்து கொண்டே செல்லும் புதிது புதிதான சூட்சுமமான பாவங்களை வெளிப்படுத்த மிக நிறைய இடம் இருக்கின்றது.

ஓர் ஆட்டத்திற்குரியவற்றை இன்னொன்றில் கலக்காமல் இருக்க வேண்டியதின் அவசியம் பற்றிச் சிலம்பு கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

**''கூடை செய்தமை வாரத்துக் களைதலும்**
**பிண்டி செய்தமை ஆடற்களைதலும்**
**ஆடல் செய்தமை பிண்டியிற் களைதலும்**
**குரவையும் வரியும் விரவல செலுத்தி''**

என்று கூறுகின்றது.

எனவே சாரீர சௌந்தரியத்தை நினைக்கும்போது நாட்டியமும் சரீர சம்பந்தமாகவே தோன்றுவதும், சிருங்காரம் என்பது ரஸாபாவமாகத் தோன்றுவதுமாகும்.

எனவே மேற்கூறிய நாட்டிய இலக்கணங்களுக்கு ஒப்பவே இக்கோயிலில் அழகான நாட்டிய சிற்பங்கள் உள்ளன. வேத்தியல், பொதுவியல் என்ற கூத்துக்களில் வேத்தியலாகிய அகத்துறையைச் சார்ந்த நாட்டிய சிற்பங்களே உள்ளன. இச் சிற்பங்களில் உடல் வளைவும், பாவனையும், கால்வளைவும்,

கைபாவனைகளையும் நோக்கும்போது உயிர் உள்ள ஒரு பெண் நின்று ஆடல் புரிவது போல் காட்சி தருகின்றன.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் செதுக்கப்பட்டுள்ள நாட்டிய கர்ணங்களின் கால் பாவமும், முக அபிநயங்களும், கை பாவங்களும் பலவிதமாக உள்ளன. எனவே இங்குள்ள நாட்டிய சிற்பங்கள் பரத நாட்டியமாகிய 108 கர்ணங்களின் அடிப்படையில் எழுந்தவையே.

திருச்செந்துறை கோயிலில் உள்ள நாட்டியச் சிற்பங்களின் கால், கை, முக பாவங்கள் வேறுவிதமாகக் காணப்படுகின்றன. எனவே இங்குள்ள நாட்டிய சிற்பங்கள் கூத்தின் அடிப்படையில் எழுந்தவை என உறுதியாகக் கூறலாம்.

மேற்கூறிய நாட்டியச் சிற்பங்களேயன்றி சாலையும் கூடும் உள்ள கண்டப் பகுதியில் சிறு சிறு சிற்பங்கள் உள்ளன. கண்ணாடியைப் பார்க்கும் காட்சி, வருத்தத்துடன் கன்னத்தின் மீது கை வைத்திருக்கும் காட்சி, அவல நிலையுடன் காணப்படும் காட்சி, மிகுந்த மகிழ்ச்சியுடன் உள்ள காட்சி போன்ற பல்வகை மெய்ப்பாடுகளுடன் இங்குள்ள சிற்பங்கள் காணப்படுகின்றன.

இச்சிற்பங்களைக் கண்ணுறும்போது தொல்காப்பியர் மெய்ப்பாட்டியல் என்னும் அதிகாரத்தில் கூறியுள்ள எண்வகை மெய்ப்பாடுகள்தான் நினைவுக்கு வருகின்றன.

**''நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடு''**

என்று மிக அழகாக இலக்கணம் வகுக்கின்றார்.

நகையென்பது சிரிப்பு, அழுகை என்பது அவலம், இளவர லென்பது இழிபு, மருட்கையென்பது வியப்பு, அச்சமென்பது பயம், பெருமிதமென்பது சருத்திரம், உவகையென்பது காமம் முதலிய மகிழ்ச்சி. இந்த எண்வகை மெய்ப்பாடுகளுக்கு ஒப்பவே சாலையும் கூடும் உள்ள கண்டப் பகுதிகளில் உள்ள சிற்பங்கள் விளங்குகின்றன.

தொல்காப்பியர் கூறிய மெய்ப்பாட்டின் எண்வகைச் சுவையும் நாட்டிய ரசனைக்கு இன்றியமையாததுதான்.

இக்கோயில் அர்த்த மண்டபத்தில் முற்காலச் சோழர்களின் தூண்கள் உள்ளன. நான்கு அரைத் தூண்களும் நான்கு முழுத் தூண்களும் உள்ளன. இத்தூண்கள் 16 பட்டைகளை உடையனவாய் ஒரு பட்டையில் பூ வேலைப்பாடும், ஒரு பட்டையில் மிக நுண்ணிய முறையில் செதுக்கப்பட்ட நாட்டியச் சிற்பங்களும் உள்ளன. இத்தூண்களில் மிக நுண்ணிய முறையில் நாட்டிய சிற்பங்கள் செதுக்கப்பட்டிருப்பது முற்காலச் சோழர்களின் சிற்பக் கலைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. கி.பி. 9, 10ம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர்களின் கோயிலைக் கண்ணுறும்போது கட்டிடமும் தெரிகிறது, அதிலிருந்து தனித்ததொரு அழகுடையதாய்ச் சிற்பங்களும் தெரிகின்றன என்ற திரு. இரா. நாகசாமி அவர்களின் கருத்திற்கு ஒப்பவே இக்கோயிலும் சிற்பங்களும் விளங்குகின்றன.

நாட்டியக்கலை சோழர்கள் காலத்தில் புத்துயிர் பெற்றது எனலாம். நாட்டிய நங்கைக்குத் தலைக் கோலி என்ற பெயர் சூட்டி பரவலானதொரு செயல்முறையாக்கியதும் சோழர்கள் காலத்தில்தான். சோழர்கள் காலத்தில் கோயில்களில் எண்ணற்ற பதியிலார்கள் இருந்திருக்கிறார்கள். இக்கோயிலிலும் தேவதாசிகள் இனத்தைச் சேர்ந்த பெண்கள் பொட்டுக் கட்டிக் கொண்டு நடனம்

ஆடியதாகவும், அவர்களுக்கென்று மானியங்கள் வழங்கப்பட்டிருந்தமையும் தெரிய வருகின்றன.

இப்பெண்கள் (தேவதாசிகள்) கோயில்களில் பொட்டுக் கட்டிக்கொண்டு இருந்திருக்கின்றனர் என்பதை விளக்கும் வகையில், தேவதாசி தன் இறுதிக் காலத்தில் பொட்டுக் கட்டிக் கொண்ட தன் மகளுக்கு வழங்கும் அறிவுரையாக ஒரு பாடல் உள்ளது.

**''மாலைக் குளியனையும்**
**மார் பகத்து மயிரனையும்**
**சேலைப் பகட்டனையும்**
**சேராதே என் மகளே**
**கோயில் கணக்கனையோ**
**கொஞ்சமும் நீ நம்பாதே''**

என்னும் இப்பாட்டால் அறியலாம்.

# செப்புத் திருமேனிகள்

சோழர்களின் காலம் செப்புத் திருமேனிகளின் பொற்காலம் எனலாம். சோழப் பெரு மன்னர்கள் பெருங்கோயில்கள் பல எடுத்தனர். அவற்றிற்கு (கோயிலுக்கு) ஏராளமான செப்புத் திரு மேனிகளை செய்தளித்துள்ளனர். ஆதித்த சோழன், பராந்தகன் ஆகிய மன்னர்களின் காலத்தில் செய்தளிக்கப்பட்ட செப்புத் திருமேனிகள் அழகானவை. அவர்களால் எடுக்கப்பட்ட கோயில் களில் உள்ள சிற்பங்களை ஒத்து இவை விளங்குகின்றன.'' பொதுவாக சோழர்களின் காலம் செப்புத் திருமேனிகளின் காலம் எனலாம்.

மேற்கூறிய ஆதித்தன், பராந்தகன் காலத்தில்தான் கொடும் பாளூர் மன்னன் பூதி விக்ரம கேசரியின் மகளும் அரிகுலகேசரி யின் தேவியுமான பூதி ஆதிச்சபிடாரி இக்கோயிலைக் கற்றளியாக எழுப்பி பல நிவந்தங்கள் கொடுத்து இருக்கின்றார். டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் தமிழகக் கோயிற் கலைகள் என்ற நூலில் குறிப்பிட்டவாறு ஆதித்தன், பராந்தகன் ஆகிய மன்னர்களின் காலத்தே செய்தளிக்கப்பட்ட செப்புத் திருமேனிகள் அழகானவை என்னும் கருத்தை உடையவர். ஆனால் இக்கோயில் அவர்கள் காலத்துக் கற்றளியாக மாற்றப்பட்டிருப்பினும் அவர்களின் பெருமையை சொல்லும் அளவிற்கு இவர்கள் காலச் செப்புத் திருமேனிகள் ஒன்றுகூட நிலைத்து இல்லை. 18, 19ம் நூற் றாண்டைச் சேர்ந்த செப்புத் திருமேனிகளே உள்ளன. இத் திருமேனிகளின் புகைப்படங்களும் தரப்பட்டிருக்கின்றன.

இரண்டு மற்றும் நான்கு கரங்களையுடைய இச்செப்புத் திருமேனிகளின் வலது இடதுபுறங்களில் மேல், கீழ் கரங்கள் உள்ள நிலை, தாங்கிய பொருட்கள் பற்றி சுருக்கமாகக் கீழே தரப்பட் டிருப்பதைக் காண்க.

**கணேசர்**

நான்கு கைகள் - 38 செ.மீ. உயரம் உள்ளன. 19ம் நூற்றாண்டைச் சார்ந்தது.

| | |
|---|---|
| அங்குசம் | பாசம் |
| தந்தம் | மோதகம் |

**சந்திரசேகரர்**

நான்கு கைகள், 65 செ.மீ. உயரம் உள்ளன. 19ம் நூற்றாண்டைச் சார்ந்தது.

| | |
|---|---|
| மழு | மான் |
| அபயம் | வரதம் |

**சந்திரசேகர அம்மன்**

இரண்டு கைகள், 58 செ.மீ. உயரம் உள்ளது. 19ம் நூற்றாண்டைச் சார்ந்தது.

| | |
|---|---|
| கிளி | லோல அஸ்தம் |

**நடராஜர்**

ஆனந்த தாண்டவம், நான்கு கைகள், 86 செ.மீ. உயரம் உள்ளது.

| | |
|---|---|
| தமருகம் | சுடர் |
| அபயம் | லோல அஸ்தம் |

**சிவகாம சுந்தரி:**

இரண்டு கைகள், 65 செ.மீ. உயரம் உள்ளன. 18ம் நூற்றாண்டு

| | |
|---|---|
| சூசும்ப அஸ்தம் | லோல அஸ்தம் |

## இளம்பூலியம்மன்

நான்கு கைகள், 60 செ.மீ. உயரம் உள்ளன. 19ம் நூற்றாண்டைச் சார்ந்தது.

| | |
|---|---|
| தமருகம் | பாசம் |
| திரிசூலம் | கபாலம் |

இச் செப்புத் திருமேனிகளைத் தவிர சண்டி, சோமாஸ் கந்தர், வள்ளி, தெய்வயானை, சுப்ரமணியர், அஸ்திரதேவர் திருமேனிகளும் உள்ளன.

சோழர்காலச் செப்புத் திருமேனிகள் கண்கள் பேசும். உதடுகள் புன்சிரிப்பை விவரிக்கும். இத்தகைய செப்புத் திருமேனிகள் இக்கோயிலில் இல்லாமை துர்பாக்கியமே. இந்து மன்னர்கள் ஆற்றலிழந்து இந்துக கோயில்கள் பாதுகாப்பற்று பேணுவாரற்றுக் கிடந்த காலங்களில் கோயில்கள் வழிபாடு குன்றிய நிலையில் இருந்திருக்கும். கோயில் வழிபாடற்ற நிலையில், கோயில்களில் இருந்த செப்புத் திருமேனிகள் பின்னப்பட்டிருக்கலாம். 18ம், 19ம் நூற்றாண்டு கலையழகுக் குன்றிய செப்புத் திருமேனிகள் தான் இன்று இக்கோயிலில் காணப்படுகின்றன.

**சிலைகள்:**

நவக்கிரகங்களின் சிலைகள் இக்கோயிலில் 1945ம் ஆண்டு பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டவை. சிலைகளில் பைரவர்

ஒன்றுதான் 14ம் நூற்றாண்டைச் சார்ந்தது. பைரவர்க்கு நான்கு கைகள் உள்ளன. நின்ற நிலையில் உள்ளது. காதுகளில் மகர, பத்ர குண்டலங்கள் உள்ளன.

| | |
|---|---|
| உடுக்கை | பாம்பு |
| சூலம் | கபாலம் |

சூரியனும் 14ம் நூற்றாண்டு என்று சொல்லலாம். நின்றநிலை, இரண்டு கைகள், கைகளில் மலர்கள், பிரவையுடன் உள்ளது. விசுவநாதர், திருமகள், தண்டாயுதபாணி, முருகன் ஆகிய சிலைகள் 100 வருடங்களுக்கு முன் செய்து வைக்கப்பட்டவையாய் உள்ளன.

**ஓவியங்கள்**

கி.பி. 7ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் நாட்டில் மறைந்திருந்த ஓவியக் கலைக்குப் புத்துயிர் கொடுக்கப் பல்லவப் பேரரசு தோன்றியது. பல்லவ வேந்தர்களைப் போல் முற்காலப் பாண்டியர்களும் ஓவியக் கலையை வளர்த்தனர். சோழர்கால வனப்புமிக்க ஓவியங்களில் இன்றும் நாம் காணுமாறு இருப்பவை தஞ்சைப் பெருங்கோவில் ஓவியம். திருச்செந்துறை கோயில் சோழர் காலத்தவையாக இருப்பினும் அவர்கள் பெருமையை சொல்கின்ற அளவிற்கு எந்த ஓவியமும் காணப்பவில்லை. சோழர்களுக்குப் பின் ஆண்ட விசயநகர அரசர்களும் ஓவியக் கலையில் சிறந்து விளங்கினர். இக்கோயிலில் விசயநகர அரசர் கல்வெட்டுக்களும் உள்ளன.

இக்கோயிலின் கருவறை தேவகோஷ்டத்தில் அழிந்த நிலையில் ஓவியங்கள் காணப்படுகின்றன. வடக்குப்புறம் கருவறைய்யை ஒட்டிய தேவகோஷ்டத்தில் உள்ள ஓவியங்கள்

அழிந்த நிலையில் உள்ளன. இலேசாக மூன்று தலைகள் மட்டும் தெரிகின்றன. இந்த ஓவியம் பிரம்மனாக இருக்கலாம். ஏனென்றால் வடக்கு தேவகோஷ்டம் பிரம்மனுக்கு உரியது. அதுபோலவே மேற்குப்புற தேவகோஷ்டத்தில் ஓவியம் அழிந்த நிலையில் உள்ளது. மேற்குப்புற தேவகோஷ்டம் விஷ்ணுவிற்கு உரியதாகை யால் விஷ்ணுவாக இருக்கலாம்.

சோழர்கள் காலத்தில் அந்தந்த தேவகோஷ்டத்தில் இருக்க வேண்டிய சிலைகள் இருந்திருக்க வேண்டும். அதற்குப் பின்பு வந்த விசய நகர அரசர்களின் காலத்தில் சிலைகள் அகற்றப்பட்டு, அந்தந்த தேவகோஷ்டங்களுக்கு உரிய இறை உருவங்கள் ஓவியங் களாகத் தீட்டப்பட்டு இருக்கலாம்.

தெற்குப்புற தேவகோஷ்டத்தின் பக்கச் சுவற்றில் கிளியும், பூமாலை போன்ற அமைப்புடைய ஓவியம் தீட்டப்பட்டுள்ளன. வடப்புறம் உள்ள பூவேலைப்பாடு கொண்ட அரைத்தூண் பகுதி களில் காவிநிறம் தீட்டப்பட்டுள்ளது. கிழக்குப்புறம் கொடுங் கையின் கீழ் அழகான பச்சையும் மஞ்சளும் கலந்த நிறத்தில் அழகான பூப்போன்ற வேலைப்பாடு உள்ள ஓவியம் தீட்டப்பட் டுள்ளது. கொடுங்கைப் பகுதிகளில் எல்லாம், காவி நிறம் பூசப்பட்டுள்ளது.

இக்கோயிலில் விசய நகர காலத்து ஓவியங்கள் இருந்திருக் கின்றன. தெளிவாக இல்லை. சிதைந்து காணப்படுகின்றன. இவ்வோவியங்களின் காலம் 16ம் நூற்றாண்டாக இருக்கலாம்.

**பூசையும் திருவிழாக்களும்:**

இக்கோயிலில் 28 ஆகமங்களில் காரண ஆகம முறைப்படி தினசரி இரண்டு கால பூசைகள் நிகழ்கின்றன. காலை 8 மணி

யிலிருந்து 9 மணிக்குள்ளும், மாலை 5½ மணியிலிருந்து 6½ மணிக்குள்ளும் இரண்டு கால பூசைகள் நிகழும். இந்த பூசையின் போது வெற்று சாதம் இறைவனுக்குப் படைக்கப்படுகின்றது. தினமும் நிகழாது மாதத்தில் ஓரிரு நாட்கள் நிகழும் பூசை நைமித்திக பூசையாகும். நைமித்திக பூசை இக்கோயிலில் இல்லை. பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை வரும் பிரதோஷம் மற்றும் மாதத்திற்கு ஒருமுறை வரும் கிருத்திகை நாட்களில் இறைவன் புறப்பாடு இல்லை. இக்கோயிலில் பரிவார தேவதைகள் இல்லை. அதனால் திக்பலி கொடுத்தல் இல்லை. நித்திய பூசைகள் மட்டும் தவறாமல் நிகழ்ந்து வருகின்றன.

இக்கோயிலில் பரம்பரை வழக்கப்படி முதல் 20 நாளைக்கு ஒரு குருக்களும் கடைசி பத்து நாட்களுக்கு மற்றொரு குருக்களும் பூசை செய்கின்றனர்.

**விழாக்கள்:**

வருட பிறப்பு, வைகாசி விசாகம், ஆடிவெள்ளி, ஆடிமாதம் பிறப்பு, ஆடிப்பெருக்கு, ஆடி அமாவாசை, விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, துலாவிசு, கந்தர் சஷ்டி, தீபாவளி, கார்த்திகை, சோம வாரம், தனுர் மாதம் 30 நாட்கள், திருவாதிரை, தைப்பூசம், தை வெள்ளி, தை அமாவாசை, மாசிமகம், சிவராத்திரி, பங்குனி உத்திரம் ஆகிய பண்டிகை நாட்களில் இக்கோயிலில் விசேட வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மேற்கூறிய விழாக்களில் முக்கியமாக நடைபெறுவன, ஆவணியில் சதுர்த்தி, புரட்டாசியில் நவராத்திரி, விஜயதசமி, கார்த்திகை தீபம், மார்கழியில் ஆருத்திரா தரிசனம், மாசியில் மகா சிவராத்திரி முதலிய விழாக்கள்.

**சதுர்த்தி:**

இக்கோயிலின் வெளியே 10 அடி தொலைவில் சிறிய விநாயகர் ஆலயம் உள்ளது. இந்த விநாயகருக்கு 10 நாட்களும் சாயரட்சை பூசையும் ஒன்பது நாட்களும் சுவாமி புறப்பாடும் நடைபெறும்.

**நவராத்திரி:**

அர்த்த மண்டபத்தை அடுத்து முன்மண்டபத்தில் ஒரு சிறிய மண்டபம் உள்ளது. அதற்கு சபா மண்டபம் என்று பெயர். அந்த சபா மண்டபத்தில் உள்ள நடராசரை இறக்கிவிட்டு தனி யம்மனை வைத்து ஒன்பது நாட்களும் இரவு ஏழு மணிக்கு சுண்டல் படைத்து பூசை செய்வது வழக்கம்.

**விஜயதசமி:**

விஜயதசமி அன்று நடக்கும் திருவிழாவிற்கு அம்பு போடுதல் என்று பெயர். இந்த திருவிழா விசேடமாக நடக்கும். அசுரனை சம்ஹாரம் செய்ய ஒன்பது நாள் இறைவி ஊசி முனையில் நின்று தவம் செய்ததாகவும், பத்தாம் நாள் இறைவி இறைவனிடம் அம்பைக் கொடுத்து அசுரனை சம்ஹாரம் செய்ய சொல்லி கூறியதாகவும் கதை. இறைவனும் இறைவியின் வேண்டுகோளுக்கு இணங்கி குதிரை மீது ஏறி அசுரனை அழிக்கச் செல்வார். இவ்வாறு விஜயதசமி அன்று சுவாமி புறப்பாடு சிறப்பாக நடைபெறும்.

**கார்த்திகைத் தீபம்:**

கார்த்திகைத் தீபத்தன்று நடக்கும் திருவிழாவிற்குச் சுடலைத் தகனவிழா என்று பெயர். சுடலைத் தகன நாளன்று நான்கு பக்கமும் மட்டையை வைத்து வீடு போன்ற அமைப்பை

உண்டாக்கி தீப்பந்தத்தால் கொளுத்துவர். அப்போது சுவாலையில் லிங்கம் தெரிவதாகவும், அந்த லிங்கத்திற்கு அக்கினி லிங்கம் என்றும் கூறப்படுகிறது. அப்போது பிரதிஷ்டமாக இறைவன் வருவதாக ஐதீகம்.

## ஆருத்திரா தரிசனம்:

ஆருத்திராவிற்கு முதல் நாள் விடியற்காலை நான்கு மணிக்கு நடராசருக்கு அபிடேகம் நடக்கும். திருவாதிரைக் களி செய்து இறைவனுக்கு நைவேத்தியமாக படைப்பது வழக்கம்.

## மகாசிவராத்திரி:

மகா சிவராத்திரியின்போது அம்மனுக்கு நான்கு கால பூசைகள் நடைபெறும். சாயரட்சை எட்டு மணிக்கும், இரவு 11 மணிக்கும், நடு இரவு இரண்டு மணிக்கும், விடியற்காலை ஐந்து மணிக்கும் நடைபெறும். இந்த நான்குகால பூசைக்கும் நான்கு விதமான நைவேத்தியம் படைத்தல் வழக்கம். தயிர்ச் சாதம், வெண் பொங்கல், சர்க்கரைப் பொங்கல், சாம்பார் சாதம் முதலியன செய்து படைப்பர். மேற்கூறிய விழாக்கள் இக்கோயிலில் சிறப்பாக நடைபெறுகின்றன.

## அரங்கநாதர் மண்டபம்:

இக்கோயிலுக்கு தெற்கில் ஒரு மண்டபம் உள்ளது. இதன் அருகில் லக்ஷ்மி குளமும் உள்ளது. இம்மண்டபத்திற்கு ஆண்டு தோறும் பங்குனி சுக்ல அஷ்டமி திருவாதிரை பொருந்துகிற நாளில் ஸ்ரீரங்கநாதர் காவிரிக்கரை வழியாகவே இம்மண்டபத்திற்கு எழுந்தருளி சாஸ்திரோத்த முறைப்படி இறைவன் தமது மடித்தலத்தில் ஸ்ரீதேவியை மகள் முறைக்கொண்டு அமர்த்தி ஸ்ரீரங்கநாதருக்கு கன்னிகாதானமாகத் தாரை வார்த்துக் கொடுப்பதாக மரபு.

பின்பு ரங்கநாதருக்கு அபிடேகம் நடைபெறும். திருமணம் செய்து கொடுக்கும்போது, மண்டபத்திற்கு ஏதிரிலுள்ள குளத்திலிருந்து தான் இலக்குமியை அழைத்துவருதல் மரபு. திருமணம் முடிந்த வுடன் திருச்செந்துறையில் உள்ள வேணுகோபால் பெருமாள் கோயிலுக்கு அரங்கநாதர் சென்று அங்கும் பூசைகள் பெற்றுக் கொண்டு மாலை ஸ்ரீரங்கம் சென்றுவிடுவார். திருச்செந்துறையில் குயவர்கள் செய்யும் மட்பாண்டம் இன்றும் ரங்கநாதருக்குச் செல்கிறது. இங்கு ரங்கநாதர் வந்து இலக்குமியை திருமணம் செய்து கொண்டு செல்லும் நிகழ்ச்சி இன்றுவரை ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றது.

## ஜம்புநாதர் மண்டபம்:

திருச்செந்துறை சந்திரசேகர சுவாமி கோயிலிலேயே வடக்குப் புறமாக ஒரு மண்டபம் உள்ளது. அந்த மண்டபத்திற்கு வருடத் திற்கு ஒரு நாள் சித்திரை மாதத்தில் திருவானைக்காவலிலிருந்து ஜம்புகேஸ்வரம் அகிலாண்டேஸ்வரி அம்மனைக் கொணர்ந்து இந்த மண்டபத்தில் அமர்த்தி பூசைகளும் அபிடேகமும் நடத்தி உற்சவம் கொண்டாடப்பட்டு மாலை திருவானைக்காவலுக்கு கொண்டு சென்றுவிடுவார். இவ்விழா இப்போது ஆண்டுதோறும் நடை பெறுவதில்லை. ஜம்புநாதர் மண்டபம் மட்டும் இன்றும் நிலை பெற்றிருக்கின்றது.

இக்கோயிலில் விசேட நாட்களில் சுவாமி புறப்பாடு ஆகும்போதும் பூசையின்போதும் மேளம் நாதஸ்வரம் ஆகியவை வாசிக்கப்படுகின்றன. ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டு தலைமுறையாக வாசித்து வருகின்றனர். இவர்களுக்கு மாதம். இரண்டு கலம் நெல்லும் பஞ்சப்படி பத்து ரூபாயும், தினமும் நான்கு பட்டை சாதமும் கொடுக்கப்படுகின்றது.

### கோயில் வாகனங்கள்:

ரிஷப வாகனம் சந்திரசேகரருக்கு உரியது. மூஞ்சுரு வாகனம் விநாயகருக்கு உரியது. குதிரை வாகனம் அம்பு போடும் திருவிழா அன்று அசுரர்களை அழிக்கும் முகத்தான் இறைவன் இறைவியின் பொருட்டு பயன்படுத்தப்படும்.

### வெண்கலத்தேர்:

இக்கோயிலுக்குச் சோழர்கள் காலத்தில் வெண்கலத்தேர் ஒன்று இருந்ததாகவும், திருவிழா பவனியில் நாட்டியப் பெண்கள் அசந்தர்ப்பம் ஆகிவிட்டதாகவும் அப்போது தேர், ஓடையில் அமிழ்ந்து மறைந்ததாகவும், அப்போது தேரில் இருந்த அர்ச்சகரால் உற்சவ மூர்த்திகளுக்கு ஆபத்து நேராவண்ணம் பூமியில் இருந்து தள்ளப்பட்டு தாமும் உயிர்த் தப்பினர் என்றும் அதனால் உற்சவ விக்ரகத்திற்கு ஏற்பட்ட வடு இன்றும் காணப்படுவதாகவும் ஒரு கதை வழங்குகின்றது.

### பூரண கும்பம்:

சோழர்கள் காலத்தில் இக்கோயிலில் பொட்டுக் கட்டிக் கொண்டு தேவதாசி பெண்கள் அர்த்தஜாம பூஜையின்போது நட்டுவனார், நட்டுவாங்கம் பாட தேவதாசி பூர்ண கும்ப விளக்கை கையில் வைத்துக் கொண்டு இறைவன் சந்நிதானத்தில் ஆடிய தாகவும், ஆடி முடிந்த பிறகு குருக்கள் விளக்கின் திரியை கீழே போட்டுவிட்டு, விளக்கை தேவதாசி பெண்ணிடமிருந்து வாங்கி கீழே வைத்து விடுவாராம். இக்கோயிலில் ஆறுகால பூசைகள் நடைபெற்றதாகவும் கூறப்படுகின்றது. காலச் சந்தி ஆறிலிருந்து ஏழு மணிக்கும், உச்சிக்காலம் பத்திலிருந்து பன்னிரண்டு மணிக்கும், சாயரட்சை ஐந்திலிருந்து ஆறு மணிக்கும், அர்த்தஜாமம் ஏழு

மணியிலிருந்து எட்டு மணிக்கும் பள்ளியறை எட்டு மணியிலிருந்து ஒன்பது மணிக்கும் ஆக ஆறுகால பூஜைகள் நிகழ்ந்ததாகக் கூறப் படுகின்றது.

## ஆபரணங்கள்:

இக்கோயிலுக்குத் தங்கம், வெள்ளி, பித்தளை, தாமிரத்தால் செய்யப்பட்ட ஆபரணங்கள் உள்ளன. அம்பாள் பொட்டு, உற்சவ விக்கிரகத்தின் திருமாங்கல்யம் ஆகியவை தங்கத்தால் ஆனவை. திருமாங்கல்யம் வெள்ளிக்கொடியில் கோர்த்தது. வெள்ளியால் ஆன உற்சவக் கிரீடம், அம்பாள் உற்சவக் கிரீடம், காதுதோடு, ஹஸ்தம், பாதம், கண்டாபரணம், விபூதிப்பட்டம், நெற்றிப்பட்டம், புல்லாக்கு, தும்பிக்கை, சுவாமி, அம்மன் ஒட்டியாணம், ரோல்டு கோல்டு செயின், பித்தளை ஒட்டியாணம், பித்தளையால் செய்யப் பட்ட கண்ணாடிக் கல் பதக்கம், தாமிர அஸ்தம், தாமிரவேல் முதலிய ஆபரணங்கள் உள்ளன. மேற்கூறிய ஆபரணங்கள் உற்சவத்தின்போது அணியப்படுகின்றன.

# 3. வரலாற்றுச் செய்திகள்

இந்திய வரலாற்றை அறிய உதவும் மூலங்களுள் கல்வெட்டும் ஒன்று. சோழ, பாண்டிய, பல்லவர்கள் காலத்துக் கல்வெட்டுகள் எண்ணற்றவையாகக் காணக்கிடைக்கின்றன. இக்கல்வெட்டுகள் இறைவன் குடியிருக்கும் கோயிலின் பெயர். இறைவன் பெயர், கொடை பற்றியச் செய்திகள், எதற்காக கொடுக்கப்பட்டன. சமூக வரலாறு, நாட்டு வரலாறு, அன்றாளும் அரசனின் மெய்கீர்த்தி, அவர்தம் ஆட்சியாண்டு இன்னும் பிற செய்திகளை நமக்குப் பறைசாற்றி நிற்கின்றன. இக்கோயிலில் பிற்காலச் சோழ அரசர் களின் கல்வெட்டுகளும் விசயநகர அரசன் ஸ்ரீரங்கதேவ மகாராயர் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.

## மன்னர்கள்:

இக்கோயிலில் இராஜகேசரி, பரகேசரி, மதுரைகொண்ட பரகேசரி, முதலாம் இராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன், இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராஜாதி ராசன், விசயநகர அரசன் ஸ்ரீரங்கமகாதேவர் ஆகியோர் காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

சோழர்காலக் கல்வெட்டுகளை இருவகையாகப் பிரிக்கலாம். முதலாம் இராசராசன் அரியணை ஏறும் வரையில் ஆண்ட சோழ மன்னர்களின் கல்வெட்டுகள் என்றும், இராஜராஜன் காலம் தொடங்கி பின்னர் ஆண்ட மன்னர்களின் கல்வெட்டுகள் என்றும் கொள்ளலாம். முற்காலச் சோழர்களின் கல்வெட்டுகள் பெரும்பாலும் பரகேசரி அல்லது ராஜகேசரி என்றே குறிக்கப்பட்டிருக்கும். இங்குள்ள கல்வெட்டுகள் இராஜகேசரியின் இரண்டு, நான்கு,

இருபது, இருபத்துமூன்று ஆகிய ஆட்சி ஆண்டுகளைக் குறிக் கின்றன. முற்காலச் சோழர்களில் ராஜகேசரி என்ற பட்டம் புனைந்து ஆண்டவர்கள் ஆதித்தன், கண்டராதித்தன், சுந்தர சோழன் முதலானோர். இவர்களின் ஆட்சி ஆண்டை நோக்கும்போது ஆதித்தன் 36 ஆண்டுகளும் கண்டராதித்தன் ஏழு ஆண்டுகளும், சுந்தரசோழன் 13 ஆண்டுகளும், ஆட்சி புரிந்திருக்கிறார்கள். ஆனால் ராஜகேசரியின் கல்வெட்டுகள் 23ம் ஆட்சி ஆண்டுவரை உள்ளன. எனவே இக்கல்வெட்டில் வரும் ராஜகேசரி, ஆதித்தன் என்பதில் ஐயமில்லை.

## மதுரை கொண்ட கோப்பரகேசரி:

மதுரை கொண்ட கோப்பரகேசரியின் கல்வெட்டுகள் மூன்று உள்ளன. இக்கல்வெட்டுகள் பன்னிரண்டு பதினாறு, இருபது ஆகிய ஆட்சி ஆண்டுகளைக் குறிக்கின்றன. மதிரை கொண்ட கோப்பரகேசரி என்ற பட்டம் புனைந்து ஆண்டவன் முதலாம் பராந்தகன். எனவே இக்கல்வெட்டுகள் இவன் காலத்ததே.

## பரகேசரி:

பரகேசரியின் கல்வெட்டுகள் 21 உள்ளன. இரண்டாம் ஆட்சி ஆண்டிலிருந்து முப்பத்தாறாம் ஆட்சி ஆண்டு வரையிலான கல்வெட்டுகள் உள்ளன. இராஜராஜன் காலத்திலிருந்து மெய்க் கீர்த்தியை வைத்துக்கொண்டு எந்த அரசன் என்று கண்டுபிடித்து விடலாம். முற்காலச் சோழர்களில் பரகேசரி என்ற பட்டம் புனைந்து ஆண்ட அரசர்கள் விசயாலயன், முதலாம் பராந்தகன், அரிஞ்சயன், உத்தம சோழன். இவர்களில் விசயாலயன் கல்வெட்டாய் இருந்தால் ''தஞ்சைக் கொண்ட கோப்பரகேசரி'' என்று தொடங்கும். எனவே விசயாலயன் கல்வெட்டுகள் இல்லை எனக் கூறலாம். அரிஞ்சயன் ஒரு சில ஆண்டுகளே ஆட்சி புரிந்து இருப்பதால் அவனுடைய

கல்வெட்டுகளும் இல்லை. உத்தம சோழன் 15 ஆண்டுகளே ஆட்சி புரிந்து இருக்கிறான். ஆனால் பரகேசரி கல்வெட்டுகள் இரண்டாம் ஆட்சி ஆண்டிலிருந்து 36ம் ஆட்சி ஆண்டு வரைக் காணப்படுவதால் பரகேசரி கல்வெட்டுகள் அனைத்தும் முதலாம் பராந்தகனுடையது எனலாம்.

எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் பரகேசரியின் மூன்றாம் ஆட்சி ஆண்டு கல்வெட்டைக் கொண்டு பரகேசரி என்று வரும் கல்வெட்டுகள் பராந்தகனுடையதே என்கிறார். மதிரைகொண்ட கோப்பரச்கேசரி என்ற பட்டப் பெயரை கல்வெட்டில் குறிப்பிடாமல் விட்டு இருக்கலாம். மேலும் பாரதாயநக்கன் என்பவன் மதுரைக் கொண்ட பரகேசரியின் மூன்று கல்வெட்டுகளில் காணப்படு கின்றான். அவற்றில் ஒன்று பராந்தகனின் 28ம் ஆட்சியாண்டைக் குறிக்கின்றது. இவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு பரகேசரி என்று வரும் கல்வெட்டுகள் முதல் பராந்தகனுடையது என்னும் கருத்தையும் தெரிவிக்கின்றார்.

## முதலாம் ஆதித்த சோழன்: (கி.பி. 871-907)

இவன் இராஜகேசரி என்ற பட்டம் புனைந்து ஆண்டவன். விசயாலயன் மகன். இவ்வாதித்த சோழன் காவிரியில் இருமருங்கும் பல சிவாலயங்களைக் கற்றளிகளாக எடுப்பித்தான் என்று அன்பிற் செபபேடுகள் கூறுகின்றன. சோழர்க்கு முன்னர் அரசாண்ட பல்லவ அரசர் காலங்களில் சில கோயில்களே கற்றளிகளாக அமைக்கப் பெற்றிருந்தன. அவற்றைக் கற்றளிகளாக அமைக்க வேண்டும் என்ற எண்ணம் இத்தகைய பெருவேந்தன் உள்ளத்தில் உதிப்பது இயல்பேயாம். இக்கோயிலில் இவன் கல்வெட்டுகள் நான்கு உள்ளன.

இராஜகேசரி ஆதித்தன் மூன்றாம் ஆட்சியாண்டிலேயே பூதி ஆதிச்சபிடாரி ஐந்து கழஞ்சு பொன் கொடுத்து ஈசான மங்கலத்து சபையாரிடம் நிலம் வாங்கி கோயிலில் இசைக் கருவிகள் வாசிப்பவரின் நலனுக்காக கொடை அளித்துள்ளார். எனவே திருச்செந்துறை கற்றளி பெருமானடிகள் கோயில் ராஜகேசரி ஆதித்தனின் ஆட்சி யாண்டின் பிற்பகுதியில் அதாவது அவனுடைய 23ம் ஆட்சி யாண்டிற்கு சிறிது முன்னதாக கற்றளியாக மாற்றப்பட்டிருக்கலாம் என்னும் கருத்தை எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் தெரிவிக் கின்றார். கொங்குதேச ராஜாக்கள் சரித்திரம் ஆதித்தன் கொங்கு தேசத்தைக் கைப்பற்றியதாகக் கூறுகின்றது. நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டத் தொகையில் ''சிற்றம்பல முகடு கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்தன்'' என்று தன்னுடைய பாடலில் பாடியுள்ளார். இவன் இறுதியில் தொண்டைமான் பேராற்றூர் என்ற ஊரில் இறந்தான்.

## முதலாம் பராந்தக சோழன் (கி.பி. 907-954)

முதலாம் ஆதித்தன் மகன் பராந்தகன் மூன்றாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டுகள் இவனை மதிரை கொண்ட கோப்பர கேசரிவர்மன் என்று கூறுகின்றமையின் கி.பி. 9-10ம் நூற் றாண்டில் இவன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்று மதுரையைக் கைப்பற்றி இருத்தல் வேண்டும். இக்கோயிலில் இவனுடைய கல்வெட்டுகள் மதிரை கொண்ட கோப்பரகேசரி என்ற பெயருடன் மூன்று கல்வெட்டுகளும், பரகேசரி என்ற பெயருடன் 21 கல்வெட்டுகளும் உள்ளன. இவனுடைய மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு பூதி ஆதிச்ச பிடாரியாரால் திருச் செந்துறை சிவன் கோயில் கற்றளியாக மாற்றப்பட்டுள்ளதைக் குறிக்கின்றது.

உத்தரமேரூர் கல்வெட்டுகள் இவன் காலத்தைச் சேர்ந்தவை. அவை குடவோலை முறையை அறிவிக்கின்றன. இராசராசன் உலா

> ''ஈழமும் தமிழ்க் கடலும் சிதைத்து
> ஈழமும் எழுநூற்றுக் காதமும் சென்று எறிந்து''

என்று புகழ்கின்றது.

## முதலாம் இராசேந்திர சோழன் (கி.பி. 1012-1043):

இக்கோயிலில் இவன் 21ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று வடக்குப்புறம் கருவறையின் வெளிச்சுவற்றில் உள்ளது. இக்கல்வெட்டில் இவன் மெய்கீர்த்தி, 'திருமன்னி வளர இருநில மடந்தையும் பொற்செயப் பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியும்' என ஆரம்பிக்கின்றது. 'பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட கோப்பரகேசரிவர்மன்' என்று கல்வெட்டுகள் புகழ்ந்து கூறும் இவ்வரசர் பெருமான் முதல் இராசராச சோழனுக்கு அவன் தேவியருள் வானவன் மாதேவி என்று வழங்கும் திரிபுவன மாதேவிபால் பிறந்த புதல்வன் ஆவான். 1012ம் ஆண்டில் இராச இராசனால் முடிசூட்டப் பெற்று சோழ இராச்சியத்திற்கு சக்கரவர்த்தி ஆயினான். இக்கோயிலில் காணப்படும் மெய்க்கீர்த்தியின் துணைக் கொண்டே இவன் காலத்துப் போர் நிகழ்ச்சிகளை ஆராய்ந்து அறியலாம். இவன் தன்னுடைய மூன்றாம் ஆட்சியாண்டில் இடைத்துறை நாடு, வனவாசி, கொள்ளிப்பாக்கை, மண்ணைக் கடக்கம் என்பவற்றை வென்று தன்னடிப்படுத்திய செய்திகள் தெரிய வருகின்றன. அடுத்து ஈழ நாட்டை வென்ற செய்தி குறிப் பிடப்படுகிறது. இவன் ஆறு, ஏழாம் ஆண்டுகளில் வரையப்பெற்ற கல்வெட்டுகள் இவன் சேர நாட்டின் மேல் படையெடுத்துச் சென்று அந்நாட்டரசர்க்கு வழிவழி உரிமை உடையதாகயிருந்த முடியையும் மாலையையும் கி.பி. 1018ல் கைப்பற்றிக் கொண்டு பழந்தீவையும் பிடித்துக் கொண்டான். எட்டாம் ஆண்டு கல்வெட்டு முயங்கி என்னும் ஊரில் மேலைச்சாளுக்கிய மன்னனாகிய சயசிங்கனைப் போரில் வென்று இரட்டப்பாடி ஏழரை இலக்கத்தைக் கைப்பற்றினான் என்று கூறுகின்றது.

பின்னர் தனம பாலனுடைய தண்ட புத்தியும் தக்கண லாடமும், கோவிந்த சந்தனுக்குரிய வங்காள தேசமும், மகிபாலனது உத்தர லாடமும், இராசேந்திரனின் படைத் தலைவர்களால் கைப்பற்றப்பட்டன. இவன் ஆட்சியில் 13ம் ஆண்டில் வரையப் பெற்ற அதே மெய்க்கீர்த்தி இவன் கப்பற்படைகளைக் கடல் நடுவில் செலுத்திக் கடாரங் கொண்ட செய்தியை விரிவாகக் கூறுகின்றது. இன்னும் இலாமுரிதேசம், நக்கவரம், கடாரம் மற்றும் பல இடங்களையும் கைப்பற்றினான் என்பது இவன் மெய்க்கீர்த்தியினால் உணரப்படுகின்றது.

கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் தாம் பாடிய மூவர் உலாவில்

**''தண்டேவிக்**
**கங்கா நதியும் கடாரமும் கைக்கொண்டு**
**கங்காபுரி புரந்த கற்பகமும்''**

**''கங்கா நதியும் கடாரமும் கைக்கொண்டு**
**சிங்காதனத்திலிருந்த செம்பியர்கோன்''**

என்றும் புகழ்கின்றார்.

முதலாம் இராஜேந்திர சோழன் கங்கைகொண்டான், கடாரங் கொண்டான் என்று வெற்றியின் காரணமான சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தான்.

## முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1070-1122):

இவன் கல்வெட்டுகள் இக்கோயிலில் இரண்டு உள்ளன. இவை 16, 46ம் ஆட்சியாண்டுகளைக் குறிக்கின்றன. இவன்

கல்வெட்டுகள் 'கோ ராஜகேசரி' 'திரிபுவனச் சக்கரவர்த்திகள்' என்று ஆரம்பிக்கின்றன. இவன் 50 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி புரிந்துள்ளமையால் நம் தமிழ்நாட்டில் இவன் கல்வெட்டுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவன் ஆட்சியில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சி, சோழநாடு முழுவதையும் அளக்கும்படி செய்து விளைநிலங்களில் பரப்பை உள்ளவாறு உணர்ந்து நிலவரியை ஒழுங்குபடுத்தியமையாகும். சைவப் பற்று உடையவன், ஆதலால் திருநீற்றுச் சோழன் எனப் பெயர் பெற்றவன். வைணவ சமண பௌத்தக் கோயில்கள் தோறும் இவன் கல்வெட்டுகள் காணப் படுகின்றன. இவனை

> **''பல்கலைத்துறை நாவிலுறைந்தவன்**
> **அறிஞர்தம் பிரான் அபயன்''**

என்றும் ஆசிரியர் சயங்கொண்டார் தம் கலிங்கத்துப் பரணியில் குறிப்பிட்டுள்ளார். குலோத்துங்கன் கீழைச் சாளுக்கிய மன்ன னாகிய இராசராச நரேந்திரனின் புதல்வன். இவன் தாய் கங்கை கொண்ட சோழனாம் முதலாம் இராஜேந்திரசோழனின் புதல்வியாகிய அம்மங்கை தேவியாவார்.

## விக்கிரமசோழன்: (கி.பி. 1118-1135)

இங்கு இவ்வேந்தனின் மூன்றாம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு ஒன்று உள்ளது. முதலாம் குலோத்துங்கனின் மகன் விக்கிரம சோழன். இவ்வேந்தன் ஆட்சிக் காலத்தில் பெரும்போர் இன்மையால், இவன் தன் ஆளுகைக்கு உட்பட்ட நாடுகளையெல்லாம் நேரிற் பார்த்து மக்கட்கு நலம் புரிந்து வந்தான் என்பது இவன் பல ஊர்களி லிருந்து அனுப்பியுள்ள உத்தரவுகளால் நன்கு அறியக் கிடக் கின்றது. தம் நாட்டைச் சுற்றிப் பார்த்து அரசியல் காரியங்களை கவனிப்பது அரசர்கட்குரிய இன்றியமையாக் கடமையாகும். அக்

கடமையில் விக்கிரமன் சிறிதும் தவறியவனல்லன் என்றும் கூறலாம். இவன் மெய்க்கீர்த்தி மன்னுயிர்க்கெல்லாம் இன்னுயிர்த் தாய்போல் தண்ணளி பரப்பி தனித்தனிப் பார்த்து முழுதுங் களிப்பவும் தன் கோயிற் கொற்றவாயிற்புறத்து மணி நாவொடுங் கவும் ஆட்சி புரிந்து வந்த பெருவேந்தன் என்கிறது. ஆகவே இவன் ஆளுகையில் மக்கள் எல்லோரும் இன்னலின்றி இன்புற்று வாழ்ந்து வந்தனர் என்பது வெள்ளிடை மலை.

## இரண்டாம் இராஜராஜ சோழன்: (கி.பி. 1146-1172)

இங்குத் திரிபுவன சக்கரவர்த்திகள் இராஜராஜதேவனின் கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. இந்த இரண்டில் ஒரு கல்வெட்டு ஆறாம் ஆட்சியாண்டையும் மற்றொன்று 14ம் ஆட்சி யாண்டையும் குறிக்கின்றன. தக்கயாகப் பரணி இவனை வஞ்சியும், மதுரையும் கொண்டான் எனக் குறிக்கின்றது. காவிரிக்கு மலைய மலை பக்கத்தில் வழிகண்டு நாட்டில் நீர்வளம் பெருகச் செய்தவன் இவன் என்பர். கும்பகோணத்திற்கு அருகில் உள்ள தாராசுரத்தில் இவன் இராச இராசேச்சுவரம் என்னும் பெருங்கோயிலை எடுப்பித்தான். இவன் தமிழ்மொழி, வடமொழி ஆகிய இரண்டிலும் வல்லவனாயிருந்தான். முத்தமிழுக்கும் தலைவன் என்ற பட்டம் பெற்றவன்.

## இரண்டாம் இராஜாதிராஜன்: (கி.பி. 1172-1178)

இங்கு இம்மன்னனின் 12 ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கல்வெட்டு எந்த மெய்க்கீர்த்தியும் இல்லாமல் இராஜாதிராச தேவற்கு யாண்டு 12ஆவது என்று தொடங்குகின்றது. இக்கல்வெட்டு இரண்டாவது இராஜாதிராஜ னுடையது என்பது சந்தேகத்திற்கு இடமின்றி தெரிகிறது. இவன் பாண்டிய நாட்டில் நடைபெற்ற தயத்தார் போரில் பராக்கிரம

பாண்டியனுக்கு எதிராக குலசேகரனை ஆதரித்தான். தன்னிடம் அடைக்கலம் புகுந்த ஈழநாட்டு மன்னன் ஸ்ரீவல்லபனுக்கு உதவினான். அதனால் மதிரையும் ஈழமும் கொண்ட ராஜகேசரி என்ற பட்டம் பெற்றான்.

## பூதி ஆதிச்சபிடாரி:

இக்கோயிலில் இவர் பெயரில் தொடங்கும் கல்வெட்டில்தான் தான் இக்கோயிலை எடுத்ததாகக் கூறுகிறார். ''ஸ்வஸ்தி ஸ்ரீபூதி ஆதிச்ச பிடாரியேன் எடுப்பித்த கற்றளிப் பெருமானடிகளுக்கு'' என்று இக்கல்வெட்டு குறிக்கின்றது. இவர் கொடும்பாளூர் மன்னன் பூதி விக்ரம கேசரியின் மகளும், சோழ மன்னன் முதற் பராந்தகன் மகன் அரிஞ்சயன் என்கிற அரிகுல கேசரியின் தேவியும் ஆவார். இக்கோயிலை கற்றளியாக எடுப்பித்து எண்ணற்ற நிவந்தங்களை அளித்திருக்கின்றார்.

## விசய நகர அரசன்:

சோழர்களுக்குப் பின் தமிழகத்தை விஜய நகர அரசர்கள் ஆண்டு வந்தனர். விசய நகர அரசர்களில் சிறந்த ஆட்சி தந்தவர் கிருஷ்ண தேவராயர். இவர் 1509ல் ஆட்சிக்கு வந்து 1529 வரை ஆண்டார். இதன் பிறகு அச்சுதராயர், இராமராயர், திருமலை, முதலாம் ஸ்ரீரங்கர், முதலாம் வேங்கடர் ஆகியோர் ஆண்டனர். இக் கோயிலின் கோபுரவாசலில் இடதுப்புற சுவற்றில் உள்ள கல்வெட்டு ஸ்ரீரங்கதேவர் என்ற மன்னர் காலத்தைச் சேர்ந்தது. இந்த ஸ்ரீரங்கன் திருமலைராயன் மூத்த மகனாக இருக்கலாம். திருமலை 1572ல் முடிசூட்டிக் கொண்டான். 1585 வரை அரசாண்டான். போர் விருப்பம் மிக்கவன். இழந்த பகுதிகளை மீட்க முயற்சி செய்தான். சிறையில் அடைபட்டு மாண்டுபோனான். ஸ்ரீரங்கன் மக்கட் பேரின்றி 1585ல் உயிர் நீத்தான். சிறந்த வைணவன்.

## கல்வெட்டில் இறைவன் பெயர்

பரகேசரியின் கல்வெட்டுகளில் திருச்செந்துறை கற்றளி பரமேஸ்வரர் என்றும், திருச்செந்துறை கற்றளி பெருமான் அடிகள் என்றும், திருச்செந்துறை மகாதேவர் என்றும் இராஜகேசரி ஆதித்த சோழன் காலத்தில் திருச்செந்துறை பரமேஸ்வரர் என்றும், முதலாம் இராஜேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டில் திருச்செந்துறை உடைய மகாதேவன் கோயில் என்றும், விக்கிரம சோழன் காலத்தில் திருச்செந்துறை உடையார் என்றும், முதலாம் குலோத்துங்கன் காலத்தில் திருச்செந்துறை மகாதேவர் என்றும், இரண்டாம் இராஜராஜ சோழன் காலத்தில் திருச்செந்துறை தேவர் என்றும் இறைவன் பெயர் காணப்படுகின்றது.

## சோழர்கள் கல்வெட்டில் நாட்டுப் பிரிவுகள்:

சோழப் பேரரசு கி.பி. 9ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில தோன்றி படிப்படியாகத் தனதாட்சியை தமிழகத்திலும் கடல் கடந்த நாடுகளிலும் பரப்பியது. சோழ மண்டல சதகத்தில் சோணாட்டின் எல்லையைப் பற்றி ஒரு பாடல் வழங்கி வருகின்றது.

**''கடல் கிழக்கு தெற்கு கரைபுரள் வெள்ளாறு**
**குடதிசையில் கோட்டைக் கரையாம் வடதிசையில்**
**எண்ணாட்டு வெள்ளாறு இருபத்துநாற் காதம்**
**சோணாட்டு எல்லையெனச் சொல்''**

என்று பகர்கின்றது.

இத்தகைய விரிந்த சோழப் பேரரசின் துவக்கத்தில் மிகக் குறைவாக இருந்த நாட்டுப் பிரிவுகள் பேரரசின் இடை, இறுதி காலங்களில் எண்ணிக்கையில் அதிகமாயின. முற்காலத்தில் சோழநாடு சோணாடு என்ற (1009 வரை) பெயராலேயே வழங்கப்

பட்டது. பின்னர் சோழ மண்டலம் என்றும் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டது. பொதுவாக சோழ ராச்சியம் காவிரியை ஒட்டி, காவிரியின் வடகரையில் அமைந்த நாடுகள் வடகரை நாடு என்றும் காவேரியின் தென் கரையில் அமைந்த பகுதிகள் தென்கரை நாடு என்றும் பெயர் பெற்றன. அரசர்களால் வெற்றி கொண்ட நாடுகள் மட்டும் தொண்டை நாடு என்கிற ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என்றும், பாண்டிநாடு ராஜ ராஜமண்டலம், நுளம்பபாடி நிகரிலி சோழ மண்டலம் என்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டன. கோட்டம், வளநாடு என்பவை ஒரு பெரிய பிரிவு. இதனுள் பல நாடுகள் கூற்றங்கள் அடங்கின. ஒவ்வொரு நாட்டிலும் பல ஊர்கள் அடங்கின. இவை தவிர பிரம்மதேயம் சதுர்வேதி மங்கலம் என்பவை நான்கு வேதங்களிலும் வல்ல பிராமணர்களுக்கு அளிக்கப்பட்ட ஊர்களாகத் திகழ்ந்தன. கோயிலுக்குச் சொந்த மான நிலங்கள் தேவதானம் என்று அழைக்கப்பட்டன. வணிகர்கள் வாழ்ந்த பகுதிகள் நகரங்கள் எனப்பட்டன.

இங்குள்ள கல்வெட்டுகளில் நாட்டுப் பிரிவுகளைக் காணும் போது முற்காலச் சோழர்களின் கல்வெட்டுகளில் இத்தகைய பிரிவுகளை காணமுடிவதில்லை. இக்கோயிலில் (திருச்செந் துறை) முற்காலச் சோழர்களின் கல்வெட்டுகளாக இராசகேசரி, பரகேசரி என்ற பெயரில் ஆதித்தன், பராந்தகன் ஆகிய இரு அரசர் களின் கல்வெட்டுகள் உள்ளன. அதில் உறையூர் கூற்றத்துத் தவம் பற்றூர் நாட்டு பிரம்மதேயம் என்றோ இடையாற்று நாட்டு பிரம்மதேயம் என்றோ வருகின்றது. ஈசான மங்கலத்து திருச் செந்துறை என்றும் குறிக்கப்படுகின்றது.

முதலாம் இராஜேந்திரன் காலத்துக் கல்வெட்டுகளில் கேரளாந்தக வளநாட்டு உறையூர் கூற்றத்து பிரம்மதேயம் ஈசான மங்கலம் என்று குறிக்கப்படுகிறது. (304/1903)

இரண்டாம் இராஜாதிராசன் கல்வெட்டுகளில் ஒரு நாட்டுப் பிரிவும் காணப்படவில்லை.

ஆனால் பிற்காலச் சோழர்களின் காலத்தில்தான் எண்ணற்ற வளநாடு கூற்றம் போன்ற அமைப்புகள் காணப்படுகின்றன.

## கல்வெட்டில் காணும் வாய்க்கால்களும் நிலங்களும்:

திருச்செந்துறை செழிப்புள்ள ஆற்றுப் பகுதியில் அமைந் திருப்பதால் இவ்வூர் கல்வெட்டுகளில் நிலங்களைப் பற்றியும் அவற்றின் எல்லைகளைப் பற்றியும் குறிக்கும்போது பல்வேறு வாய்க்கால்களின் பெயர்களும் கூறப்பட்டிருக்கின்றன. இவ் வாய்க்கால்கள்

**''புனல் பரந்து பொன் கொழிக்கும்**
**விளைவறா வியன் கழனி''**

என்னும் பட்டினப்பாலை அடிகளுக்கு இலக்கணமாகத் திகழ் கின்றன.

இங்குள்ள கல்வெட்டுகளை நோக்கும்போது எண்ணற்ற கால்வாய்கள் ஓடி விளைவறாவியன் கழனியாக விளங்கியது. 'அல்லூர் வாய்க்கால் (291/1903)' என்ற ஒரு வாய்க்கால் கல்வெட் டில் காணப்படுகின்றது. இப்போதும் இங்கு இவ்வாய்க்கால் அல்லூர் வாய்க்கால் என்ற பெயராலேயே வழங்கி வருகின்றது. பிரம்மதேய வாய்க்கால் (293/1903) பிராமணர்கள் குடியிருந்த பகுதிகளில் இவ்வாய்க்கால் ஓடியிருக்கலாம். அதனால் பிரம்மதேய வாய்க்கால் என்று பெயர் பெற்றிருக்கலாம். மற்றும் உலகு வாய்க்கால் (295/1903), மறவன் வாய்க்கால் (296/1903) என்னும் பெயரை யுடைய வாய்க்கால்களும் உள்ளன. உலகு வாய்க்கால் பரந்து

விரிந்து பல பகுதிகளுக்கும் பாயக்கூடிய வாய்க்கால்களாக இருப் பதினால் உலகு வாய்க்கால் என்று பெயர் பெற்றிருக்கலாம். படை வீரர்களுக்கு மறவர் என்ற மற்றொரு பெயரும் உண்டு. சோழர்கள் காலத்தில் இப்பகுதிகளில் படைவீரர்களாகிய மறவர்கள் தங்கி யிருக்கலாம். அவர்கள் தங்கியிருந்த பகுதிகளில் ஓடிய வாய்க்கால் களை மறவன் வாய்க்கால் என்னும் பெயரால் வழங்கியிருக்கலாம். திருமாலிடுஞ்சோலை வாய்க்கால் (303/1903) முன்பு இக்கோயிலில் புலாலய விண்ணகர் என்னும் திருமால் கோயில் இருந்ததாகக் கூறப் படுகின்றது. எனவே இப்பெயரால் இவ்வாய்க்கால் திருமாலிருஞ் சோலை வாய்க்கால் என்னும் பெயரால் வழங்கியிருக்கலாம். வடவாய் கெடக்கி வாய்க்கால் (327/1903) என்னும் ஒரு வாய்க்கால் பெயர் வழங்கி வருகின்றது. இவ்வாய்க்கால் எவ்வாறு கெடக்கி வாய்க்கால் என்று பெயர் பெற்றது என்பது சிந்தனைக்கு உரியது. இவ்வாறு சோழர்களின் ஆட்சிக் காலத்தில் எண்ணற்ற வாய்க்கால் கள் பாய்ந்து மக்கள் வாழ்வை வளம் ஆக்கியது என்பதில் ஐய மில்லை.

இவ்வாறே பல வகையால் நிலங்களின் பெயர்களும் குறிக்கப் படுகின்றன. கொகிளங்காற்செய், மூங்கில்செய் (மூங்கில் நிறைந்தது), வாய்மடை, நீர்நிலம் (நன்செய்), நெடுங்களர் கால் செய், தோட்டப் பாத்திநெல் விளைகின்ற நிலம், ஊர்ப்பாத்தி, கிடக்கினிலம் (614), புன்செய், மென்செய் போன்ற நிலங்களின் வகைகள் தெரிகின்றன. மேற்கூறிய நில வகைகளில் புன்செய், மென்செய் இன்றும் வழக்கில் உள்ளன. மற்றவை மறைந்தன.

## சோழர் கல்வெட்டில் கொடும்பாளூர் வேளிர்:

இங்குள்ள (திருச்செந்துறை) கல்வெட்டுகளில் கொடும் பாளூர் வேளிர்கள் பற்றிய குறிப்புகள் வருகின்றன. முதலில் பொதுவாக வேளிர்கள் யார்? என்பதை ஒரு சிறிது ஆராய்ந்து

பின்பு கொடும்பாளூர் வேளிர் பற்றி நோக்குவோம். தமிழகத்தில் வரலாற்றுக் காலம் சேர சோழ பாண்டியர் என்ற முடிவேந்தர் மூவரின் ஆட்சிக்காலம் தொடங்கி சேரர்கள் தமிழகத்தின் மேற்குப் பகுதியையும், சோழர்கள் கிழக்குப் பகுதியையும் பாண்டியர்கள் தெற்குப் பகுதியையும் ஆண்டு வந்தனர். பெரும் நிலப்பரப்புகளை இவ்வேந்தர்கள் ஆண்டு வந்தபொழுதே சிறுசிறு நிலப்பரப்பு களைப் பல குறுநில மன்னர்கள் ஆண்டு வந்திருக்கின்றனர். அவர்கள் தங்களை வேளிர் என அழைத்து வந்துள்ளனர். இவ் வேளிர்கள் சிறுசிறு குறுநிலப் பகுதிகளை ஆண்டு வந்ததால் சேர சோழ பாண்டியர் போன்ற பெரு மன்னர்களுக்கு அடங்கித்தான் வாழ்ந்திருக்க வேண்டும். மூவேந்தர்களில் யாரையாவது ஒருவரை ஆதரித்துத் தங்களது ஆட்சி சக்கரத்தை செலுத்த வேண்டி இருந்தது. மூவேந்தர்களுக்குள் போர் நிகழும் காலங்களில் தாங்கள் ஆதரித்து வந்த வேந்தனுக்கு உறுதுணையாக போரிட்டு வந்தனர். கி.பி. 3, 4ம் நூற்றாண்டு வரையில் பெருவேந்தர்களுக்கு உறு துணையாக இருந்த இவ்வேளிர் மன்னர்கள் சிறுக சிறுகத் தங்களது ஆட்சியின் எல்லைக்கோட்டை அகலப்படுத்த ஆரம்பித் தனர். பெரும் வேந்தர் மூவேந்தர்களுக்குள் அடிக்கடி ஏற்பட்ட போர் இக்குறுநில மன்னர்களுக்கும் பெரும் வாய்ப்பாக அமைந்தது. நாளடைவில் பெருவேந்தர்களின் செல்வாக்குக் குறைந்து குறுநில மன்னர்களின் (வேளிர் மன்னர்களின்) செல்வாக்கு வளரத் தொடங்கியது. வேளிரது பரம்பரை வரலாறுகளை எழுதி வைத்த பழைய நூல்களேனும் சாதனங்களேனும் கிடையாது. இப்போது காணப்படுவன எல்லாம் புறநானூறு முதலிய சில பழைய தமிழ் நூல்களிற் புலவர்கள் அவ்வப்போது பாடிப் போந்த ஒரு சில செய்யுட்கள்தான் உள்ளன.

பழைய சங்க நூல்களிலே வேளிர் என்ற ஒரு கூட்டத்தார் தமிழ்ப் பேரரசர்களாகிய சேர சோழப் பாண்டியரை அடுத்துப் பல விடங்களிற் கூறப்படுகின்றனர். இதனை

**''பண்கெழு வேந்தரும் வேளிரும்''** என புறநானூற்றிலும்

**''இருபெரு வேந்தரோடு வேளிர்''** என மதுரைக் காஞ்சி யிலும்

**''வேந்தரும் வேளிரும்''** எனப் பதிற்றுப் பத்திற் பல இடங் களிலும் வருதலால் அறியலாம். அதனால் மூவேந்தரை அடுத்து முற்காலத்தே தமிழ்நாட்டில் மதிக்கப்பட்ட சிற்றரசருள் இவ் வேளிரே முற்பட்டவர் என்பது விளங்கும். ''அன்றியும் தொன் முதிர்வேளிர்'' (அகம் 258, புறம் 24) ''நாற்பத்தொன் வழிமுறை வந்த வேளிர்'' (புறம் 201) என சங்க நூல்களிற் கூறப்படுதலின் இன்னோர் பண்டைக்கால முதலே தமிழ்நாட்டில் சிறப்புற்றிருந் தவர் என்பதும் தெரிய வருகின்றது.

வேளிர் வரலாற்றைப் பற்றித் தமிழ்நாட்டில் வழங்கி வந்த பழைய செய்திகள் சிலவற்றை ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பாயிரவுரையில் அடியில் வருமாறு குறிப்பிடுகிறார்.

''தேவரெல்லாருங்கூடி'' யாம் சேயிருத்தலின் மேருந்தாழ்ந்து தென்திசை உயர்ந்து, இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற் குரியர் என்று அவரை வேண்டிக்கொள்ள அவரும் தென்திசைக்கட் போகின்றவர்... துவாரப் பதிபோந்து நிலங்கடந்த நெடுமுடி யண்ணல் வழிக்களர் பதிணென்குடி வழியினராகிய அரசரையும் வேளிரையும் தென்னாட்டிற் குடியேற்றினர் என்ற அரிய செய்தியைக் கூறியிருக்கிறார்.

நீனிலங்கடந்த நெடுமுடி அண்ணல் என்றார் இளங்கோ (சிலம்பு 11, 148). எனவே துவாரகையில் ஆட்சி புரிந்த கண்ணபிரான் வழியினர் இவ்வேளிர் என்பதும் இவரையே

அகத்தியனார் தென்னாட்டிற் குடியேற்றினார் என்பதும் பெறப் படுகின்றது.

வேளிர் பதினெண் குடியினராய் இருந்தவர் என நச்சினார்க் கினியர் கூறியபடியே யாதவரும் 18 குடியிருந்தவராயினர் என்பது ஸ்ரீவியாசபாரதத்தில் நாங்கள் பதினெண் குலத்தோடுஞ் சேர்ந்து இவ்வாலோசனை செய்தோம் என்னும் கூற்றால் அறியலாம். வேளிர் என்பவர் யாதவ குலத்தவரே என்பதைக் குறிக்க வல்ல வேறு சான்றுகளும் காணப்படுகின்றன. ஏறக்குறையத் தொள்ளாயிரம் வருடங்களுக்கு முன் மைசூர் நாட்டை அடிமைப்படுத்தி அந் நாட்டிலுள்ள துவார சமுத்திரத்திலுள்ள நகரத்திலிருந்து ஆட்சி புரிந்தவர் ஹொய்சால யாதவர். இவ்வரசர் ஆதியிற் கூர்ச்சர நாட்டுத் துவாரகையினின்று குடியேறியவர் என்பதும், யாதவ குலத்தவ ரென்பதும் சரித்திரப்பூர்வமாக அறியப்பட்டவை. இவ்வாறு வந்தேறிய யாதவர் தலைவர் கன்னட பாஷையில் போலாலர் என வழங்கப்படுகின்றனர். அன்றியும் இப்போலால யாதவர் காலத்தே உண்டாகிய தலைநகரொன்று வேளூர் அல்லது வேளாபுரம் என அவர் பெயரால் வழங்கப்பட்டுள்ளது. அதனால் கன்னட வடிவில் அவ்யாதவர் போலாலர் என வழங்கப்பட்டிருப்பினும் அச் சொல்லின் உண்மையுருவம் வேளாளர் எனத் தெரிவதோடு வேள் என்ற பெயரும் அவர்க்கு முன்பு வழங்கி வந்ததென்பதும் அறியப்படும்.

செந்தமிழ் நிலத்தைச் சூழ்ந்துள்ளனவாகச் சொல்லப்படும் பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகளில் வேணாடு என்பது ஒன்று. இஃது யாதவரது பழந்தேயமாகிய வேள் புலம் ஆகும். வேள்புலம் என்பது இப்போது கொங்கணம் என்று அழைக்கப்படுகிறது.

இனி வேளிரின் ஆதி முதல்வர் எக்காலத்தே தென்னாட்டிற் குடியேறியவர் என்பதை ஆராயின் ஐப்பானிய தலைமுறைக்கு அமைந்த 21 ஆண்டானதை மேற்குறித்த 49 தலைமுறை வேளிர்க்குங் கொண்டு கணிப்போமாயின் புறநானூற்றில்

**"நீயே வடபால் முனிவன் கடலினும் தோன்றிச் செம்பு புனைந் தியற்றிய**
**சேனெடும் புரிசை உவரா ஈகைத் துவரையாண்டு நாற்பத் தொன்பது**
**வழிமுறை வந்த வேளிருள் வேளே"** (புறம் 201)

இருங்கோவேளுக்கு 1000 ஆண்டுகட்கு முற்பட்டதே அவர் வழியின் ஆதி முன்னோர் தென்னாடு புகுந்த காலமென்பது பெறப்படும். வேளிருடைய ஆதிமுன்னோர் தமிழ்நாடு புகுந்தது. கி.மு. 10 ஆம் நூற்றாண்டு முந்தியது என்று ஒருவாறு கூறலாம் என்று மு. இராகவ ஐயங்கார் கூறுகின்றார்.

"வேளிர் வேளாளர் எனவும் பெயர் பெற்றனர். ஆந்திர நாட்டில் இன்னோரை வேள்பார் என்பதில் திரிபாக வேலமா என்பர்.

இனி இவ்வூர்க் கல்வெட்டில் (திருச்செந்துறை) வரும் கொடும்பாளூர் வேளிர்களைப் பற்றி காண்போம்.

"கொடும்பாளூரில் இருக்குவேள் என்ற குடியினர் இருந் தனர் என்பதும் அவர்கள் சிலகாலம் பாண்டியர்க்கும் சில காலம் பல்லவர்க்கும் அடங்கித் திறை செலுத்திக் கொண்டு குறுநில மன்னராய் இருந்து வந்தனர் என்பதும் சில கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது. அவர்கள் கடைச்சங்க நாளில் வாழ்ந்த இருங்கோ வேளிர் வழியினர். சோழ மரபினர் அல்லர். வேளிர் குடியினரே சோழர்கள் குலத்திற்கும் பெரிதும் பெண் கொடுத்தும் எடுத்தும்

வந்ததோடு அப்பேரரசைக் கட்டிக் காப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தனர்.

புதுக்கோட்டையிலிருந்து 25 மைல் தொலைவிலுள்ள கொடும்பாளூர், அன்னவாசல், நல்லையூர் ஆகிய மூன்று கூற்றங்கள் கொண்ட நாட்டை ஆண்டுவந்த குறுநில மன்னர்கள் இவர்கள். கொடும்பாளூர் வேளிர்களின் புகழ்மிக்க தலைநகரமாக விளங்கிற்று. கொடும்பாளூர் கோனாட்டின் முக்கிய நகரமாய் விளங்கியது. பெரிய புராணம் கோனாட்டு கொடிநகரம் என்று பாராட்டுகிறது. திருப்பூதிஸ்வரம் என்னும் கோயிலின் குறிப்பு பராந்தகன் பதினாறாம் ஆட்சி ஆண்டு கல்வெட்டில் வருகிறது. (293/1903) திருப்பூதிஸ்வரம் என்னும் கோயில் பூதி விக்ரமகேசரியால் கட்டப்பட்ட பராந்தகன் காலத்து முதல் கோயில் எனலாம். திருப்பூதிஸ்வரத்து மகாதேவர்க்கு ரிஷப வாகன பெருமாள் அடிகள் என்ற மற்றொரு பெயரும் உண்டு. (138/1907) திருப்பூதிஸ்வரம் மூவர் கோயிலின் பழைய பெயராக இருக்கலாம். ஆனால் இக்கோயில் 10ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பூதி விக்ரம கேசரியால் கட்டப்பட்டு இருக்கலாம் என்று சோழர் காலக் கலையைப் பற்றி எழுதிய திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்கள் கூறுகின்றார்கள். இதே பரகேசரியின் 16ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் திருப்பூதிஸ்வரத்து தேவனார் என்று வருகிறது. இந்த கொடும்பாளூர் இறைவனின் பெயராகிய திருப்பூதிஸ்வரத்து தேவர் என்று ஒருவனுக்குப் பெயராக வந்திருக்கலாம்.

திருச்செந்துறைக் கல்வெட்டில் தென்னவன் இளங்கோவேள் குறிக்கப்பட்டுள்ளார். தென்னவன் இளங்கோவேளுக்கு மறவன் பூதி என்ற பெயரும், பூதி விக்ரமகேசரி என்ற பெயரும் உண்டு. இவர் கொடும்பாளூர் சிற்றரசர். ''பல்லவ அரசன் மூன்றாம்

நந்திவர்மனின் சமகாலத்தவர்''. அதே சமயத்தில் சோழ அரசர்களில் முதலாம் ஆதித்தனின் சம காலத்தவர்.

இங்குள்ள கல்வெட்டில் கூறப்படும் பூதி ஆதிச்ச பிடாரி என்பவர் தென்னிவன் இளங்கோ வேளின் (பூதி விக்கிரமகேசரி) மகளும், பராந்தகனின் மகன் அரிஞ்சயன் என்கிற அரிகுல கேசரியின் தேவியும் ஆவார். இவரே திருச்செந்துறைக் கோயிலை கற்றளியாக மாற்றினார். மற்றும் பரகேசரியின் இரண்டாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டில் நக்கன் விக்கிரம கேசரி பற்றிய குறிப்பு வருகிறது. கொடும்பாளூர் மன்னன் பூதி விக்கிரம கேசரிக்கு இரண்டு தேவியர். அவருள் இக்கல்வெட்டில் நக்கன் விக்கிரம கேசரி என்பவர் குறிக்கப்பட்டுள்ளார். மற்றொருவர் கற்றளி பிராட்டி என்பவர். மற்றும் பரகேசரியின் 22ம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் மதுராந்தக இருக்குவேளாயின ஆதித்தம் பூதி என்பவர் குறிக்கப் படுகின்றார். இவர் மறவன் பூதியாகிய விக்ரம கேசரியின் மகள் ஆவார். இந்த ஆதித்தம் பூதிக்கு ஆதித்தன் விக்கிரமகேசரி என்ற பெயரும் உண்டு.

கொடும்பாளூரில் எடுக்கப்பட்டுள்ள மூவர் கோயிலில் பூதி விக்கிரமகேசரி என்ற மன்னன் காலத்து கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கல்வெட்டு கருவறையின் தெற்குச் சுவற்றில் சமஸ்கிருத மொழியில் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு இருக்குவேளிர் குலத்தைச் சேர்ந்த ஒன்பது அரசர்களின் பட்டியலைத் தெரிவிக்கின்றது.

**கொடும்பாளூர் இருக்குவேளிர்**
**அரசர்களின் பட்டியல்:**

1. யானைப் படையை முறியடித்த மன்னன். (அரசன் பெயர் தெரியவில்லை.)

2. பரவீரஜித்
3. வீரதுங்கன் (மழவரை வென்றவன்)
4. அதிவீரன்
5. சங்ககிருது
6. நிருபகேசரி
7. பரதுர்க்க மர்த்தனன் (வாதாபியை வென்றவன்)
8. சமராபிராமன்

(அதிராஜ மங்கலத்தில் நடந்த போரில் சளுக்கு மன்னனைக் கொன்றவன். அனுபமா என்பவளை மணந்தவன். அனுபமா முதலாம் பராந்தகன் மகள்).

# 4. திருச்செந்துறை கல்வெட்டுச் செய்திகள்

பிற்காலச் சோழப் பேரரசு உருவாக பல்லவர்களைப் போல முத்தரையர், கொடும்பாளூர் வேளிர், பழுவேட்டரையர் ஆகியோரும் பெரும் பங்கை ஆற்றியிருக்கின்றனர். கொடும்பாளூர் வேளிர் சோழர் அரசில் மிகப் பொறுப்பான பதவிகளை வகித்து அரசை கட்டிக் காப்பதில் பேருதவிகள் செய்தனர், ஆதலால் இருவரும் மணவுறவு கொண்டு தங்கள் நெருக்கத்தையும் நட்பையும் உறுதிபடுத்திக் கொண்டனர்.

கொடும்பாளூர் வேளிர் குலப் பெண்கள் கோயில் கட்டடக் கலைக்கும் கோயில் வழிபாட்டிற்கும் பெரும் நிதியுதவி செய்து புகழ் பெற்றிருக்கின்றனர்.

திருச்செந்துறைக் கோயிலைக் கட்டியவர் கொடும்பாளூர் வேளிர் குலத்தில் தோன்றிய நங்கை பூதி ஆதிச்சபிடாரி என்பவரே யாவார். 'இவர் யார் மகள் யாருடைய மனைவி என்பதை திருச் செந்துறைக் கல்வெட்டொன்று கூறுவதைக் காண்போம்.

''சோழப் பெருமானடிகள் மகனார் அரிகுல கேசரியார் தேவியார் தென்னவனிளங்கோ வேளார் மகளார் பூதி ஆதிச்ச பிடாரியார் பிரமதேசம் ஈசான மங்கலத்து தாம் எடுப்பிச்ச கற்றளி பெருமானடிகள்'' என்று கூறுவதைக் காண்க.

இக்கோயிலிலுள்ள கல்வெட்டுகளில் பெரும்பாலானதும் கொடும்பாளூர் வேளிர் குடும்பத்தார் அளித்த கொடை பற்றியே கூறுகிறது.

இக்கோயிலில் காணப்படும் 2, 3, 4, 10, 16, 22, 23 ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த மதிரை கொண்ட கோப்பரகேசரி என்றும் கோப்பரகேசரி என்றும் கூறப்படும் முதலாம் பராந்தக சோழன் காலத்தைச் சேர்ந்தவையே ஆகும்.

## பூதி ஆதிச்ச பிடாரி அளித்த கொடைகள்

திருச்செந்துறை கற்றளிப் பெருமானடிகள் கோயில் எடுத்து அக்கோயிலுக்கு பலரிடமிருந்தும் நிலம், தோட்டங்களை விலைக்கு வாங்கி கோயிலுக்கு அமுது படைப்பதற்கும் நொந்தா விளக்கு எரிப்பதற்கும், திருவிழாவிற்கும், சூரிய கிரஹணத்தின் அன்று திருவிழா நடத்த திருவிழாப்புறமாகவும் தேவதான நிலங்களை உழுகுடிகளுக்கு இல்லிருக்கையாக அதாவது வீட்டு மனையாக வும், கோயிலுக்கு வேண்டிய பூக்கள் அளிக்க பூ மரங்களும், கோயில் பணி செய்வார்க்கு மடவிளாகப் புறமாகவும் இறை காவல் செய்துதர (இறையிலி) ஏராளமான பொன்னும் நிலமும் அளித்திருக்கிறார்.

இவர் மட்டுமல்ல இவரது தந்தையும் கொம்பாளூர் குடும் பத்தினர் அத்தனைபேரும் இக்கோயிலுக்குக் கொடையளித்திருக் கின்றனர். அதனைக் காண்போம்

## செம்பியன் இளங்கோ வேளார்

இவர் ஈசான மங்கலமாகிய இவ்வூரில் 2 வேலி நிலம் விலைக்கு வாங்கி கோயிலுக்கு அளித்தார். அத்துடன் அந்நிலத் திற்குரிய வரிகளையும் நீக்கிக் கொடுத்ததுடன் மேலும் ஐவேலி நிலம் கோயிலுக்கு அளித்தார்.

1. அதில் ஒரு வேலி நிலம் கொண்டு 4 நொந்தா விளக்குகள் எரிக்க வேண்டும். ஒரு நொந்தா விளக்கிற்கு 1/4 செய் நிலம் 4 நொந்தா விளக்கிற்கு 1 வேலி நிலம் ஆகும்.

2. இவர் பிறந்த நட்சத்திரம் உத்திராடம்

ஒவ்வொரு மாதமும் இதே நட்சத்திரத்தன்று இறைவனுக்கு நெய்யால் அபிஷேகம் செய்ய வேண்டும்.

1 மாதத்திற்கு பயன்படுத்த வேண்டிய நெய் - 10 நாழி
ஓராண்டிற்கு பயன்படுத்த வேண்டிய நெய் - 120 நாழி

இதற்கு ஆகும் செலவு :

மாதம் ஒன்றுக்கு - முக்கலனே தூணி நெல்
ஆண்டுக்கு சூலக்கால் என்னும் மரக்காலால் - நாற்பது கலம்

3. நெய்யபிஷேகம் செய்கின்ற அன்றைக்கெல்லாம் பயிற்றுப் போனகம் படைக்கப்பட வேண்டும். அதற்கு வேண்டிய குத்தல் பழவரிசி, நெய், வாழைப்பழம், சர்க்கரை - இவற்றிற்கும் மேலும் பொறிக்கறி, அடைக்காய் 10 பாக்கு, தெரியிலை ஒரு பற்று.

இவற்றிற்கு ஆண்டுக்கு நெல்-46 கலம் 2 தூணி குறுணி. இதற்காக கொடுக்கப்பட்ட நிலம் 9 மாக்காணி அரைக்காணி.

4. யோகிகள் இருவர் தினமும் 3 சந்தியும் திருவாராதனை செய்ய நெல் 120 கலம். இதற்கு நிலம் 1 வேலி

5. பஞ்ச மாசப்தம் - என்ற இசையெழுப்ப இசைக்கருவி தொடர்பான 9 ஆள் கொட்ட இரண்டே கால் வேலி நிலம்

சேகண்டிகை ஒன்றுக்கு 1/4 வேலி நிலம்

ஆக மொத்தம் கொடுக்கப்பட்ட ஐவேலி நிலத்தின் வருமானத்திலிருந்து மேற்கூறியவாறு செயல்படுத்தப்பட வேண்டும்.

செம்பியன் இளங்கோ வேளாரை இவ்வூர்க் கல்வெட்டுகள் செம்பியன் இளங்கோ வேளாயினபூதி ஆதித்தபிடாரன் என்று கூறுகின்றன. இவருக்கு தென்னவனிளங்கோ வேள் என்று பெயரும் உண்டு. இவர் தேவியார் - நக்கன் விக்கிரமகேசரியார் - 20 கழஞ்சு பொன்னை நந்தா விளக்கு எரிப்பதற்காக இக் கோயிலுக்கு வழங்கியுள்ளார்.

இதே காலத்தில் - மதுராந்தகன் இருக்குவேளாயின ஆதித்தம் பூதி என்பவரும் காணப்படுகிறார். இவர் திருச்செந்துறை கோயிலுக்கு தூவேலி மங்கலம் - என்ற ஊரை பரிசாக அளித்தார். தான் பிறந்த நட்சத்திரமாகிய பூரட்டாதியில் மேற்கூறியவாறு நடந்த அத்தனை வழிபாடுகளும் பிறவும் நடத்த வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. இக்கல்வெட்டு பாதியில் நின்றுவிட்டது.

மேலும் இவர் கணக்குடி கோயிலார் தோட்டத்தை தேவ தானமாகத் தரவேண்டுமென்று ஆணை (ஸ்ரீமுகம்) அனுப்பியதால் சபையோர் அவ்வாறே நடைமுறைபடுத்தினர் என்ற செய்தியும் காணப்படுகிறது.

பூதி கலிச்சி என்றொரு பெண்மணி ஒரு பெண்ணின் ஸ்ரீதன நிலத்தை விலைக்கு வாங்கி தன் கணவனின் நன்மைக்காக கோயிலில் நொந்தா விளக்கெரிக்க தானமளித்தார். இவர் பெயரைக் கொண்டு இவரும் இருக்குவேள் குடும்பத்தவராக இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

கொடும்பாளூர் வேளிர் குலத்தைச் சேர்ந்த மற்றொருவரான வீரசோழ இளங்கோ வேளாயின ஆதித்தம் திருவொற்றி யூரடிகள் என்பவர் இக்கோயிலுக்கு - விவாஹ தட்சினையாக எரம நல்லூர் நம்பியான பவருத்ர பட்டனிடம் 3 வேலி நிலத்தை கொடுத்தார். இந்நிலம் அமண்குடி என்ற ஊரில் இருந்தது. இந்த 3 வேலி நிலமும்

1 விளக்கிற்கு 1/4 செய்யாக
12 விளக்கிற்கும் இந்த 3 வேலி நிலம் பயன்படுத்தப்பட்டது.

கொடும்பாளூர் பூதியீஸ்வரத்து தேவனார் மகன் நக்கன் பொக்கி என்பவன் மூங்கில் செய் - என்ற நிலத்தை விலைக்கு வாங்கிக் கொடுத்திருக்கின்றான்.

பாரதாயன் நக்கன் - என்பவன் பலதானங்கள் செய்திருக் கிறான். கொடுக்கப்பட்டதானங்கள் துல்லியமாக மிகவும் விவரமாக எதற்கெல்லாம் செலவிடப்பட வேண்டும் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளதைக் காண்க. பொருளாதார வரலாற்றிற்கு இவ்வூர்க் கல்வெட்டுகள் உதவும்.

## வட்டி விகிதம்

பூதி ஆதிச்சம் பிடாரியார் 60 கழஞ்சு பொன் கோயிலுக்கு திருவமுது படைப்பதற்காக அளித்தார்.

அதற்கு ஆண்டுக்கு 60 கலம் நெல் பொலிசையாக (வட்டியாக) வசூலிக்கப்பட்டது.

வருடத்தில் விளையும் இரு பூ விளைச்சலில்

கார்த்திகை அகப்பட 30 கல நெல்லும்

பங்குனி அகப்பட 30 கல நெல்லும் - வட்டியாக வசூலிக்கப் பட்டது. அதனால் ஆண்டுக்கு

1 கழஞ்ச பொன்னுக்கு - 1 கலம் நெல் வட்டி என்பது தெரிகிறது.

இந்நெல் சூலக்கால் என்னும் மரக்காலால். அளக்கப்பட்டது பொன் விடேல் விடுகுக்கல் - என்னும் நிறையால் நிறுக்கப்பட்டது.

**சாந்திப்புறம்**

நொந்தா விளக்கு எரிப்பதற்கு கொடுக்கப்பட்ட நிலமும் அர்ச்சனை செய்யும் யோகிகளுக்கு அளிக்கப்பட்ட நிலமும் சாந்திப் புறம் என்றே அழைக்கப்பட்டது

**ராஜகேசரி வர்மன் கல்வெட்டுகள்**

ராஜகேசரி வர்மனின் 2, 6, 23- ஆம் ஆட்சியாண்டுகளைச் சேர்ந்த கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இருபத்து மூன்றாம் ஆட்சியாடைச் சேர்ந்த கல்வெட்டு முதலாம் ஆதித்த சோழனது என்றும் அவன் காலத்தில் நக்கன் பூதி ஆதிச்சபிடாரி நிலம் விலைக்கு வாங்கிய செய்தி காணப்படுவதால், அப்போதே கோயில் கட்டுவதற்குத் தேவையான நிலத்தை வாங்கி யிருக்கிறார் என்கிறார் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியம்.

2 மற்றும் 6-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகளும் முதலாம் ஆதித்த சோழன் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம். அல்லது கண்டராதித்தன் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம். 2-ம் ஆட்சியாண்டு கல்வெட்டில், உடையார் வீரசோழ இளங்கோ

வேளாயின ஒற்றி மதுராந்தகன் அளித்த கொடை குறிக்கப் படுகிறது. இவர் கோப்பரகேசரிவர்மன் முதலாம் பராந்தகனின் கல்வெட்டில் காணப்படும் இளங்கோ வேளினின்றும் வேறானவராக இருத்தல் வேண்டும்.

ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு சுவையானதொரு செய்தியைக் கூறுகிறது.

தஞ்சாவூர் பெருமாள் என்பவரின் பெண்டாட்டி வேட்டுவன் ஆதித்த பிடாரி - என்பவர். இவர் ஒருவரிடம் நிலம் விலைக்கு வாங்கினார். விடேல் விடுகு மங்கலத்தில் சோழப்பெருந்தேவி (அரசி) அம்பலம் ஒன்றைக் கட்டினார். இந்த அம்பலத்துக்கு அம்பலப்புறமாக வேட்டுவன் ஆதித்த பிடாரி தான் விலைக்கு வாங்கிய நிலத்தை பரிசாக அளித்தார். காரணம் சோழப் பெருந தேவிக்கு அவர் தாயார் (ஆச்சி) ஆவார். சோழப் பெருந்தேவியாகிய ராஜகேசரியின் மனைவியார் பெயர் பட்டன் மல்லி.

இந்நிலம் ஈசானமங்கலத்தைச் சேர்ந்த பாரதாயன் கண்டன் வீரநாராயணன் என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டது. இந் நிலம் - அம்பலத்திலுள்ள ஸ்வாமி போகத்திற்கும் அம்பலத்திற்கு தண்ணீரட்டும் பிராமணனுக்கும், இரு பிராமணர் உண்பதற்கும் அம்பலம் மெழுகுவார்க்கும், விளக்கெண்ணைக்கும், கலமிடும் குசவனுக்கும், புதுக்குப்புறத்திற்கும் பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டில் சோழப் பெருந்தேவியாராகிய பட்டன் மல்லியார் - நான் எடுப்பித்த அம்பலம் - என்கிறார்.

மதிரை கொண்ட கோப்பரகேசரியின் 20-ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் - இவ்வூர் கல்லம்பலத்துக்கு ஆற்று நீரட்ட ஈசான

மங்கலத்து பாரதாயன் நக்கன் கண்டன் என்பவன் பனஞ்செய் என்று கூறப்படும் அரைக்காற் செய்நிலத்தை பரிசாக அளித்திருக் கிறார்.

இந்த இரு கல்வெட்டுகளும் கூறும் அம்பலங்கள் ஒரே அம்பலமாக இருக்குமாயின் - அம்பலம் எடுத்ததாகக் கூறும் - இராஜகேசரியின் கல்வெட்டே பழமையானது. அப்படியானால் அந்த கல்வெட்டு முதலாம் ஆதித்த சோழன் காலத்தது எனலாம்.

இராஜ கேசரி முதலாம் ஆதித்தன் காலத்தில்தான் கக்கன் பூதி ஆதிச்ச பிடாரி கோயில் கட்ட நிலம் வாங்கியிருத்தல் வேண்டும் என்று கூறப்படுகிறது. ஆனால் அக்கல்வெட்டு உவச்சர்க்கு தட்டழி புறமாகக் கொடுத்தார் என்று கூறுகிறது. அம்பலத்தில் சபைக் கூட்டம் நடைபெறுகின்றபோது தட்டழி கொட்டியே தெரிவிப்பது வழக்கம். பல கல்வெட்டுகள் இத் தகவலைக் குறிப்பிடுகின்றன. எனவே உவச்சபுறமாக தட்டழி கொட்டும் உவச்சர்கள் அம்பலத்தைச் சேர்ந்தவர்களே என்பது புலனாகிறது.

அம்பலம் எடுத்த சோழப்பெருந்தேவியின் தாயார் பெயரும் வேட்டுவன் ஆதித்தபிடாரி என்பது. ஆகையால் அவரும் கொடும் பாளூர் வேளிர் குலத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். ஆகவே - அம்பலம் எடுத்த மகள், அதற்கு நிலம் கொடுத்த தாய் - ஆகியோர் பிறந்த அதே கொடும்பாளூர் வேளிர் குலத்தில் பிறந்த பூதி ஆதிச்சபிடாரி அவ்வம்பலத்துக்குத் தட்டழிபுறமாக நிலமளித் திருக்கிறார். பின்னர் சோழப்பெருந்தேவி பட்டன் மல்லியைப் போல தானும் சோழ குலத்தில் வாழ்க்கைப்பட்டபின் அரசியான பின் அதே ஊரில் கற்றளி எடுப்பித்து - நான் எடுப்பித்த கற்றளி - என்று கூறி ஏராளமான தானங்கள செய்ததுடன் தன் தந்தை

உள்ளிட்ட கொடுப்பாளூர் வேளிர் குலத்தினர் அத்தனை பேரையும் தானம் அளிக்கச் செய்து மகிழ்ந்திருக்கிறார்.

முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் திருச்செந்துறை மகாதேவர் கோயிலுக்கு அவ்வூரைச் சேர்ந்த வாச்சியன் கண்டன் சிவஞ்ஞான சம்பந்த அடிகளும் அவன் தாயும் சாலாபோகமாக நிலம் அளித்தனர். அந்நிலத்தால் வந்த வருமானம் கொண்டு வேதத்தில் வல்ல பிராமணர்க்கு தினமும் கோயிலில் உணவளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அதுபோல முதலாம் குலோத்துங்க சோழன் காலத்திலும் இக் கோயிலுக்கு உச்சியம்போதில் ஒரு சந்திக்கு வந்த அடியாரில் ஒரு மாஹேஸ்வரர்க்கு அமுதளிக்க ஒரு சட்டிச் சோறு இரு நாழி அரிசியால் அளிக்கப்பட்டது. அதற்கு வேண்டிய நெல், சட்டி ஆகிய வற்றிற்கு எவ்வளவு நெல் செலவிடப்பட வேண்டும் என்றும் மிகத் துல்லியமாகக் கூறப்பட்டுள்ளது.

## கொடும்பாளூர் வேளிர் சோழரிடம் கொண்ட மண உறவு

தென்னவன் இளங்கோ வேளுக்கு பராந்தக இளங்கோ வேளார், பூதி விக்கிரமகேசரி என்ற பெயர்களும் உண்டு.

இவர் காலத்தில் கட்டப்பட்ட கோயில்தான் கொடும்பாளூர் மூவர் கோயில் ஆகும்.

இவருக்கு கற்றளி, வரகுணப்பெருமானார், நக்கன் விக்கிரம கேசரி ஆகிய மனைவியர் இருந்தனர். இவர்களில் வரகுணப் பெருமானார் சோழ அரசன் முதலாம் ஆதித்தனின் 'திருவுடப் பிறந்தாள்' என லால் குடி கல்வெட்டும், பூதி விக்கிரமகேசரியின் அரசி என தில்லை ஸ்தானம் கல்வெட்டும் கூறுகிறது.

இந்த தென்னவன் இளங்கோவேள் என்ற பூதி விக்கிரம கேசரியின் மகள்தான் பூதி ஆதிச்ச பிடாரி, முதலாம் ஆதித்தனின் மகன் வயிற்றுப்பேரன் அரிகுலகேசரி என்ற அரிஞ்சயனை மண முடித்திருக்கிறார்.

### மற்றவர் கொடைகள்:

கோப்பரக்கேசரியின் 36ம் ஆட்சி ஆண்டு கல்வெட்டில் கொடும்பாளூர் திருப்பூதேஸ்வரத்து தேவனார் மகன் நக்கன் பொக்கி என்பவன் நாச்சியன் நாராயண நக்கனிடம் 30 கழஞ்சு பொன் கொடுத்து நிலம் வாங்கி நந்தா விளக்கு எரிப்பதற்காக அந்நிலத்தைக் கொடுத்தான்.

மதிரைக் கொண்ட பரகேசரியின் 12, 16, 20 ஆகிய ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளில் பாரதாய நாராயண நக்கன் என்பவன் பெயர் காணப்படுகிறது. இவன் முறையே மேற்கூறிய ஆட்சியாண்டுகளில் திருச்செந்துறை கற்றளி பரமேஸ்வரர்க்கு உண்ணாழிகையில் நந்தா விளக்கு எரிப்பதற்கு நிலம் கொடுத்து இருக்கின்றான். கோயிலில் பூஜை செய்யும் சிவயோகிகளுக்கும் நிலம் கொடுதது இருக்கின்றான். மேலும் இவனே திருச்செந்துறை சபையாரிடை நிலத்தை விலையிறை காவல் கொண்டு சந்திரா தித்தவர் கல்லம் பலத்து ஆற்றுத் தண்ணீர் அட்டிக் கொடுத்துள் ளான். பரகேசரியின் 12ம் ஆட்சியாண்டில் நந்தா விளக்கு எரிப்ப தற்கு நிலம் அளித்ததைப் போலவே, 16ம் ஆட்சியாண்டிலும் திருவுண்ணாழிகையில் நந்தா விளக்கு எரிப்பதற்கு நிலம் கொடுத் துள்ளான். குலோத்துங்கனின் 46ம் ஆட்சியாண்டு கல்வெட்டில் சிவபிராமணர்கள் கருப்பூருடையான் திருவேகம்பனிடம் நந்தா விளக்கு எரிக்க கொண்ட காசு நான்கு. இந்த நாலு காசுக்கு வட்டி யாக நிசதம் உழக்கு நெய்யைக் கொண்டு திருச்செந்துறை உடைய மகாதேவர் கோயிலில் திருவணுக்கன் திருவாசலுக்குள்ளே நந்தா விளக்கு எரிக்கப்பட்டது.

இரண்டாம் இராஜராஜ தேவரின் ஆறாம் ஆட்சியாண்டில் கருப்பூர் நாட்டு பட்டரும், உலக விடங்க பட்டரும், திருவாலந் துறை சண்டேஸ்வர பட்டரும், திருவுண்ணாழிகை திருப்படிக்குள் சந்திராதித்த வரையெரிக்க பசு முப்பதும், எருமை பன்னிரண்டும், வெள்ளாடு நூறும் கொடுத்திருக்கின்றனர்.

இராஜாதிராஜனின் 12வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் திருவரங்கமுடையான் வேங்கடவன் என்னும் வைணவன் ஒரு பகலும் இரவும் கூடும் வேளையில் கோயிலிலே ஏற்றப்பெறும் சந்தியாதீபம் விளக்குக்கு ஐந்து பொன் கொடுத்த செய்தி காணப் படுகிறது.

மற்றொரு கல்வெட்டில் உறத்தூர் கூற்றத்து பேராயூர் பூதிகலிச்சி ஒரு பகல் விளக்குக்கு நிலம் கொடையாக அளித்து இருக்கின்றாள். ஆனால் இந்த பூதி கலிச்சி என்பவரும் கொடும்பாளூர் வேளிர் குலத்தைச் சார்ந்தவராக இருக்கலாம்.

இவ்வாறு பொதுமக்களாலும் சபையினாலும், அரசகுலப் பெருந்தகையர்களாலும் திருச்செந்துறைக் கற்றளி பெருமானடி களுக்கு எண்ணற்ற தானங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 1. புலாலய விண்ணகர்:

திருச்செந்துறை சிவன் கோயிலினுள் உள்ள விசாலாட்சி சந்நிதியின் மேற்குப் பகுதியில் குமுதப் படையில் ஒரு கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு இராசகேசரியின் 20ம் ஆட்சி ஆண்டில் புழலய செட்டி என்பவன் இவ்வூர் திருமேற்றளியான ஸ்ரீகோயிலை புலாலய விண்ணகர் என்னும் பேரால் கற்றளி எடுப்பித்து பிரதிஷ்டை செய்ததை இக்கல்வெட்டு கூறுகிறது.

இவ்வூர்க் கற்றளிப் பெருமானடிகள் கோயில் இராஜகேசரியின் 23ம் ஆட்சியாண்டிலோ அதற்கு முன்போ எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறே இந்த புலாலய விண்ணகரும் இதே காலத்தில் கட்டப்பட்டிருத்தல் வேண்டும் என்னும் கருத்தை திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

மற்றொரு கல்வெட்டு இதே விசாலாட்சி சந்நிதியின் தெற்குப்புறம் குமுதப் படையில் காணப்படுகின்றது. இக் கல்வெட்டு புழலய விண்ணகர் அமைக்கப்பட்டதின் காரணத்தைத் தெரிவிக்கின்றது.

இக்கல்வெட்டில் அரசன் பெயர் தெரியவில்லை. வெள்ளாளன் புழலயன் என்பவனுக்கு சந்ததி துலங்க. அவனுடைய குரு அவன் பெயரால் விஷ்ணு கோயில் எடுக்க வேண்டும் என்று சொல்ல வெள்ளாளன் புழாலயன் என்பவனும் கல்லால் ஸ்ரீவிமானம் எடுப்பித்து பிரதிஷ்டை செய்து தன் பெயரால் புழாலய விண்ணகர் என்று பெயர் வைத்த செய்தியை அறிவிக்கின்றது.

''விஷ்ணு பிரதிஷ்டை புழாலய விண்ணகர் என்று உன்னா மத்தாலெடுக்க வேண்டுமென்று பணிக்க அதுவெய் முஹுர்த்தமாக அடிமண்ணைக் கல்லி மண்வெட்டி நீர் நிறுத்தி ஆனையால் மிதிப்பிச்சு கல்லாலே ஸ்ரீவிமானமெடுப்பித்து வடக்கினின்று திருமேனி கொடுவந்து தே வரை'' என்று வரும் வாசகத்தால் அறியலாம். ஈசான மங்கலத்தைச் சார்ந்த திருச்செந்துறையின் மேற்கில் விஷ்ணு கோயிலை மாணிக்க வாணிய கருநாடக புழாலய செட்டி கற்றளியாக மாற்றியதை குறிப்பிடுகின்றதே ஒழிய இக்கோயில் இருந்ததற்கான தடயங்கள் ஒரு சிலவேனும் கிடைத்தில. இந்த புலாலய விண்ணகரம் முழுவதுமாக அழிந்து விட்டது.

## மற்றைய கல்வெட்டுச் செய்திகள்:

இக்கோயிலில் கோபுர வாயிலை அடுத்துள்ள நுழைவாயில் இடப்பக்கச் சுவரில் ஒரு கல்வெட்டு உள்ளது. அரசன் பெயர், ஆட்சியாண்டுகள் தெரியவில்லை. ஆனால்,

**''செகன் குடையன்**
**ஆழ்வார்கள் நாயன்**
**இராச இராச விழு அரையன் தன்மம்''**

என்று உள்ளது.

ஆழ்வார்களின் நாயன் என்றால் ஆழ்வார்களின் தலைவன் என்று கொள்ளலாம். இராசராச விழுப்பரையன் இந்த நுழை வாயிலின் இடப்பக்க நிலைத்தூணை தர்மமாகக் கொடுத்துள் ளான். இவன் இந்த தானம் எப்போது அளித்தான் என்பது தெரிய வில்லை. அரசன் பெயர் இக்கல்வெட்டில் காணப்பட்டால் அதை வைத்து காலத்தைக் கூறிவிடலாம். மேலும் இங்கு புழாலய விண்ணகர் இருந்ததாகவும் கூறப்படுகின்றது. ஆனால் புழாலய விண்ணகர் இருந்ததற்கான தடயங்கள் இப்போது கிடைக்க வில்லை. இருந்தாலும் இந்த இராசராச விழுஅரையன் வைணவப் பற்றின் பேரால் நிலைத்தூணை தானமாகக் கொடுத்திருக்கலாம். எனினும் சிந்திக்கத்தக்கது.

கோபுர நுழைவாயிலின் வலப்புற சுவரின் விசயநகர அரசனின் காலத்து கல்வெட்டு ஒன்று உள்ளது. அக்கல்வெட்டில் ஸ்ரீரங்கமகாதேவர் என்ற விசயநகர அரசன் பற்றிய குறிப்பு வருகிறது. சகம் 1531, மாசி 16, வைகறை என்று வருகிறது. இந்த ஸ்ரீரங்க மகாதேவர் கல்வெட்டில் இறைவனுக்கு நெய்வேத்தியம் படைப் பதற்கும், புனித நீர் ஆடுவதற்கும் பொருள்கள் அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகின்றது.

## கல்லும் கவி பாடும்:

நாட்டுப் பிரிவுகள், சமுதாயச் செய்திகள், கோயிலுக்காகக் கொடுக்கப்பட்ட கொடைகள் முதலியவற்றைப் பற்றி கல்வெட்டுகள் பேசுவதோடல்லாமல் சிறந்த கவிதை மூலம் அக்கால மக்களின் வாழ்க்கை வளத்தைப் பற்றியும் பேசுகின்றன. இக்கோயிலில் விக்கிரம சோழனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் இறுதியில் ஒரு பாடல் காணப்படுகின்றது.

**''உண்ணலாம் நெய்யொடு சோறு ஓவாதே – எப்பொழுதும்**
**பண்ணெலாம் பாடி இருக்கலாம்**
**மண்ணெலா மகல் மாட நீடுர்கூர்**
**கங்கை சடைக்கரந்தாந்**
**பொன் மாடத்தெப்பொழுதும் புக்கு''**

என்னும் ஓர் அழகான பாடல் காணப்படுகின்றது. இப்பாடல் விக்கிரம சோழனின் காலத்தின் ஆட்சி வளத்தைக் காட்டுகின்றது. இவ்வேந்தன் ஆட்சிக் காலத்தின் பெரும்போர் இன்மையின் இவன்தன் ஆளுகைக்குட்பட்ட நாடுகளை எல்லாம் நேரிற் பார்த்து மக்கட்கு கலம் புரிந்து வந்தனன் என்பது இவன் பல ஊர்களி லிருந்து அனுப்பியுள்ள உத்தரவுகளால் நன்மறியக் கிடக்கின்றது. இடைவிடாமல் உண்பதற்கு நெய்யொடு உணவு மக்களுக்குக் கிடைத்தது. பண்கள் பாடி மகிழ்ந்தனர். ஆடிப்பாடி உண்டு மகிழ்ந்தனர் என்பதைப் பற்றியும் கங்கை சடைக்கரந்தாந் பொன் மாடத்தெப்பொழுதும் புக்கு என்ற வரிகளை நோக்கும்போதும் அவர்கள் இன்ப வாழ்க்கை கோயிலை மையமாகக் கொண்டே விளக்கின எனலாம்.

## கல்வெட்டில் அளவைகள்:

அளவை ஏழு வகைகளாகும். அவை, 1. எண்ணல், 2. நிறுத்தல், 3. முகத்தல், 4. பெய்தல், 5. நீட்டல், 6. தெறித்தல், 7. சார்த்தல் என்பன.

1. பருப் பொருளாக உள்ளவற்றை ஒன்று இரண்டு நூறு ஆயிரம் என்று எண்ணிக் கணக்கிடுவது எண்ணல் அளவை யாகும். மற்ற அறுவகை அளவைக்கும் எண்ணல் அளவை இன்றியமையாததாகும்.

2. குன்றி, மஞ்சாடி, கழஞ்சு, பலம், துலாம் என எடைகொண்டு தராசின் உதவியால் நிறுத்துக் கணக்கிடுவது நிறுத்தல் அளவை ஆகும். எடுத்தல் என்று கூறப்படும்.

3. நீர், பால், மோர், நெய், எண்ணெய் போன்ற நீரியல் பொருளை உழக்கு, படி போன்றவற்றால் முகந்து அளப்பது முகத்தல் அளவை ஆகும்.

4. நெல், வரகு போன்றவற்றை படி, மரக்கால் ஆகியவற்றில் சொரிந்து அளப்பது பெய்தல் அளவை ஆகும்.

5. நூல், விரல், சாண், முழம், குழி என அகல நீள உயரத்தைக் கை அல்லது கோல்களால் அளப்பது நீட்டல் அளவை ஆகும்

6. நொடி, நாழிகை, நாள், கிழமை, திங்கள், ஆண்டு எனக் காலத்தைக் கணித்தளிப்பது தெளிப்பளவை ஆகும்.

7. ஒலி, நிறம், ஒளி, தரம், உரு முதலியவற்றைச் செப்பு அல்லது காட்டி 'இப்படி' அதைப் போல் என்று ஒப்பிட்டு அளப்பது சார்ந்தலளவை ஆகும்.

பொதுவாக சோழர்கள் காலத்தில் மேற்கூறிய அளவை முறைகள் அனைத்தும் இடம்பெறுகின்றன. இக்கோயிலில் உள்ள கல்வெட்டில் வரும் அளவைகளை நோக்குவோம்.

**எண் அளவை:**

எண்ணை உழக்குக்கும் விட்ட முத்திரை பசு முப்பதும் எருமை பன்னிரண்டும், வெள்ளாடு நூறும்........ முந்திரையும் கைக்கொண்டோம்.

பன்னிரண்டு, முப்பது, நூறு என்று எண்ணல் அளவைகள் வருவதைக் காணலாம்.

**நிறுத்தல் அளவை:**

நாங்கள் கொண்டு பொன் குடிசைக் கல்லால் நிறை 15. இப்பொன் பதினைந்து கழைஞ்சினாலும் காசு ஒன்றுக்குப் பொன் மஞ்சாடியும் குன்றியாக வந்த குற்றம் அற்றம் நற்காசு.

விடேல் விடுகு கல்லால் துளைப்பட்டது பதின் கழஞ்சு பொன், கழஞ்சு, மஞ்சாடி, குன்றி ஆகிய நிறுத்தல் அளவைகள் என்று வருவதைக் காண்க.

**முகத்தல் அளவை:**

இக்காசு நாலுங்கைக்கொண்டு இக்காசுக்குப் பலிசையாக நிசதம் உழக்கு நெய்யால் ஒரு திரு நந்தாவிளக்கு இரவு பகல் எரிக்கக் கடவோம். இவ்வாறு எத்தனை எத்தனையோ?

**பெய்தல் அளவை:**

குத்தல் பழவரிசி அறுநாழியும், தூப்பருப்பு இரு நாழியால் நெல் குறுணியும் நெய் உரியினால் நெல் பதக்கும்.

இவ்வாறே, பதக்கு, குறுணி, முக்குறுணி, உரிபோன்ற அளவைகள் பற்றி பேசப்படுகின்றன.

**நீட்டல் அளவை:**

நெய்யாடி அருளவும் ஆணடு வரை நாற்பத்தாறு கலனே இரு தூணி குறுணி. இந்நெல்லால் நிலம் ஒன்பது மாக்காணி அரைக் காணியும் என்று நீட்டல் அளவைகளும் காணப்படுகின்றன.

**தெறிப்பு அளவை:**

உத்திரட்டாதி நாள் நறுநெய் ஆடி அருள நாழி நெய்க்குத் தூணி நெல்லானபடி திங்கள் பதினாழி நெய்யால் திங்கள் முக்கலனே தூணி ஆனபடி ஆண்டுவரை நூற்று இருபதினாழி நெய்.

இவ்வாறு நாள், மாதம், ஆண்டு என தெறிப்பு அளவைகள் வந்துள்ளன.

**சார்த்தல் அளவை:**

ஒலி, நிறம், ஒளி, தரம், மரு முதலியவற்றைச் செப்பு அல்லது காட்டி. இப்படி இதைப் போல என்று ஒப்பிட்டு அளப்பது சார்த்தல் அளவை ஆகும். இராஜேந்திரனின் 21ம் ஆட்சியாண்டு கல்வெட்டில் 'குடிஞை கல்லால் நிறை எடுத்து' என்று வந்துள்ளது. திருச்செந்துறை உடையார் மரக்கால் என்னும் ஒப்பிட்டு அளவையும் காணப்படுகின்றது. இந்த சார்த்தல் அளவை முறையை இராஜராஜன் கல்வெட்டுகள் பலவற்றுள் காணலாம்.

**விடேல் விடுகு:**

இக்கோயிலுள்ள கல்வெட்டில் விடேல் விடுகு என்னும் பொன்னை நிறுக்கும் எடைக்கு விடேல் விடுகு கல் என்று பெயர்.

முத்தரையர் என்பார் தஞ்சை மாநகர்க்கு வடமேற்கே இந் நாளில் செந்தலை என்று வழங்கும் சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலத்திலிருந்து அதனை சார்ந்த நாட்டை ஆண்டு வந்த குறுநில மன்னர் ஆவர். தஞ்சைக்கு அண்மையில் வல்லமும் அவர்கட்குத் தலைநகரமாக இருந்திருத்தல் வேண்டும் என்று தெரிகிறது. அவர்கள் பெரும்பிடுகு, மாறபிடுகு, விடேல்விடுகு, பகாப்பிடுகு முதலான பல்லவ அரசர்க்குரிய பட்டங்களை

உடையவர்களாகக் காணப்படுவதால் அம்மரபினர் பல்லவர்களுக்குத் திறை செலுத்திக் கொண்டு அவர்களுக்குக் கீழ் சிற்றரசராய் இருந்தனர். விடேல் விடுகு என்னும் பெயர் பல்லவர்களில் இரண்டாம் நந்திவர்மனுக்கு உண்டு.

விடேல் விடுகு முத்தரையன் கொடும்பாளூர் ஸ்ரீவிக்கிரம கேசரியின் சமகாலத்தவன்.

திருக்காட்டுப்பள்ளி அக்னீஸ்வரர் கோயில் மகா மண்டபத்தின் தெற்குப் பக்கவாயில் படிக்கட்டில் காணப்பெறும். அக் கல்வெட்டில்,

> **''நியமத்து ஆமிரத்தளி மஹா**
> **தேவர்க்கு விடேல் விடுகு முத்தரையர்**
> **மகளான சாத்தங்காளி''**

என்று குறிக்கப்பட்டுள்ளது.

இவ்விடேல் விடுகு முத்தரையனே குவாவன் சாத்தன் ஆவான். எனவே இவன் பட்டப் பெயராலேயே தங்கத்தை நிறுப்பதற்கு பயன்பட்ட கல்லுக்கு விடேல் விடுகுக் கல் என்று பெயர் வைத்திருக்கலாம். விடேல் விடுகு மங்கலம் என்று மதிரைக் கொண்ட பரகேசரியின் 2ம் ஆட்சியாண்டு கல்வெட்டில் காணப்படுகின்றது. எனவே இவன் பெயராலேயே விடேல் விடுகு மங்கலமும் இருந்திருக்கலாம்.

**குடிஞைக் கல்**

நிர்ணயமான எடைக்கல் குடிநற்கல் எனவும் படும். இக் கல்லும் பொன்னை நிறுப்பதற்கு பயன்படுத்தப்பட்ட எடைக்கல் ஆகும்.

## நெல் முகக்கும் அளவை

திருச்செந்துறை உடையார் மரக்கால் என்ற அளவை முதலாம் குலோத்துங்கனின் 46ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் காணப் படுகின்றது. இந்த அளவை பெரிய அளவை ஆகும். நெல் முதலியன அளப்பதற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

சூலக்கால் என்ற மற்றொரு அளவையும் காணப்படுகின்றது. சூலக்குறி பொறிக்கப் பெற்ற சிவன் கோயில் அளவை சூலக்கால் என்னும் மரக்கால் ஆகும்.

## சோழர் கல்வெட்டால் அறியலாகும் சமுதாயச் செய்திகள்:

பிற்கால சோழப் பரம்பரைக்கு அடிகோலிய விசயாலயனின் ஆட்சிக்காலம் தொடங்கி சற்றேறக்குறைய நானூறு ஆண்டு களாகத் தென்னிந்தியாவை ஒரு குடைக்கீழ்க் கொண்டு வந்து சோழப் பேரரசர்கள் ஆட்சி செய்தனர். அக்காலத்தில் அவர்கள் வழங்கிய செப்புப் பட்டயம் கல்வெட்டு எண்ணற்றவை. அவர்கள் காலத்தில் பொறிக்கப்பெற்ற எண்ணற்ற கல்வெட்டுகள் அனைத்தும் இன்று நமக்குக் கிடைத்துள்ளன. அக்கல்வெட்டுகள் அரசரால், அரசாங்க அதிகாரிகளால் குறுநில மன்னர்களால் வெளியிடப்பட்டவை. அவையாவும் அன்றைய அரசியல் நெறிமுறைகளையும் பிற அரிய வரலாற்றுக் கருத்துக்களையும் உணர்த்தும் கருவியாக விளங்குகின்றன.

சோழர் காலத்திய தமிழ்ச் சமுதாயம் நெகிழ்ச்சி மிக்க ஒன்று. அச்சமுதாய அமைப்பின் அடிப்படையாகச் சாதி அமைந்திருந்தது. சோழப் பேரரசர்களின் ஆட்சிக் காலத்தில்தான் இன்றைக்குத் தமிழகத்தில் காணப்படும் பல்வேறு சாதிகள் அரும்பின. அக்

காலத்தில் மேல் வகுப்பினர், கீழ் வகுப்பினர் என்ற பாகுபாடு நிலைப்பெற்று இருந்தது என்பதை சோழர் காலத்துக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

சோழர்கள் காலத்தில் சமுதாயத்தில் தலைமையிடத்தில் பிராமணர்கள் சிறப்புற்று இருந்தனர். இவர்கள் வேதங்களிலும் சாத்திரங்களிலும் வல்லுநர்களாகவும் இருந்தனர். இவர்கள் வாழ்ந்த பகுதிகள் பிரம்மதேயம் அல்லது சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டன. அவை பெரும்பாலும் இறையிலியாக வழங்கப் பெற்றிருக்கும். தாசியர்க் குலத்தைச் சேர்ந்த பெண்கள் கோயில் களுக்குப் பொட்டுக் கட்டிக்கொண்டு பணிபுரிந்து இருக்கின்றனர். அக்காலத்தில் கோயிலுக்கென்று பொட்டுக் கட்டிக் கொண்ட பெண்கள் மாணிக்கத்தார் என்னும் பெயரால் வழங்கப்பட்டனர். இன்றும் இக்குலத்தைச் சேர்ந்த பெண்கள் பெயருக்கு இறுதியில் மாணிக்கத்தார் என்னும் பெயரைச் சேர்த்துக் கொள்கின்றனர். ஆண்களாக இருந்தால் விநோதி என்ற பட்டத்தைப் பெயருக்குப் பின் சேர்த்துக் கொள்கின்றனர்.

மேலும் திருக்கோயில்களில் நாள்தோறும் நண்பகற் பொழுதில் பிராமணர்களுக்கு உணவளிக்கும் பொருட்டு அரசர் களும், அதிகாரிகளும், செல்வர்களும் அறக்கட்டளைகள் பல அமைத்ததைப் பற்றிக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

கோயிலின் பாதுகாப்புப் பணியும் அறக்கட்டளைகளும் பிராமணரிடமே ஒப்படைக்கப்பட்டன. சிவன் கோயில் நிர்வாக மானது மூலப்பருடையார் என்ற சபையாரிடம் ஒப்படைக்கப்பட்டது. அச்சபையின் உறுப்பினர் அனைவரும் பிராமணர்களாகவே இருந்தனர். உழைப்பின்றியே தானமாகப் பெற்ற நிலங்களும்

ஊர்களும், அரசாங்கச் செல்வாக்கும், வேள்வி வளர்க்கும் தனி உரிமையும் தம்மிடம் குவிக்கப்பெற்ற பிராமணர்கள் அவை யாவும் எக்காலமும் தம்மிடமே நிலைத்து நிற்கவும், மேன்மேலும் வளர்ந்து வரவும், தம் குலத்தின் தலைமைப் பதவி நீடித்து வரவும் பல முயற்சிகளை மேற்கொள்ளலானார்கள். மன்னரின் முழு ஆதரவையும் அவர்கள் பெற்றனர்.

பண்டைக் காலம் முதல் நிலத்தினை உழுது பயிரிட்டு வந்த உழவர்களும் உழுவித்துண்டு வாழ்ந்த வேளாளர்களும் பிராமணர்களுக்கு அடுத்தபடி சோழப் பேரரசில் சிறப்புற்று விளங்கினர் எனலாம். உழுவித்துண்போர், குறுநில மன்னர் களாகவும், சிற்றரசர்களாகவும், அரசியல் அதிகாரிகளாகவும், படைத் தலைவர்களாகவும் பணியாற்றி வந்தனர்.

சோழர்கள் காலத்தில் வணிகம் செய்து வந்த மக்கள் வாணியர் என்றும் செட்டிகள் என்றும் பெயர் பெற்றிருந்தனர் என்று அறியலாம். இக்கோயிலுள்ள கல்வெட்டு ஒன்றில் "தஞ்சாவூர் மடிகை மாணிக்க வாணியன் கருநாடக புழலய செட்டி" என்னும் அடியால் அறியலாம். இந்த வணிகர்களுக்குள்ளேயே நாநாதேச திசையாயிரத்தைந் நூற்றுவர், மணிக்கிராமத்தார், நகரத்தார், வளஞ்சியர், அஞ்சுவண்ணத்தார் என்ற பல குழு வினர் இருந்தனர் என்பது அக்காலத்திய கல்வெட்டுகளால் தெரிய வருகிறது. மேலும் இங்குள்ள கல்வெட்டுகளில் வெள்ளாளன், போன்ற ஜாதிப் பிரிவுகள் சோழர் காலத்திலேயே அரும்பி விட்டன என்பதை அறிய முடிகின்றன. மேலும் இக்கல்வெட்டுகளில் அக்காலத்திலேயே நிலைபெற்றுள்ள கோத்திரங்களைப் பற்றியும் அறிய முடிகின்றது. மதிரை கொண்ட பரகேசரியின் கல்வெட்டு களில் பாரதாய நாராயண நக்கன் குறிக்கப்படுகின்றான். நாராயண நக்கன் என்னும் பெயருக்கு முன்பு பாரதாயந் என்னும் கோத்திரம்

குறிக்கப்படுகின்றது. பாரதாயந் என்பது பாரத்துவாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவன் என்பது பொருள். ஜாதிப் பெயரைத்தான் ஒருவர் பெயர் பின்பு சேர்த்து குறிக்கப்படுதல் வழக்கம். ஆனால் சோழர்கள் காலத்தில் பெயருக்கு முன்பு கோத்திரத்தைச் சேர்த்துக் கொள்ளும் வழக்கம் இருந்திருக்கிறது.

இராஜாதிராஜன் 12ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் வைகாஸநரில் திருவரங்கமுடையாந் வேங்கடவன் என்று வருகின்றது. வைகாநஸம் என்பது வைணவத்தில் ஒரு பிரிவாகும்.

''இப்போது தமிழரின் சமுகத்தைத் துண்டாடி, உயர்வு தாழ்வு கற்பித்துக் குடிநலன்களை ஒரு சிலர் கைகளிலேயே குவித்துவரும் குல வேறுபாடுகள் அத்தனையும் சோழர் காலத்திலேயே கிளைத்து விட்டன என்று திரு. கே.கே. பிள்ளை அவர்கள் கூறும் கருத்தும் குறிப்பிடத்தக்கது.

## சோழர் கல்வெட்டில் காணும் அன்றும் இன்றும் இறவா ஊர்கள்:

இராஜாதிராஜனின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் திருவாலந்துறை என்னும் ஊரின் குறிப்பு வருகின்றது. திருவாலந் துறை என்பது திருச்செந்துறைக்குக் கிழக்கே ஒரு மைல் தொலைவில் உள்ள ஊராகும். இப்போது இந்த திருவாலந்துறை அந்த நல்லூர் என்னும் பெயரால் வழங்குகின்றது. இதே கல் வெட்டில் கருப்பூர் நாடு பற்றிய குறிப்பு வருகின்றது. திருச் செந்துறைக்கு வடக்கே உள்ளது பெரிய கருப்பூர் என்றும், திருச் செந்துறைக்குத் தெற்கே உள்ளது சிறிய கருப்பூர் நாடு என்றும் அழைக்கப்படுகின்றன.

பரகேசரியின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் திருப் பராய்த்துறை பெருமானடிகள் என்ற பெயர் கூறப்பட்டிருக்கிறது.

திருப்பராய்த்துறை பெருமானடிகள் என்பது திருப்பராய்த்துறை யில் குடிகொண்டுள்ள இறைவனைக் குறிக்கும். இத்திருப்பராய்த் துறை காவிரியில் தென் கரையில் அமைந்துள்ளது. திருச்செந் துறையிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ளது. இப்போதும் திருப்பராய்த்துறை என்ற பெயராலேயே அவ்வூர் வழங்கப்படு கின்றது.

கோப்பரகேசரியின் இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட் டில் திருவெள்ளறை என்னும் ஊர் பெயரும் குறிக்கப்படுகிறது. திருவெள்ளறை திருச்சியில் இருந்து 12 மைல் தொலைவில் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இப்போதும் திருவெள்ளறை என்னும் பெயராலேயே அழைக்கப்பட்டு வருகிறது.

முதலாம் குலோத்துங்கனின் 46ம் ஆட்சியாண்டுக் கல்வெட் டில் திருவையாறு குறிக்கப்படுகின்றது. இவ்வூர் தஞ்சாவூரி லிருந்து பத்து மைல் தொலைவில் அமைந்துள்ளன. இப்போதும் திருவையாறு என்ற பெயராலேயே நிலைத்து நிற்கின்றது.

மதிரை கொண்ட கோப்பரகேசரியின் 16ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் அமண்குடி என்ற ஊரின் குறிப்பு வருகிறது. இந்த அமண்குடி திருச்செந்துறைக்கு மேற்கே 1/2 மைல் தொலைவில் உள்ள ஊராகும். இந்த அமண்குடி இப்போது அம்மன்குடி என்ற பெயரால் வழங்கப்படுகின்றது.

எனவே கல்வெட்டில் மேற்கூறிய ஊர்கள் இன்றும் இறவாமல் வாழ்கின்றன.

## கல்வெட்டில் பொருள் மதிப்பும் குறியீடுகளும்:

ஒரு பொருளின் அளவைக்கு (மதிப்பிற்கு) மற்றொரு பொருளின் மதிப்பீடுகள் எவ்வளவு என்பதைக் குறிக்க வல்ல

சில செய்திகள் இங்குள்ள கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. அதே சமயத்தில் ஒரு பொருளைக் குறிக்க சில குறியீடுகளும் காணப்படுகின்றன.

1 நாழி நெய் - 1 தூணி நெல்
1 உரி நெய் - 1 பதக்கு நெல்
3 பலம் சர்க்கரை - 2 நாழி நெல்
பத்து வாழைப்பழம் - ஐந்நாழி நெல்
இரு நாழி தூப்பருப்பு - குறுணி நெல்
பத்துப் பாக்கு ஒரு பற்று வெற்றிலை - 2 தூணி நெல்

இவ்வாறு மேற்கூறிய பொருள் மதிப்பில் ஒரு நாழி நெய் ஒரு தூணி நெல்லுக்குச் சமமாக உள்ளது. ஒரு உரி நெய் ஒரு பதக்கு நெல்லுக்கும், ஒரு பலம் சர்க்கரை ஒரு நாழி நெல்லுக்கும், பத்து வாழைப்பழம் ஐந்து நாழி நெல்லுக்கும், இரு நாழி தூப்பருப்பு ஒரு குறுணி நெல்லுக்கும், பத்து பாக்கும், ஒரு பற்று வெற்றிலையும் இரண்டு தூணி நெல்லுக்கும் சமமானவை.

ஒரு பொருளின் மதிப்பிற்கு மற்றொரு பொருளின் அளவை நிர்ணயித்ததோடு அல்லாமல், ஒரு சில பொருள்களை குறியீடு களாலும் குறிப்பிட்டுள்ளனர். திருச்செந்துறையில் உள்ள கல் வெட்டுகளிலும்

கலம்
பொன்
நெல்
அரை வீசம்
முக்காணி
இருமா

போன்ற எண்ணற்ற அளவுகள் குறியீடுகளிலும் காட்டப்பட் டிருக்கின்றன.

## முடிவுரை:

வரலாற்று மூலங்களுள் ஒன்றாகிய கல்வெட்டு எண்ணற்ற செய்திகளை நமக்கு அள்ளித் தெளிக்கின்றன. கோயில்களில் கொடைகள் பல்வகைப் பணிகளுக்கும் அளிக்கப்பட்டமைத் தெரிவிக்கின்றன. கோயிலில் பூசை செய்யும் சிவயோகிகளுக்கும் அம்பலம் மெழுகு வாளுக்கும், உச்சியம்போதில் அடியாருக்கு அமுது செய்யவும், கோயிலில் நடக்கும் திருவிழாவை முன்னிட்டு திருவொற்றியூர் அடிகள் என்பவன் தன் திருமணத்தை முன்னிட்டும் பொன்னும், பொருளுமாகக் கொடை அளிக்கப்பட்டச் செய்தியும் இன்னும் பிற செய்திகளையும் அள்ளித் தெளிக்கும் கல்வெட்டுகள் வரலாற்று மூலங்களுக்கு இன்றியமையாதனவே.

கல்வெட்டுகள் வரலாற்று மூலமாக விளங்குவதோடல்லாமல் மொழியியல் கருவியாகவும் விளங்குகின்றன. கல்வெட்டில் அன்று காணும் சில சொற்கள் இன்று வழக்கொழிந்து காணப்படுகின்றன. இக்கல்வெட்டில் வரும் சில சொற்கள் வழக்கொழிந்து விட்டன. கல்வெட்டில் காணும் உண்ணாழிகை இன்று கருவறை என்ற சொல்லால் வழங்கப்படுகின்றது. சிவயோகி என்னும் சொல் இன்று குருக்கள், அர்ச்சகர் என்ற சொல்லால் தான் வழங்கப் படுகின்றது.

இறை என்பது அன்று வரி என்னும் பொருளில் வழங்கப் பட்டது. இன்று இறை என்பது அரசன் என்ற பொருளிலும் வழங்கப்படுகின்றது. அன்று ஓராண்டைக் குறிக்க ஆட்டை என்ற சொல்லால் வழங்கியுள்ளனர். இன்று ஆண்டு என்றே வழங்கப் படுகின்றது. இன்று வழங்கும் தினமும் என்ற சொல் அன்று நிசதம் என்ற சொல்லால் வழங்கப்பட்டுள்ளது. இன்று வழங்கும் வட்டி என்னும் சொல் அன்று அழகாக பலிசை என்னும் சொற்களால் வழங்கப்பட்டது. இன்று பூசை செய்வார் என்று

வழங்கும் சொல்லை அன்று கல்வெட்டில் மாணி என்ற அழகிய தமிழ்ச் சொல்லால் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கல்வெட்டில் காணும் அழகான சொற்கள் இன்று வழக்கொழிந்து வேறு சொற்களால் வழங்கப்படுகின்றன. இவ்வாறு தமிழ்நாட்டில் கிடைத்துள்ள அனைத்துக் கல்வெட்டுகளையும் ஆராய்ந்தால் ஒரு பெரிய மொழியியல் நூலையே எழுதிவிடலாம். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் விளங்கும்.

எனவே கல்வெட்டுகள் வரலாற்றுப் புதைப் பொருளாகவும் மொழியியல் கருவியாகவும் விளங்குகின்றன என்பது வெள்ளிடை மலை.

# 5. திருச்செந்துறை வேணுகோபாலப் பெருமாள் கோயில்

திருச்செந்துறை அக்கிரகாரத்தை ஒட்டி வேணுகோபால சுவாமி ஆலயம் உள்ளது. இக்கோயில் வயது 300 ஆண்டுகள் பழமையானது என்று கூறப்படுகின்றது. ஆனால் 300 ஆண்டுகளின் பழமையைக் காணமுடியவில்லை.

இவ்வூர்க் கல்வெட்டில் காணப்படும் புழாலய விண்ணகர் முற்றிலும் அழிந்துவிட்டமையால் புதிதாக விஷ்ணுவிற்கு கோயில் எடுக்கப்பட்டது போலும்.

மேக்னால்டு, கீத் போன்ற அறிஞர்கள் விஷ்ணுவின் பெயரை வைத்துக் கொண்டு சூரிய வழிபாட்டிலிருந்து வளர்ச்சி யடைந்த ஒரு நிலையாக இருக்கலாம் என்று நினைக்கின்றனர். விஷ்ணு உயிர் இனங்களின் கடவுள், தாவரங்களின் கடவுள் என்று கூறப்படுகின்றார். இதைக் கொண்டு சூரியனுக்கும் விஷ்ணு விற்கும் தொடர்பு இருக்கலாம் என்று கருதுகிறார்கள். விஷ்ணு யாகங்களின் தலைவனாகவும் கூறப்படுகிறார். நாளடைவில் வைணவ மதம் பெருகும் அளவிற்கு விஷ்ணுவின் பெருமை பரவலாயிற்று. அனைத்து மதங்களும் விஷ்ணு மதத்திலிருந்து தோன்றின என்ற கருத்தும் ஏற்படலாயின. மகாபாரதம் விஷ்ணுவைப் பற்றி புகழ்ந்து பேசுகிறது. வைணவப் பகுதி மிகுதியாக ஏற்பட்டக் காலம் மகாபாரதக் காலம் எனலாம். முதலில் வாசுதேவன் என்ற பெயரில்தான் விஷ்ணு அழைக்கப்பட்டார்.

விஷ்ணுவிற்கு அவதாரம் உண்டு. சிவபெருமானுக்கு அவதாரம் கிடையாது.

''தேவுடை மீனமாய் ஆமையாய் ஏனமாய்
அரியாய் குறளாய் மூவுருவில் இராமனாய்
கண்ணனாய் கல்கியாய் முடிப்பான் கோயில்''

இந்த பத்து அவதாரங்களையும் கொண்டவன் விஷ்ணு. இது தவிர கேசவன், நாராயணன், கோவிந்தன், மாதவன், மதுசூதனன், திருவிக்ரமன், ரிஷிகேசவன், வாமனன், பத்மநாபன், தாமோதரன், விஷ்ணு, ஸ்ரீதரன் என்ற பெயர்கள் உண்டு. இந்த 12 பேருக்கும் 12 மூர்த்திகள் என்று பெயர். சங்கு, சக்கரம், கதை, பத்மம் இந்நான்கும் மேற்கூறிய 12 உருவங்களின் கைகளில் காணப்படும். திருச்செந் துறையில் குழலூதும் பிள்ளையாக விஷ்ணு வேணுகோபால் என்ற பெயரில் அர்த்த மண்டபத்தில் காணப்படுகின்றார். கர்ப்பக் கிரகத்தில் பெருமாள் ஸ்ரீதேவி பூதேவியுடன் காணப்படுகின்றார். முன் மண்டபத்தில் கருடாழ்வார் சிலை உள்ளது.

**பெருமாள் (ரங்கநாதர்):**

நான்கு கைகளுடன் நின்ற நிலையில் காணப்படுகிறார். மேலிரு கரங்களில் முறையே சக்கரமும் சங்கும், கீழிருகரங்கள் அபயமாகவும் கதை மேல் ஊன்றியும் காணப்படுகின்றன.

இந்த ரங்கநாதர் சிலை செப்பினால் ஆனது.
உயரம் 76 செ.மீ. காலம் 17ம் நூற்றாண்டு.

**ஸ்ரீதேவி:**

நின்ற நிலை, இரண்டு கைகள், இடக்கரம் லோல ஹஸ்த மாகவும் வலக்கரம் கடக ஹஸ்தமாகவும் காணப்படுகிறது.

இந்த செப்புத் திருமேனி 62.5 செ.மீ. உயரமுள்ளது.
காலம் 17ம் நூற்றாண்டு.

### பூதேவி:

நின்ற நிலை, இரண்டு கைகள். இந்தச் செப்புத் திருமேனி 63 செ.மீ. உயரமுள்ளது. இடக்கரம் கடக ஹஸ்தமாகவும், வலக்கரம் லோல ஹஸ்தமாகவும் காணப்படுகிறது. மேலும் இக் கோயிலில் அனுமனுக்கு என்று தனி சந்நிதி உள்ளது. இக் கோயிலின் பரம்பரை பட்டாச்சாரியால் பூசை செய்யப்படுகின்றது. வருடத்திற்கு 20 கலம் 8 மரக்கால் நெல் பூசை செய்யும் பட்டாச் சாரிக்கு வழங்கப்படுகின்றது.

இவ்வாலயத்தில் ஒரு கால பூசை மட்டும் தினமும் காலையில் நடைபெறுகின்றது.

### திருவிழாக்கள்:

ஸ்ரீஜெயந்தி விழா கொண்டாடப்படுகிறது. நவராத்திரி 9 நாள், விசயதசமி அன்று அம்பு போடுதல் உட்பட சுவாமி புறப்பாடு, தீபாவளி, திருகார்த்திகை, தமிழ் வருடப் பிறப்பு ஆகிய விழாக்கள் நடைபெறுகின்றன.

ஆண்டுதோறும் அரங்கநாதர் ஸ்ரீரங்கத்திலிருந்து இலக்குமியை திருமணம் செய்வதற்கு திருச்செந்துறைக்கு வருகின்ற பங்குனி உத்திர நாளன்று இவ்வேணுகோபாலசுவாமி ஆலயத்திற்கும் செல்வார். ரங்கநாதருக்கு பூசைகள் செய்யப்பட்டு பக்தர்களுக்கு துளசி தீர்த்தம் வழங்கப்படுகின்றது.

இக்கோயில் மிகவும் சிறியது. இக்கோயிலுக்கு வழங்கும் சிறப்பான செய்திகள் எதுவும் இல்லை. கல்வெட்டு ஆதாரம் இல்லை. இக்கோயில் 300 ஆண்டுகள் பழமை என்றாலும் சில வருடங்களுக்கு முன்பு (1938) சீர்திருத்தப்பட்டுள்ளது.

# 6. திருச்செந்துறை கிராம தேவதைகள்

தமிழகத்தில் சிவன், திருமால், முருகன், விநாயகா், சக்தி முதலிய பெருந்தெய்வங்களன்றி, சிறு தெய்வங்களையும் எண ணிறந்த அளவில் மக்கள் வழிபட்டு வருகின்றனா். மொத்தத்தில் இந்துக்களின் சிறுதேவதை வழிபாடு, நல்ல நம்பிக்கையின அடிப் படையில் எழுந்ததே தவிர, மூட நம்பிக்கையில் எழுந்தது அல்ல. குறிப்பிட்ட இன மக்களால் மட்டுமே மதித்து வணங்கப்பட்ட சிறு தேவதைகள் இப்போதும் எல்லோராலும் மதிக்கப்படுகின்றன.

இச்சிறு தெய்வங்கள் பெரும்பாலும் பெண் தெய்வமே. ஒவ்வொரு ஊரிலும் இந்த பெண் தெய்வம் பெயரால் வேறுபடு கின்றது. இத்தெய்வம் இரண்டு பெரும் பிரிவாகத் திகழ்ந்தது. துர்க்கை அம்சம் ஒன்று, காளி அம்சம் மற்றொன்று. மகிஷா சுரனை அழித்த தெய்வீக அம்சம் துர்க்கை. அசும்பன், நிசும்பன் என்ற அசுரர்களை அழித்த அம்சம் காளி. துர்க்கைக் கையில் சங்கு சக்கரம் கொண்டு எருமைத் தலையில் நிற்பவள். காளி பல கரங்களை உடையவள். சூலம், கபாலம், கத்தி, கேடயம் முதலியன தாங்குபவள். காளிஅமர்ந்த கோலம். எல்லா கிராமங்களிலும் காளி அம்சத்தில்தான் வழிபாடு நடைபெறுகின்றன.

இவ்வாறு காளியின் அம்சம் எந்தக் காலத்திலிருந்து வழிபாட் டில் இருக்கிறது என்பதை நோக்கும்போது மாமல்லையில் சிறந்த ஒரு காளி இருக்கிறது. கி.பி. 8ம் நூற்றாண்டில் காளி வழிபாடு தமிழகத்தில் உயர்ந்த நிலையை அடைந்தது என்று கூறலாம். கி.பி. 8, 9ம் நூற்றாண்டில் தஞ்சைக்கு அருகில் செந்தலை, நேமம்

என்ற பகுதிகளை முத்தரையர் என்ற சிற்றரசர்கள் ஆண்டனர். இவர்களில் சுவறன் மாறன் என்பவன் மிகச் சிறந்த வீரன். பல ஊர்களை வென்றவன். இவன் நியமத்தில் காளிக்கு ஒரு பெருங் கோயில் எடுத்தான். இவன் நியமத்து காளிக்குத் தான் வெற்றி கொண்ட ஊர்கள் அனைத்தையும் அளித்தான். இவை அனைத் தையும் கல்லிலே வெட்டி வைத்துள்ளான். செந்தலை என்ற ஊரில் அக்கல்வெட்டு இருக்கிறது. கல்வெட்டு இத்தேவியை நியம மகாகாளத்துப் பிடாரி'' என்று கூறுகிறது.

இக்காளியின் பெருமையை உணர்ந்து இரண்டு பேரரசர்கள் வழிபாட்டிற்குப் பொருள் கொடுத்தனர். இருவரில் ஒருவன் பல்லவன். மற்றொருவன் பாண்டியன். இந்தப் பல்லவனும் பாண்டியனும் யார்?

நந்திக் கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவனாய் இலங்கும் தெள்ளாறு எறிந்த நந்தி இத்தேவியின் வழிபாட்டிற்குப் பொன்னை அளித்தாள். மற்றொரு பேரரசன் மணிவாசகரின் சமகாலத்தவரான பாண்டியன் இரண்டாம் வரகுணன். இவனது ஆட்சியில் வழி பாட்டிற்குப் பொருள் கொடுத்துள்ளான். இதன் பிறகு பிற்கால சோழப் பேரரசை நிறுவுவதற்கு முதன்மை ஆக விளங்கிய விசயாலய சோழன் தஞ்சையை முத்தரையர்களிடமிருந்து கைப்பற்றினான்.

**''மீதெல்லாம் எண்கொண்ட தொண்ணூற்றின்**
**மேல் இரு மூன்று**
**புண் கொண்ட வென்றிப் புரவலன்''**

என்று உலாக்கள் புகழும் பேராளன்.

இவன் நிலைநிறுத்திய சோழப் பேரரசு சுமார் 400 ஆண்டு கட்கு இந்திய நாடே கண்டிராத அளவிற்கு மாபெரும் பேரரசாகத்

திகழ்ந்தது. பெரும் வெற்றிக்கு அருள்பாலித்தவள் தேவி நிசும்ப சூதனி என்று கருதிய விஜயபாலன் தஞ்சையில் நிசும்ப சூதனியாகிய மாகாளியைப் பிரதிட்டை செய்து சோழப் பேரரசை தொடங்கி வைத்தான். இக்காளி சோழப் பேரரசர்களின் குலதெய்வம் என்றே சொல்லலாம். தஞ்சையில் இன்றும் நிசும்ப சூதனியை வடபத்ரகாளி என்ற பெயரால் வழிபட்டு வருகின்றனர். காளி எப்போதும் மக்களால் வெற்றியின் அம்சமாகக் கருதப்படுபவள்.

முற்காலச் சோழர் ஆலயங்களில் எல்லாம் சிறுசிறு சிற்பத் தொகுதிகளில் காளி தனியே நடனமாடுவது போன்றும், நடராசரும், காளியும் நடனமாடுவது போன்றும், மிக நுண்ணிய முறையில் செதுக்கப்பட்டிருக்கும் சிற்பங்களைக் காணலாம். திருச்செந்துறை சந்திகரசேகர சுவாமி ஆலயத்திலும் இத்தகைய அழகிய மிக நுண்ணிய சிற்பங்களைக் காணமுடிகின்றன. இவ்வாறு காளி வழிபாடு 9ம் நூற்றாண்டில் படிப்படியாக வளரத் தொடங்கி இன்று பல்வேறு ஊர்களில் பல்வேறு பெயர்கள் சூட்டப்பெற்று மக்களின் வழிபாட்டில் சிறப்பிற்குரியவளாய் திகழ்கின்றாள்.

ஒவ்வொரு ஊரிலும் மூலை முடுக்குகளிலெல்லாம் பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும், வால்வளைமேனி வாலியோன் கோயிலும் இருக்கின்றதோ அங்கெல்லாம் மகா காளத்துப் பிடாரி கோயிலும் காணப்படும். இந்தப் பிடாரி இளங் காளியம்மன், கடும்பாடியம்மன், முப்பாத்தம்மன், எட்டியம்மன், செல்லியம்மன், முண்டகன்னியம்மன், பொன்னியம்மன் என்று ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு பெயரில் மக்கள் வழிபாட்டிற்கு உரியவள் ஆகின்றாள். இதன் அடிப்படையில் திருச்செந்துறை யில் இளம் புலியம்மன் என்ற பெயரில் விளங்கும் பிடாரியை நோக்குவோம்.

## இளம்புலியம்மன் ஆலயம்:

இங்குப் பிடாரி இளம்புலியம்மன் ஆலயம் உள்ளது. இக்கோயில் 0.01 என்ற பரப்பளவில் அமைந்துள்ளது. இக்கோயில் 300 ஆண்டுகள் பழமையானது என்று சொல்லப்படுகிறது. ஆனால் 300 ஆண்டுகளின் பழமையைக் காணமுடியவில்லை. பின்னால் சீர்திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலில் சப்த கன்னியர்கள் சிலைகள் உள்ளன. சப்த கன்னியர்கள் வழக்கப்படி பிராமி மகேஸ்வரி, வைஷ்ணவி, கௌமாரி, வாராகி, இந்திராணி, சாமுண்டா என்ற வரிசையில் காணப்படும். ஆனால் இக்கோயிலில் பிராமி, மாகேஸ்வரி, வைஷ்ணவி, நான்காவதாக சாமுண்டாவையே இளம்புலியம்மன் என்ற பெயரில் அழைக்கின்றனர். அதன் பிறகு கௌமாரி, வாராகி, இந்திராணி சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. மேலும் இக்கோயிலில் சங்கிலி கருப்பு, காத்தவராயன், மதுரை வீரன் ஆகிய ஆண் தெய்வங்களும் உள்ளன. இக்கோயிலில் பட்டவன் என்ற இரண்டு உருவம் வாசலில் நிறுத்திவைக்கப் பட்டுள்ளது. சிவன் கோயில்களில் துவார பாலகர் சிலைகள் இருப்பதுபோல் இப்பிடாரி கோயிலில் துவார பாலகர் அம்சத்தில் பட்டவன் என்ற உருவங்கள் உள்ளன.

## திருவிழாக்கள்:

### பணம் பாக்குக் கொடுத்தல்:

இளம்புலியம்மன் நின்ற நிலை. நான்கு கைகளுடன் காட்சி அளிக்கின்றாள். வலது மேல் கீழ் கரங்களில் முறையே தமருகமும் திரிசூலமும் தாங்கியும், இடது மேல் கீழ் கரங்களில் முறையே பாசமும் கபாலமும் தாங்கியும் காணப்படுகின்றது.

இப்பிடாரிக்கு ஆண்டுதோறும் சித்திரை மாதம் விழா நடத்தப் படுகின்றது. இக்கோயிலில் விழாவின்போது காப்புக் கட்டும்

துவக்க நாளன்று கோயிலில் பணிபுரியும் வேலையாட்களாகிய பூசாரி, காவல்காரர், மேளக்காரர், வண்ணான், நடனமாடும் தாசி, பறையன், பள்ளன் ஆகிய அனைவருக்கும் பணம், வெற்றிலைப் பாக்குக் கொடுத்துத் திருவிழாச் செய்தியை அறிவிப்பது வழக்கம். இம்முறைக்குப் பணம் பாக்குக் கொடுத்தல் என்று பெயர்.

முதல் நாள் கொடி ஏற்றத்திற்குப் பின்பு கடைசி மூன்று நாட்கள் மட்டும்தான் விழா நடைபெறும். எட்டாம் நாள் எல்லைச் சட்டி உடைத்தல், ஒன்பதாம் நாள் தேர், பத்தாம் நாள் மஞ்சப்பிடாரி என்ற விழாக்கள் நடைபெறும்.

**எல்லைச்சட்டி உடைத்தல்:**

இக்கோயிலுக்கு மூன்று எல்லைக்கல் உண்டு. எட்டாம் நாள் இந்த மூன்று எல்லைக் கல்லுக்கும் சட்டி உடைத்தல் என்ற பெயரில் இரண்டு எல்லைக்கல்லில் ஆட்டை அறுத்து, புதுச் சட்டியில் சோற்றைக் கொட்டி ஆட்டின் இரத்தத்தை சோறு உள்ள சட்டியில் பிடித்து அந்த எல்லைக்கல்லின் முன்பு வைத்து சூடம் ஏற்றப்படுகின்றது. மூன்றாவது எல்லைக்கல்லில் ஆட்டை மட்டும் அறுப்பது வழக்கம். இதற்கு எட்டாம் எல்லைச்சட்டி உடைத்தல் என்று பெயர்.

இவ்வாறு கிராம தேவதைகளில் கோயில்களில் உயிர் பலி கொடுக்கும் வழக்கமானது 15ம் நூற்றாண்டிலேயே இருந்து வந்ததற்குச் சான்று உண்டு.

**மேலைப்பனையூர் கல்வெட்டு ஒன்று:**

"கோனாட்டு நாச்சியார் திருநாளுக்கு நம்முடைய ஊரில் இடையன் பொன்னன் கோன் எழும்பன் நம்முடைய திருநாளுக்கு வண்டியிலேயே கிடாய்க்குட்டி ஏற்றிவந்து சந்திகள்தோறும் கிடாய் வெட்டினது கொண்டு இரண்டு ஊராரும் இருந்து இவனுக்குக்

கலங்காத கண்டக்கோன் என்ற பட்டமுங் கொடுத்து, கோயிலிலே ஒடுக்கும் கொடுத்து, இந்தப் பட்டமும், இந்த ஒடுக்கமும் இவனே அனுபவித்துப் போதல் கடவனாகவும், மேலும் திருநாளுக்குக் கிடாய்க் குட்டியும் இடுவானாகவும்'' என்று வாசகம் வருகின்றது.

சந்திகள் தோறும் கிடாய் வெட்டினது என்பது, எல்லைக்கல் சந்திகள் கூடும் இடங்களில்தான் காணப்படும். எனவே எல்லைக் கல் உள்ள இடத்தில் கிடாய் வெட்டினமையையே குறிக்கும். திருநாளுக்குக் கிடாய்க் குட்டியும் இடுவானாகவும் என்ற அடியிலிருந்து திருவிழாக் காலங்களில் உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கம் அந்த நாளிலேயே இருந்து வந்திருக்கின்றது. இம்முறை இன்றும் எல்லா பிடாரி கோயில்களிலும் நடைபெற்று வருகின்றது.

### பறையும் பூசை:

மேற்கூறிய எல்லைச்சட்டி உடைத்தல் என்ற விழா முடிந்த பின் பிடாரி இளம்புலியம்மனை சப்பரத்தின் மீது வைத்து ஏழு மணி அளவில் பிடாரி மந்தையில் கொண்டு போய் வைப்பார்கள். அப்போது பறையர்கள் சேர்ந்து சோறு சமைத்து படைப்பர். ஆடு வெட்டி பறையர்களுக்கென்று ஒரு தனி சங்கம் உண்டு. அச்சங்கத்தின் தலைவராக விளங்கும் ஒருவர் வெட்டிய ஆட்டின் குடலைப் பூணூல் போல் மார்பில் துணிந்து கொள்வார். பறையர்கள் செய்த சோறு, வெட்டிய ஆடு முதலியவற்றைப் பிடாரி எதிரில் வைத்து படைப்பது மரபு. பின்பு பிடாரிகோயில் பண்டாரம் தேங்காய் உடைத்து சூடம் கொளுத்துவார். இதற்குப் பறையன் பூசை என்று பெயர். இந்தப் பூசை இரவு பத்து அல்லது 11 மணியளவில் நடைபெறும். பறையர்களின் பூசை முடிந்தவுடன் பிடாரி மந்தையினின்று பிடாரி இளம்புலியம்மனைத் தூக்கிக் கொண்டு வந்து திருச்செந்துறை சந்திரசேகர சுவாமி ஆலயத்தின்

முன்பு கொண்டு வந்து நிறுத்தி சூடம் ஏற்றி வழிபட்ட பிறகு பிடாரி பவனி செல்வாள்.

### மஞ்சப்பிடாரி அல்லது குடிபுகும் நாள்:

ஒன்பதாம் நாள் தேர்த் திருவிழா முடிந்த உடன் பத்தாம் நாள் மஞ்சப்பிடாரி என்ற விழா நடைபெறும். அன்று ஒவ்வொரு வீட்டிலும் மஞ்சள் நீர் கரைத்து வைத்திருப்பார்கள். அந்த நீரை உறவினர்களுக்குள் ஒருவர் மீது ஒருவர் தெளிந்துக் கொள்வர். இந்த பத்தாம் நாளன்று இளம்புலி அம்மன் புறப்பாடு உண்டு. அந்தப் பத்தாம் நாளன்று அம்மன் புறப்பாடு முடிந்து கோயிலுக்குள் செல்வதற்குக் குடிப்புகும் நாள் என்று பெயர்.

### பரிவட்டம்:

இவ்வாறு அம்மன் குடிபுகும் நாளன்று, இவ்வூரிலுள்ள சவுக்குப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து பண்டாரம் தேவதாசிப் பெண்ணுக்குப் பரிவட்டம் கட்டுவார். மூன்று முறை இளம்புலி யம்மனைச் சுற்றிவிட்டு, அம்மன் கோயிலினுள் குடிப்புகும் வரை அந்த தேவதாசிப் பெண் ஆடிக்கொண்டு வருவதுண்டு. கோயிலினுள் இளம்புலியம்மன் புகுவதற்கு முன் மூன்று முறை கோயிலைச் சுற்றி இறக்குவது வழக்கம். உடன் தேவதாசிப் பெண்ணும் சுற்றி வருவாள். இப்போதும் இப்பிடாரிக் கோயிலுக்கு தேவதாசிப் பெண் பரிவட்டம் கட்டிக் கொள்ளும் வழக்கம் இருந்து வருகின்றது. இந்த தேவதாசி பத்தாம் நாள் மஞ்சப் பிடாரி அன்று மட்டும்தான் பரிவட்டம் கட்டிக்கொண்டு நடனம் ஆடுவாள். இந்த தேவதாசிக்கு அன்று நெல்லும், பணமும் கொடுக்கப்படு கின்றது.

## இளம்புலியம்மன் மீது பாடல்:

இங்குள்ள பாமர மக்களிடம் பிடாரி இளம்புலியம்மன் பற்றிய அழகான பாடல்கள் வாழ்கின்றன. இப்பாடல்களை இங்குள்ள மக்கள் சித்திரைத் திருவிழாவின்போது பாடுவர் போலும். இப் பாடலை கீழ்வருமாறு காண்போம்.

"ஆலங்களத்தினிலே — இளம்புலி
ஆமிவந்து நிற்கையிலே
பாலாறு ஓடுதடி — நம்ம
பயிரெல்லாம் செழிக்குதடி"

"எல்லைக்களத்தினிலே — இளம்புலி
ஆமிவந்து குந்தையிலே
கொல்லை வெளயுதடி — நம்ம
குடும்பம் செழிக்குதடி"

"ஆடுபலி குடுத்து — உனக்கு
ஆனதெல்லாம் படச்சிடுவோம்
வீடுவாசல் காத்திடம்மா — குடும்பம்
வெளங்க அருள் குடும்மா"

"தேருமேலே ஆமி ஏறி — ஊரு
தேசமெல்லாம் வாராளாம்
ஊரு கோலம் வாராளாம் — ஆமிக்கு
ஊரெல்லாம் தோரணமாம்"

"பல்லக்கு மேலேறி — இளம்புலி ஆமி
பாதையெல்லாம் வாராளாம்
எல்லைக்கு எல்லை நின்று — ஆமிக்கு
ஒத்தப்பாட்டு பாடுங்கடி

**மற்றொரு பாடல்:**

**''ஏழு கன்னிக்கு அதிபதியாய் – திருச்செந்துறையில்**
**இளம்புலி அம்மனாய் வந்தவள் நீ**
**காவேரி தென்புறம் ஆலங்களத்தினில்**
**அருள்காவு கொண்டவள் நீ**
**சித்திரை மாதத்தில் தேரின் மேல் வந்து**
**சிறந்த பூசை வாங்குபவள் – நீ**
**அன்பர்களை காக்கவும் துஷ்டர்களை அடக்கவும்**
**வீதிவலம் வருபவள் நீ**
**சங்கிலி கருப்பு, காத்தவராயன், மருதை வீரனொடு**
**மகிழ்ந்து பூசை வாங்குபவள் நீ**
**அன்னை இளம்புலி அழகான திருச்செந்துறை அமர்ந்து**
**எந்நாளுமே காவல் புரிந்திருவாய் நீ''**

மேற்கூறிய பாடல்களை நோக்கும்போது இளம்புலி அம்மன் திருவிழாவின்போது அவளுக்குச் செய்கின்ற சடங்கில், மக்கள் உணர்ச்சிகள் எல்லாம் பிரதிபலிக்கின்றன.

**ஒரே பிடாரி பல பெயர்களில்:**

பிடாரியின் பெயர்கள் ஊருக்கு ஊர் மாறுபடுகின்றன. ஒரே பிடாரி மக்களால் பல பெயர்களில் வணங்கப்படுகிறாள். அந்தந்த ஊர்களில் பிடாரிக்குச் செய்கின்ற விழா முறைகளும் மாறுபடலாம். திருச்செந்துறை கிராமத்தை எடுத்துக் கொண்டால் அதன் அருகில் உள்ள கிராமங்களில் பிடாரியின் பெயர்கள் வேறுபடுகின்றன. திருச்செந்துறைக்கு கிழக்கே உள்ள அந்த நல்லூரில் படலாயி அம்மன், திருச்செந்துறைக்கு மேற்கே உள்ள அம்மங்கடியில் சொக்காயி அம்மன், அல்லூர் இளங்குறிச்சி அம்மன், மேற்குடி மதுர காளியம்மன், பெரிய கருப்பூர், சிறிய கருப்பூர் ஆகிய இடங்களில் சாமாயி (சாமுண்டி) அம்மன், நங்கவரம் சாத்தாயி

அம்மன், இவ்வாறு ஊருக்கு ஊர் பிடாரி ஒவ்வொரு பெயரால் மக்களால் வணங்கப்படுகின்றாள். இந்த அம்மன்களெல்லாம் ஒரு காலத்தில் வாழ்ந்த சகோதரிகள் என்ற கருத்து உடையவர் களும் உண்டு.

## சங்கிலி கருப்பு:

திருச்செந்துறை இளம்புலியம்மன் ஆலயத்தில் சங்கிலி கருப்பு என்ற ஆண் தெய்வம் உள்ளது. சங்கிலி கருப்பனை இளம்புலி மகனாய்க் கருதி இங்குள்ள மக்கள் வழிபடுகின்றனர். இவ்வுண்மை அங்கு வாழும் பாமர மக்களிடம் வழங்கி வரும் பாடல் மூலம் தெரிய வருகின்றது.

**''இளம்புலி மகனே சங்கிலி வாடா**
**குட்டி குடங்கையிலே கொடுக மணி கையிலே**
**சக்தி குடங்கை சர்வ சக்தி முன் கையிலே**
**குட்டி அலறுது கொடுகமணி கூப்பிடுது**
**சட்டி அலறுது சட்டி ரத்தம் கூப்பிடுது**
**அறுத்து குடிச்ச ரத்தம் அய்யாறு போகுது**
**பிடிச்சு குடிச்ச ரத்தம் பொய்யாறு போகுது**
**அறுத்து குடிச்ச ரத்தம் போதாமே**
**சட்டி ரத்தம் கேட்குது**
**வாடா இளம்புலி மகனே சங்கிலி கருப்பா''**

இப்பாடல் மூலம் சங்கிலி கருப்பனை இளம்புலி அம்மன் மகனாகக் கருதி வழிபடுகின்றமைத் தெரிகின்றது. இந்தக் கருப் பண்ணரும் ஒவ்வொரு ஊரில் ஒவ்வொரு பெயரால் வழங்கப் படுகின்றார். திருச்செந்துறையில் சங்கிலி கருப்பு என்ற பெயரால் வணங்கப்படுவதுபோல் அந்தநல்லூர். அம்மங்குடியில் மலையாள கருப்பு என்ற பெயரிலும், அல்லூரில் புங்கடி கருப்பு என்ற பெயரிலும்

இன்னும் இளந்தடிக் கருப்பு, பனையடிக் கருப்பு, உதிரக்கருப்பு, ஒட்டி கருப்பு என்னும் பெயராலும் வணங்கப்படுகின்றது.

**காத்தவராயன்:**

"உலகிலே மக்கள் பல குடிகளாகப் பிரிந்து பல பகுதி களிலே வாழ்ந்தார்கள். அவ்வப்போது அக்குடிகளிலே ஒப்பற்றத் தலைவர்கள் தோன்றி மனித வாழ்க்கையைத் தெய்வீக வாழ்க்கை யாக உணர்த்தினார்கள். அத்தலைவர்களைத் தங்கள் வாழ்வை மலர வைத்த தெய்வங்களாகவே அக்குடிமக்கள் கருதினர். அவ்வாறு இந்திரன், கண்ணன், ராமர், புத்தர், மகாவீரர் போன்ற தெய்வங்கள் நம்மிடையே தோன்றி உள்ளார்கள். இத்தெய்வங்கள் எல்லாம் தோன்றிய இடங்களைப் புண்ணிய பூமியாகக் கருதி அங்கு ஆலயங்களை மக்கள் எழுப்பினார்கள். இத்தெய்வத் தோற்றங் களில் உள்ள சம்பவங்கள் புராணங்களாகவும், இதிகாசங்களாகவும் பரிணமித்தன."

மேற்கூறிய கருத்துக்கு ஒப்பவே காத்தவராயனும் சாதாரண மனித நிலையிலிருந்து மக்களால் தெய்வ நிலைக்கு உயர்த்தப் பட்டவன்.

கதைப்பொதி பாடல்கள் தமிழில் ஏராளம் உள்ளன. இக்கதைப் பொதிப் பாடல்கள் இதிகாசக் கருத்துக்களைக் கொண்டவை. வரலாற்று நிகழ்ச்சியை தன்னகத்து அடக்கியவை. அவற்றுள் கதைப் பொதி பாடல்கள் எண்ணற்றவை சிதைந்தன. ஒரு சில கிடைத்தன. எஞ்சியவற்றுள் காத்தவராயன் கதையும் ஒன்று.

ஆரியமாலை என்ற பிராமணப் பெண்ணை பரிமளம் என்ற காத்தவராயன் சிறை எடுத்துப்போய் விட்டதாகவும் அவனைப் பிடித்துத் தண்டிக்க வேண்டும் எனவும் பிராமணர்கள் அரசனிடம்

முறையிடுகின்றனர். பரிமளம் சேப்பிள்ளையார் என்ற நாடுகாவல் அதிகாரியின் வளர்ப்பு மகன். அரசன் பரிமளத்தைப் பிடித்து வந்து கழுவேற்றி கொன்றுவிடக் கட்டளையிடுகின்றான். நாடு முழுவதும் தேடியும் கிடைக்கவில்லை. நாட்டிற்கு வெளியே அகப்படுகின்றான். தந்தை சொல்லைக் கேட்டு அவனுடன் சோழநாடு செல்கின்றான்.

சோழ மன்னன் ஏன் பெரும் பாவம் செய்தாய் என்று கேட்கின்றான். பிராமணர் குலப் பெண்ணை சிறை எடுத்தது பெரும் பாவமே என்று கூறுகிறான் அரசன்.

"இப்போது தமிழரின் சமூகத்தை துண்டாடி உயர்வு தாழ்வுக்கு கற்பித்து குலவேறுபாடு அனைத்தும் சோழர் காலத்திலேயே வேர் ஊன்றிவிட்டன" என்ற திரு. கே.கே. பிள்ளை அவர்களின் கருத்து இங்கு சிந்திக்கத்தக்கது.

காத்தவராயனோ தான் செய்தது தவறு என்றால் மக்கள் வணங்கும் தேவரும் தெய்வங்களும் காதலித்து மணம் செய்து கொண்டவர்களே என்றும், ஆகவே அவர்களும் தவறு செய்தவர்களே என்றும் மன்னனிடம் வாதாடுகின்றான்.

"பார்வதியார் தானிருக்க பரமசிவனாரும்
சடையில் ஒரு கன்னிதனை ஒளித்தமை வீழலையோ"

"உலகமளந்ததொரு உத்தமனும் மாயவனும்
நலமுள்ள ருக்மணியரும் நன்றாய் அறிந்திருக்க
தேசமனிதாய் சிறக்கவே கொண்டருளி
சத்திய பாமாவைத் தேடி அலையலையோ"

இவ்வாறு கூறக்கேட்ட அரசனும் மனம் மாறி அவனுக்குத் தண்டனை அளிக்காது விட்டுவிடுகின்றான். ஆனால் அவனோ

தன்னை கழுவு ஏற்றுமாறு வேண்டுகிறான். இவன் பிறப்பினால் பறையன் என்பதை

"பின்புத்திதான் இவனுக்கும் பறச்சி
பெற்ற பிள்ளையவன்
நாம் பெற்ற பிள்ளையென்றால்
நம்மைப் போல் ஆகாதோ"

என இவன் வளர்ப்புத்தாய் கூறுவதினின்று அறியலாம்.

பறையன் (காத்தவராயன்) பார்ப்பனப் பெண்ணை சிறை எடுத்தான். எனவே சாதி சமயங்களில் ஊறி திளைத்தவர்கள் இவனை கழுவேற்றிக் கொன்றுவிட்டனர். பிறகு இவன் மக்களால் வணங்கப்பட்டு தெய்வ நிலையை அடைந்துவிட்டான். இன்றும் மக்கள் வணங்கும் கிராம தெய்வங்களில் காத்தவராயனும் ஒன்றே. திருச்செந்துறை இளம்புலியம்மன் ஆலயத்திலும் காத்தவராயன் சிலை வைக்கப்பட்டு வணங்கப்படுகின்றது. ஆனால் பிடாரி கோயில்களில் வைக்கப்படும் காத்தவராயன் பரிவாரத் தெய்வ மாகவும், காவல் தெய்வமாகவும் கருதப்படுவதால் காத்தவ ராயனை வணங்குகின்றனர் மக்கள். காத்தவராயன் ஊருக்கு ஊர் வேதப் பிராமணன், காத்தலிங்கம், காத்தமல்லன், பரிமள சுவாமி என்ற பெயர்களிலும் வணங்கப்படுகின்றான். வேத பிராமணன் என்னும் பெயர் வேதத்திலே வல்ல பிராமணப் பெண்ணை சிறையெடுத்ததினால் வேத பிராமணன் என்று காரணப் பெயராய் வந்திருக்கலாம். அவ்வாறே பரிமள சுவாமி என்பதும் பரிமளம் என்ற அந்த பிராமணப் பெண்ணை சிறையெடுத்ததின் காரணமாக அப்பெயர் பெற்றிருக்கலாம்.

மதுரை வீரனும் காத்தவராயனைப் போலவே மனித நிலை யிலிருந்து மக்களால் தெய்வநிலைக்கு உயர்த்தி வணங்கப்

பட்டவன். மதுரை வீரன் மருது பாண்டியர்களின் மகள் பொம்மி என்பவளை சிறை எடுத்தான். மதுரை வீரனின் தந்தை அந்தப் புரத்தில் காவலாளியாக விளங்கினான். பொம்மி பருவம் அடைந் ததும் அந்தப்புறத்தில் ஓர் ஒதுக்குப்புறமான இடத்தில் தனியாக அமர்த்தப்பட்டாள். மதுரை வீரனின் தந்தை அந்தப் பெண்ணுக்குக் காவலாக அந்தப்புரத்தைக் காத்து வந்தார். ஒருநாள் மதுரை வீரனின் தந்தை உடல் நலமின்றி அந்தப்புரத்திற்கு காவல் இருக்கும்படி மதுரை வீரனைப் பணித்தார். மதுரை வீரனும் காவல் இருக்கின்றான். பொம்மி மதுரை வீரனின் அழகில் மயங்கிவிடுகின்றாள். இருவரும் காதல் கொள்கின்றனர். மதுரை வீரன் பொம்மியை குதிரை மீது ஏற்றிக்கொண்டு ஓடி விடுகின்றான்.

**''வீராதி வீரனே வெள்ளை மணவாளனே**
**வேத வேதாந்த சித்தனே**
**சூராதி சூரனே தொட்டிய பொம்மியை**
**துருசாய் சிறை எடுத்தவனே''**

என்னும் அடியால் அறியலாம்.

அரசன் அந்தப்புரத்தில் தன் மகளை தேடுகின்றாள்; காண வில்லை. பின்பு மதுரைவீரன் சிறையெடுத்த செய்தியை அறி கின்றான். அரசன் மதுரைவீரனின் இச்செயலைக் கண்டு கோபம் அடைந்து மதுரைவீரனின் மறுகாலையும் மாறுகையையும் மதுரை யிலே வாங்கும்படி (வெட்டும்படி) தன் பணியாட்களுக்குக் கட்டளையிடுகின்றான். மறுகால், மாறுகை என்பது இடது காலை வாங்கினால் வலது கையையும், வலக்காலை வெட்டினால் இடது கையையும் வெட்டுதல் வேண்டும். அரசன் கட்டளைப் படியே மாறுகாலும், மாறுகையும் வாங்கப்பட்டது. அதனால் மதுரை வீரன் இறந்துவிட்டான். இவனுடைய பெயர் வீரன். பின்பு மதுரை யிலே காலும், கையும் வெட்டப்பட்டதின் காரணமாக மதுரை

வீரன் என்று பெயர் பெற்றான். சாதாரண மனிதனாகிய மதுரை வீரன் மக்களால் வணங்கப்படும் தெய்வநிலைக்கு உயர்த்தப்பட்டான். எனவே மக்கள் வழிபடும் சிறு தெய்வங்களில் மதுரை வீரனும் ஒருவன். மதுரை வீரன் பரிவார தெய்வமாகவும், ஒரு காவல் தெய்வமாகவும் கருதப்படுவதால் திருச்செந்துறை இளம்புலி யம்மன் ஆலயத்திலும் மதுரைவீரன் சிலை வைக்கப்பட்டுள்ளது. மதுரை வீரனும் பல பெயர்களில் வணங்கப்படுகின்றான். பதி னெட்டாம்படி, மொட்டை கோபுரத்து ஐயா, ஒட்டுத்திண்ணை காவலாளி, சப்பாணி என்னும் பெயர்களால் அழைக்கப்படுகின்றான்.

ஒட்டுத்திண்ணை காவலாளி என்பது மதுரைவீரன் அந்தப் புரத்திற்கு காவலாளியாக இருந்ததைக் குறிக்கலாம். இவ்வாறு கிராம தேவதைகளின் வழிபாடு தமிழ்நாட்டில் மலிந்து காணப் படுகின்றது. பொதுவாக கிராம தேவதை வழிபாடு நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்தரே அன்றி மூட நம்பிக்கையின் அடிப்படை யில் எழவில்லை எனலாம். திருச்செந்துறையில் இளம்புலியம்மன் கோயிலைத் தவிர மாரியம்மன் என்ற ஒரு சிறிய கோயில் உள்ளது. இக்கோயில் பள்ளர்களுடையது. பள்ளர்கள் தங்களுக்கென்று ஒரு பிடாரிக்கோலை நிர்மாணித்து மாரியம்மன் என்ற பெயரால் வணங்குகின்றனர். ஆண்டுதோறும் பள்ளர்கள் சேர்ந்து ஒரு சங்கம் அமைத்துப் பணம் சேகரித்து மாரியம்மனுக்கு விழா நடத்து கின்றனர். தினமும் காலை (ஒருவேளை) மட்டும் பண்டாரத்தை வைத்து பூசை செய்கின்றனர். இவ்வாறே பறையர்களுக்கும் தனிக் கோயில் உண்டு.

திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கோயில்களில் குடிகொண்டிருக்கும் முக்கிய தெய்வங்களை வைத்துப் பார்க்கும்போது சிவன் கோயில்களை விட விஷ்ணு கோவில்கள் குறைவாகவே உள்ளன. கிராமத்துத் தெய்வங்களான மாரியம்மன், செல்லியம்மன் போன்று பிடாரிக் கோயில்கள் மிகுதியாக உள்ளன. திருச்சி

மாவட்டம் தஞ்சைக்கு அடுத்தபடியாக கோயில்கள் மிகுதியாக உள்ள இடம். சிவன் கோயில்கள் 384, விஷ்ணு கோயில்கள் 273 முருகன் கோயில்கள் 39 கிராமத் தெய்வங்கள் 253 கோயில் கள் உள்ளன. மக்கள் உறைகின்ற இடங்களிளெல்லாம் ஒரு சிவன் கோயில் இருந்தால், ஒரு விஷ்ணு கோயிலும் இருக்கும். விஷ்ணுவும் சிவனும் குடிகொண்டுள்ள இடங்களிளெல்லாம் சிறு தேவதைகளாகிய பிடாரிக் கோயிலும் இருக்கும் என்பதில் ஐய மில்லை. திருச்சி மாவட்டத்துச் திருச்செந்துறையில் மேற்கூறிய கோயில்கள் அனைத்தும் இடம்பெறுகின்றன.

★★★



கோயில் - கருவறை

ப — ௭



நாகர விமானம்



இளங்காளி அம்மன்



ஆடவல்லான்



சிவகாமியம்மன்



பைரவர்



சோமாஸ்கந்தர்



சோமாஸ்கந்தர் அம்மன்

## துறை வெளியீடுகள் — Departmental Publications

| வ. எண். | நூலின் தலைப்புகள் | விலை |
|---|---|---|
| 1. | தருமபுரி கல்வெட்டுகள் (முதல் தொகுதி) | 9.50 |
| 2. | திருத்துறைப்பூண்டி கல்வெட்டுகள் | 15.00 |
| 3. | கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் (நான்காம் தொகுதி) | 7.50 |
| 4. | கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் (ஐந்தாம் தொகுதி) | 7.50 |
| 5. | நன்னிலம் கல்வெட்டுகள் (முதல் தொகுதி) | 15.00 |
| 6. | நன்னிலம் கல்வெட்டுகள் (இரண்டாம் தொகுதி) | 15.00 |
| 7. | நன்னிலம் கல்வெட்டுகள் (மூன்றாம் தொகுதி) | 15.00 |
| 8. | தக்கை இராமாயணம் (முதல் தொகுதி) | 36.00 |
| 9. | திருக்கோடிகா கல்வெட்டுகள் | 27.00 |
| 10. | தமிழ்க் கீர்த்தனைகள் | 37.00 |
| 11. | திருக்குறள் பழைய உரை | 43.50 |
| 12. | குருபரம்பரை புராணம் (இரண்டாம் தொகுதி) | 60.00 |
| 13. | திருவீழிமிழலை கல்வெட்டுகள் | 116.00 |
| 14. | விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்ட வரலாறு | 100.00 |
| 15. | திருமலை நாயக்கர் செப்பேடுகள் | 52.00 |
| 16. | நெல்லை மாவட்டக் கையேடு | 27.00 |
| 17. | பெருமுக்கல் கல்வெட்டுகள் | 48.00 |
| 18. | தொல்லியல் நோக்கில் தமிழகம் | 80.00 |
| 19. | தாமரைப்பாக்கம் கல்வெட்டுகள் | 30.00 |
| 20. | வரலாறும் கலையும் | 30.00 |
| 21. | கல்வெட்டு காலாண்டிதழ் 59 | 2.00 |
| 22. | கல்வெட்டு காலாண்டிதழ் 60 - 61 | 4.00 |
| 23. | கல்வெட்டு காலாண்டிதழ் 62, 63, 64 (தனிப் பிரதி) | 5.00 |
| 24. | ஆய்வில் பூத்த மலர்கள் | 90.00 |
| 25. | தமிழர் நாகரீகம் | 221.00 |
| 26. | திருமலை நாயக்கர் அரண்மனை துணை மடல் | 5.00 |
| 27. | Padavedu Excavations | 22.00 |
| 28. | Thiruthani Velancheri Copper Plates | 30.00 |
| 29. | Studies in Ancient Township of Pudukottai | 80.00 |
| 30. | Collected Papers by R. Thirumalai | 200.00 |
| 31. | Collected Papers by Natana. Kasinathan | 50.00 |
| 32. | Thirukkoyilur Excavation | 134.00 |

| வ. எண். | நூலின் தலைப்புகள் | விலை |
| --- | --- | --- |
| 33. | Metropolis of Medieval Cholas | 1.50 |
| 34. | Tamilnadu Archaeology Perspectives in English | 44.00 |
| 35. | New light on Tamil Art & Culture | 15.00 |
| 36. | Excavation at Mangudi | 76.00 |
| 37. | Excavation at Perur | 64.00 |
| 38. | திருவலஞ்சுழி கல்வெட்டுக்கள் | 96.00 |
| 39. | திருவாரூர் மாவட்டத் தொல்லியல் வாலாறு | 155.00 |
| 40. | விருதுநகர் மாவட்ட வரலாறு | 128.00 |
| 41. | இராமலிங்கவிலாச அகழ்வைப்பகக் கையேடு | 3.00 |
| 42. | The Pandian Townships Part - I | 521.00 |
| 43. | The Pandian Townships Part - II | 533.00 |
| 44. | Tarangampadi (Tranqubar) Excavation and Conservation Report | 31.00 |
| 45. | Excavations of Archaeological Sites in Tamilnadu (1969-95) | 66.00 |
| 46. | தமிழகக் கோயிற் கலைகள் | 17.00 |
| 47. | Tarangampadi - R. Nagasamy | 17.00 |
| | **புதிய வெளியீடுகள் – New Arrivals** | |
| 1. | பாபநாசம் கல்வெட்டுகள் – தொகுதி ஐ ஐஐ | 173.00 |
| 2. | Excavations of Archaeological Sites in Tamil Nadu | 66.00 |
| 3. | தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் – 2004 | 136.00 |
| 4. | ஜம்பை ஓர் ஆய்வு 30.00 | |
| 5. | தமிழ்நாட்டுச் செப்பேடுகள் – தொகுதி I | 52.00 |
| 6. | Alagankulam - An Ancient Roman Port City of Tamil Nadu | 94.00 |
| 7. | கோவை மாவட்டத் தொல்லியல் கையேடு | 41.00 |
| 8. | தரங்கம்பாடி ஓலை ஆவணங்கள் | 28.00 |
| 9. | தஞ்சாவூர் வட்டக் கல்வெட்டுகள் | 54.00 |
| 10. | Rock Art of Tamil Nadu - T.S. Sridhar | 53.00 |
| 11. | Report of Conservation of Monuments | 93.00 |
| 12. | தமிழகத் தொன்மைச் சின்னங்கள் | 53.00 |
| 13. | ஆண்டிப்பட்டி அகழாய்வு | 41.00 |
| 14. | Modur Excavation Report | 40.00 |

